ஞாயிறு

கலையாக்கங் கருதிய வெளியீடு

ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
எங்கொலிநீர் ஞாலத் திருள்கடியும்—ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரோன் றேனையது
தன்னே ரிலாத தமிழ்.

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

தொகுதி 1

ஆண்டுக் கையொப்பம்
ரூபாய் 4.

தனிக் கதிர்
அணா 12.

யாழ்ப்பாணக் கலாநிலையம்

1933

யாழ்ப்பாணக் கலா நிலையம்

(கலை யாக்கங் கருதிய கழகம்)

நோக்கங்கள்

1. இலக்கியம், ஓவியம், நாகரிகம், சரிதம், சமயம், தத்துவஞானம், காவியம், பௌதிக சாத்திரம் என்னும் இவற்றில் இந்தியாவும் இலங்கையும் அடைந்த பேறுகளை ஆராய்ந்தறிதல்;
2. அவற்றை இக்கால ஆராய்ச்சியறிவின் முறையில் விளக்குதல்;
3. கலைகளின் புத்துயிர்ப்புக்காகவும், நாட்டின் நோக்கங்கள் கைகூடுவதற்காகவும் முயலுதல்.

அங்கத்தினர்

சிறப்புவகை, பொதுவகையென அங்கத்தினர் இருதிறனவர்;

பொதுவகை அங்கத்தினர்

நாட்டின் கலையாக்கத்தில் ஊக்கமுள்ளார் யாவரும் இந்நிலையத்தின் அங்கத்தினராதற் குரியர். தமிழிலும் ஆங்கிலத்திலும் ஓரளவிற்குக் கல்வியறிவுடையராய் இருத்தல் இன்றியமையாதது. ஒருமொழியறிவும் புறனடைப் பான்மையில் ஏற்கப்படும்.

சிறப்புவகை அங்கத்தினர்

கலையாக்கத்திற்கு உதவிய கல்வியாளர் சிறப்புவகை அங்கத்தினராய்த் தேர்தற்குரியர்.

நம் தமிழ்க் கலைகளின் வளர்ச்சியில் கருத்துடையாரெல்லாம் இந்நிலையத்தின் அங்கத்தினர்களாகச் சேர்ந்து, இந் நன்முயற்சிகளைப் பெருகச் செய்வார்களென்று நம்புகின்றோம்.

உள்ளுறை

	பக்கங்கள்.
ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவுருவத்தைப்பற்றிய குறிப்பு	1
ஞாயிறு வாழ்த்துகள்	3
தோற்றுவாய்	9
தமிழ் இலக்கியத்தில் பருவ வருணனை	14
வங்கத்துதித்த செங்கதிர்வேந்தர் — சுவாமி விபுலாநந்தர்	17
சகுந்தலை வெண்பா — திரு. சு. நடேசபிள்ளை, பி. ஏ., பி. எல்.	21
பெருங்காப்பிய ஆராய்ச்சி — பிரமஸ்ரீ. வை. இராமசாமிசர்மா	24
"தொண்மை" என்னும் சொல் வரலாறு — சுவாமி ஞானப்பிரகாசர்	30
பரஞ்சோதியாரின் பாடற்றிறம் — திரு சாமி வேலாயுதம்பிள்ளை, பி. ஏ.	34
பாரவி என்னும் வடமொழிப் புலவர் — திரு கு. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை, பி. ஏ.	42
மணியனைய தமிழ்ச்சொற்கள் — நவாலியூர் இளமுருகனார்	46
தொல்காப்பியம் எழுத்ததிகாரம் — வித்துவான் ந. சுப்பையாபிள்ளை	49
அன்பினில் இன்பு — வித்துவான் சி. கணேசையர்	52

பக்கங்கள்.

சாங்கிய தத்துவ ஆராய்ச்சி — 57
திருக்கோணமலை க. விசுவலிங்கம்

தமிழ்கத்துத் தருக்கநூல் வளர்ச்சி — 61
திரு போ. கைலாசபதி, பி. எஸ்சி.

ஆரியச்சக்கரவர்த்திகள் — 65
திரு வ. குமாரசுவாமி, பி. ஏ.

முருகன் வரலாறு — 69
திரு பிரான்சிஸ் கிங்ஸ்பரி, பி. ஏ.

இதழ் ஆசிரியர் குறிப்புகள் — 73

கலாநிலைய இரண்டாம் ஆண்டுவிழா — 74

வாழ்த்துப்பாக்கள் — 76

மதிப்புரை — 77

சித்திரப்படம்.

சுந்தரர் — முன்பக்கம்

சுந்தரமூர்த்தி சுவாமிகள்

ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவுருவத்தைப் பற்றிய குறிப்பு

இலங்கையின் மத்தியபாகத்திலுள்ள அடர்ந்த காட்டினிடையிற் போலன்னருவா என்ற புராதன நகரத்தின் சிற்ப விசித்திரச் சின்னங்கள் காணப்படுகின்றன. ஓர் அழகான சிவாலயத்தின் கருப்பக்கிரகமும் அருத்தமண்டபமும் ஆண்டுள்ளன. இவ்வாலயம் ஏறக்குறைய எண்ணூறுண்டுகளுக்கு முன் தஞ்சைச் சோழ அரசன் இராசராசனாற் கட்டப்பட்டதென்று ஆராய்ச்சியாளர் கூறுப. இவ்வாலயத்திற் காணப்பட்ட சில உருவச்சிலைகள் இப்பொழுது கொழும்பு நகரத்திலுள்ள பொருட்காட்சிச் சாலையில் வைக்கப்பட்டுள்ளன. இச்சிலைகளுள் ஒன்று சுந்தரமூர்த்திநாயனாரது திருவுருவமாகும். பஞ்சலோகத்தாற் செய்யப்பட்ட இவ்வுருவச்சிலையின் புகைப்படம் ஈண்டுக் காட்டப்பட்டிருக்கிறது. இச்சிலையின் சுந்தரவடிவத்தைக் காண்போர் இஃதோர் அற்புதமான சிற்பமென்று வியந்து போற்றுவர். சுந்தரமூர்த்திநாயனாரை இறைவன் தடுத்தாட்கொண்டு திருவெண்ணெய் நல்லூர் ஆலயத்தில் அவருக்குக் காட்சியளித்தபோது ∴ அவர் "பித்தா பிறை சூடி" எனத் தொடங்கித் திருப்பதிகம் பாடிய அமயத்தில் அவரிடம் வாய்ந்த திருக்கோலப்பொலிவை இச்சிலை ஒருவாறு அமைத்துக் காட்டுகிறதென்று கூறலாம். வியப்பும் பரவசமும் கலந்த உள்ளநிலை தேகம் முற்றிலும் செறிந்து, முகத்திலும் கையெடுத்துநின்ற கோலத்திலும் சிறந்து விளங்குவதை நோக்குக. பேரானந்தப் பரவசநிலையைப் பெரியபுராணமுடையார் கூறும் பாசுரமொன்று பல தமிழ்மக்களது மனதிற் பதிந்துள்ளது.

"ஐந்துபே ரறிவுங் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்க ளுன்றும்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே யாக

இந்துவாழ் சடைய ஞடுமா னந்த
எல்லேயிற் றனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துட் டிளேத்து
மாறிலா மகிழ்ச்சியின் மகிழ்ந்தார்''

இத்திருவுள்ளக்கிடக்கையைச் சிற்பத்திற் றீட்டுதல் கூடுமாயின், இச்சிலேயில் அஃதமைந்திருத்தல் காணலாம். "யாழு மெழுதி" எனத் தொடங்கும் திருக்கோவைச் செய்யுளில் ஓவியக் கலேவல்லார் கோம்பர் எனக் குறிக்கப்பட்டுள்ளார். இச்சிலேயைக் கற்பித்த சிற்பியை ஒரு கொம்பரென்று கூறுதல் பொருந்தும்.

இச்சிலே தமிழ்மக்களது கலேக்கருவூலத்திற் சேமித்தற்குரிய ஒரு நிதியாகும். பலராலும் பாராட்டப்படும் யவனச் சிற்பங்களும் இதற்கிணேயாகா. உடற்கூறமைப்பில் இந்திய நாட்டுச் சிற்பங்கள் யவனச் சிற்பங்கள்போல் இயற்கைத் தோற்றம் பெறவில்லேயென்று சில ஐரோப்பியக் கலேயறிஞர் கூறுவதுண்டு. ஆனல், இச்சிலேயைக் கூர்ந்து நோக்குவார்க்கு இவ்வடிவத்தின் உறுப்புகள் அளவு முரணில்லாமற் செவ்வனே அமைந்திருத்தல் புலனுகும். ஐரோப்பியத் தலேநகரங்களிலிருக்கும் பொருட்காட்சிச் சாலேகளேத் துருவித் துருவிப் பார்த்தாலும், புற வனப்பும் அகநிலேத்தோற்றமும் ஒருங்கே அமையப்பெற்றுப் பரவச வுணர்ச்சி காட்டும் ஒரு சிலேயேனும் காண்டல் அரிது. வெண்கலச் சிலேகள் செய்வதிற் புகழ்பெற்ற சீனதேசத்திலும் இத்தகைய விக்கிரகமில்லேயென்று கூறுப. ஓவியக்கலேயிற் றுறைபோகிய உவில்லியம் ராதன்ஸ்டீன் என்ற ஆங்கில ஆசிரியர் கூறியிருப்பதை ஈண்டு மொழிபெயர்த்துத் தருகின்ரும்.

"நடராசமூர்த்தி விக்கிரகங்களிலும், பரவசமுற்ற சுந்தரமூர்த்தி சுவாமி விக்கிரகங்களிலும் காணும் நிலேச்சந்தத்தையும் வடிவப்பொலிவையும் சீனதேசத்துச் சிற்பி எவனும் விஞ்சியதில்லே''.

தமிழ்மக்களது பூர்வீகக் கலேத்திறம் புத்துயிர் பெறுக!

(சு. ந.)

மஹாமஹோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி

டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள்

ஞாயிறு

என்னும் இவ்விதழினை வாழ்த்திப் பாடியது.

எழுசீர்விருத்தம்.

மாமலி தமிழிற் பிறமொழி தம்மில்
வயங்குறு பற்பல பொருளும்
தேமலி தரவே மாந்தர்நன் குணரச்
செய்வதற் கியற்றமிழ் மடந்தை
பாமலி வுறநன் னடஞ்செயு மீழப்
பைதிரந் தன்னிடைத் தோன்றும்
ஏமலி புகழ்சேர் ஞாயிறு விளங்க
விறைவன தடிபர வுதுமே.

ஞா யி று

யாழ்ப்பாணம் பரமேசுவரக் கலாசாலைத்

தலைமைத் தமிழாசிரியர்

பிரமஸ்ரீ நவநீதகிருஷ்ண பாரதியார் அவர்கள்

பாடியது.

நேரிசையாசிரியப்பா.

செங்கதிர் ஞாயிறே! செங்கதிர் ஞாயிறே!
வெங்கதிர் பரப்பிவரு செங்கதிர் ஞாயிறே!
நீயே,
உற்றவிடத் தோர்ந்தாய்ந் துறுதுயர் களையவுங்
கற்றிலை; யிரவெலாங் காசினி காக்கிலை;
தண்ணெனப் போற்றுந் தகையிலை; நின்கீழ்
நண்ணிய தமரெலா நலியவெப் புறுத்துவை;
உள்ளக் கமலத் தொண்போ தலர்த்தலான்
தெள்ளுத் தமிழ்வரு தீஞ்சுவைத் தேறல்
அள்ளிக் குடித்தினித் தரும்பெறல் காதல்
மேவி முழக்கும் வீரமும் விளைத்திலை;
வீட்டுப் பற்றையும் வித்திலை; இனிநீ
காட்டக் காணுறாஉம் கண்களுங் காணுமே?
அகமயக் ககற்றுது புறமயக் ககற்றும்
போலிக் குணத்துட் பொருந்தினை யாதலின்,
கலாஅ நிலையக் கடல்தோய்ந் தெழுந்துமேல்
உலாவித் தண்ணிய ஒண்கதிர் பரப்பி
உள்ளும் புறமுங் கொள்ளிரு ளோட்டி
அல்லும் பகலு மகலா தளிக்கும்
செந்தமிழ் ஞாயிற்றுச் செல்வற்(கு)
எந்தவிதத் தொப்பா வியைந்தனை நீயே.

பண்டைய யாழ்ப்பாணம்

(*Ancient Jaffna*)

என்னும் ஆங்கில நூலாசிரியர்

முதலியார் செ. இராசநாயகம் அவர்கள்

(*Retired C. C. S.*)

ஞாயிறு

என்னும் இவ்விதழின் தோற்றத்தைக் குறித்து எழுதிய

களிப்புரை.

யாழ்ப்பாணக் கலாநிலையத்தாரால் சிலகாலமாகச் செய்து வரும் அரிய தமிழ்த் தொண்டானது முதிர்ந்து அறியாமையாகிய இருளைச் சீத்துப் புலர்வித்து ஒளி காலுவிக்கப் பருவ ஞாயிறு என்னும் பெயர் தாங்கிய செந்தமிழ் வெளியீடொன்றை உதிக்கச் செய்தது. சாலவும் அழகிதே!

நம் நாட்டின் மொழி உரத்தின் குறைவுகளில் இவ்வித வெளியீடின்மையும் ஒன்றாயிருந்தது. இதுபோது அக்குறை நீங்கி இளைஞர்க் கறிவுக் கிரணக் கலாபத்தை விரியச்செய்து நன்மை பயப்பதற்கு அணிமையில் வெளிவரவிருக்கும் அஞ்ஞாயிற்று முதற் கதிரில் ஒரு கட்டுரை வரையுமாறு அதன் இதழாசிரியர் கழக வமைச்சர் எமக்குப் பணித்தனர். ஆவல் மிகவுண்டு. ஆயினும், இதுபோது அமையமின்மையால் அதை விடுத்துப் பின்னொரு முறை காண்பாம்.

திருத்தமுற உருத்தெழும் அருத்தமுறு தீந்தமிழ் நிரம்பிய யாழ்ப்பாணம், பாவலரும் நாவலரும் நிறைந்து தமிழ்மொழிச் சங்கங்களைக் கொண்டிருந்தும், மொழித் தொண்டுக்குரிய இவ்வித வெளியீடுகளைத் தன்னகத்துக்கொண்டு, முன்னணியில் ஓங்கிநிற்க வீங்கு நெறி பெறாதது பெரிதும் வருந்தத்தக்க தொன்றாம். காலந் தாழ்த்தேனும் இப்போது வெளிவருவது இல்லாதொழிவதினும் மேன்மையன்றோ? இவ்வாறான வெளியீடு யாம் பலகாலம் ஆர்வமுடன் எதிர்நோக்கி யிருந்த தொன்றாம். சழக்குரையும் வழக்குரையு மின்றி மணக்குறைகொண்டு தொன்னூற் கருவூல முழுமாணிக்கத் திரளை வெளிவீசி, அறிவுலகத்தை மகிழ்விக்கும் ஞாயிறு போற்றுதும்! ஆழி எக்கர் மணலினும் பல்லாண்டு வாழிய வென்றே.

6

கொழும்பு "தினகரன்" பத்திராசிரியாக இருந்த

திருவாளர் வண்ணை - வை. இராமநாதன் அவர்கள்

எழுதிய

"ஞாயிறு" வாழ்த்து.

"உலக முவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாங்கு"

கலையுலகில் ஒளிநிலவக் "கலாநிலைய"த்தினின்றும் உதயஞ் செய்யுங் கலா "ஞாயிறே"! நின் வரவு நல்வரவாகுக! அறிவுச்சுடரை உலக அகலிடத்தே பரப்பி, பல்வேறுவகைப்பட்ட காரணங்களால் மக்கட்பரப்பினிடையே வெவ்வேறு சாயல்களுடன் காணப்படும் அஞ்ஞானவிருளை ஓட்டுவதற்கு உன்னைப்போன்ற கலைநிறை கதிரவன் இற்றைநாள்வரையும் இல்லாதிருந்தது சாலப்பெரிய இலம்பாடேயாமன்றோ? இனி நீ இவ்வுலகின் இல்லங்கள்தோறும் இனிது ஏகி, நின் இனிய அறிவுக்கதிரை இறைத்து, எம்போலியோர் மாட்டேயுள்ள அகவிருளை வீக்குவாயாக! உன்னை இயக்கும் காரணபூதர்களாக இப்போழ்து சேர்ந்துள்ள கழக ஆசிரியர் குழாத்தைக் கண்டமாத்திரத்தே நினது ஆற்றல் போற்றத்தகுந்ததாகுமென்று இறும்பூதெய்தி மகிழ்கின்றேன். வாழி! வாழி!! "ஞாயிறே" வாழி!!!

7

யாழ்ப்பாணம் தலைமைத் தமிழ் வித்தியாதரிசி

(*Chief Inspector of Tamil Schools, Jaffna.*)

பிரமஸ்ரீ தி. சதாசிவ ஐயர் அவர்கள்

வா ழ் த் து ரை.

சில வருஷங்களாகத் தமிழ்ப்பெருந்தொண்டு செய்து, தமிழ் மக்களது மனமுழுதுங் கவர்ந்து, வளர்பிறைச் சந்திரன்போல் வளர்ச்சியெய்திச் சீர்த்தி மிக்கிலங்கும் யாழ்ப்பாணக் "கலாநிலையம்" என்னுங் கழகமானது, "ஞாயிறு" எனப் பெயரியதோர் உயர் தரப் பத்திரிகை நடாத்த முற்பட்டமை அளவிலா மகிழ்விளைக் கின்றது. வலம்புரி யீன்றதென்னவே மணிமுத்தின் பெருமை தானே விளங்குமாபோல, "கலாநிலைய"த் துதிக்கும் "ஞாயிறு" எனவே அதன் சிறப்பு இத்துணையென இயம்பல் வேண்டா. காரணத்தோ டொப்புடையது காரியமென்னும் தகுதிப்பணி ஈண் டும் பொருந்து மென்பது.

மாநிலங் கையெடுத்து வணங்க உதயஞ்செய்து கண்ணொளி விளக்கிப் புறவிருள் கடிந்து விளங்கும் ஞாயிறு போலத் தமிழ் மக்களெல்லாம் உளமகிழ்ந் தேத்தத் தோற்றஞ் செய்து, அகவிரு ளகற்றி மேம்படுக இச்செந்தமிழ் "ஞாயிறு"! ஆயிரங் கரத்துப் பரி தியஞ் செல்வனே போல, எம் செந்தமிழ்ச் செல்வ "ஞாயிறு"ம் முத்தமிழ் நலங்களும் பல்கலைத் திறங்களும் தன் கரத்தேந்தித் தமி ழக மெங்குஞ் சென்றுலவி உறுபயனளிக்கு மென்பது.

ஞாயிற்றினால் உலகம் பிணியகன்று ஆரோக்கிய நல்வாழ்வுப் பயன் பெற்றுக் கொள்வது போல, தமிழகமும் இச்செந்தமிழ் "ஞாயிற்"றினால் தீமை தீர்ந்து, மதிநலமும் குணநலமும் செப னலமும் வாய்ந்து இன்பவாழ்வுப் பயனெய்து மென்க.

தமிழ் நலங் கனிந்து நூனயந் தழுவி அறிவு வளம்பெருக்கி இசைபெற வந்த இத் தமிழ் "ஞாயிற்று"க் குழவி, "பரிதிபொன் றுதயஞ் செய்து பங்கய மநேககோடி முருகெழ மலர்வித் தென்ன"த் தமிழறிஞரது முகமுட னகமலர்த்தி, மருவு முத்தமிழ் வளர்த்து, அன்னோர்தம் மடியினும் கையினும் செவியினும் சிந்தையினும் விளங்கும் ஓர் அற்புத ஞாயிருக நீடோங்கி வாழுமாறு அருள்புரிக வென்றே எல்லாம் வல்ல இறைவன் றிருவடி மலர்களை மனமொழி மெய்களால் அன்போ டிறைஞ்சுகின்றேம்!

"நவசக்தி" ஆசிரியர்

திருவாளர்

திரு. வி. கலியாணசுந்தரமுதலியாரவர்கள்

வா ழ் த் து ரை.

"ஞாயிறு" என்னும் பெயரால் ஒரு தமிழ்த்தாள் ஈழத்தினின்றும் எழுதல் கேட்டு மகிழ்வெய்துகிறேன். தற்காலத் தமிழ் அகத்துக்கு "ஞாயிறு" வேண்டற்பாலதே. பல கலைக் கதிர்களுடன் ஈழத்தமிழ் ஆழியினின்றும் தோன்றும் "ஞாயிறு" உலகை முவப்பப் பலர் புகழ்வதாகும் என்பதில் ஐயமில்லை. ஈழ "ஞாயிறு" தமிழ்த் தாயின் இருளைக் கடிவதாக. தமிழ் "ஞாயிற்"றின் ஒளி தமிழ் நிலையந்தோறும் காலுமாறு தமிழ் உலகம் முயல்வதாக. "ஞாயிறு" வாழ்க. தமிழ்த் தெய்வத்தின் திருவருள் ஓங்க.

தோற்றுவாய்

1

ஆதிகாலத்தில் இப்பூவுலகம் ஞாயிற்றுப் பிழம்பினின்று தோன்றியதென்ப. ஞாயிறின்றேல் இவ்வுலகம் இயங்காதென்பது வெளிப்படை. ஊர்வன நடப்பன பறப்பன செயற்கொண்டிருப்பன என்ற உயிர்த்தொகைகளுக்கெல்லாம் ஞாயிற்றின் ஒளியும் வெப்பமும் உயிர்நிலையாகும். ஞாயிற்றைப் பல சமயத்தாரும் போற்றுவது வியப்பன்று. ஞாயிற்றைத் தெய்வமாகப் பாவித்து வழுத்தியது வேதமந்திரமாகிய காயத்திரி. இறைவனது எண் வடிவங்களுள் ஞாயிறு ஒன்றென்ப சைவசமயிகள். சூரிய நாராயணனென்று அதனை வழிபடுவர் வைணவ சமயிகள். பரத்கண்டத்துக் கப்பாலுள்ள பல நாடுகளிலும் ஞாயிற்று வழிபாடு பழைய காலத்திற் பரவியிருந்தது. யவனர்கள் ஞாயிற்றுத் தேவனைக் கலைகளுக்கெல்லாம் அதிபதியெனக் கொண்டு வழிபாடியற்றி வந்தனர். உலகத்திற் காணும் வனப்புக்கும் வளர்ச்சிக்கும் முக்கிய ஆதாரம் ஞாயிறென்பது கண்கூடு. எழுவித வன்னங்களுக்கும் ஞாயிறே உறைவிடம். ஓவியக் கலையும் காவியக் கலையும் ஞாயிற்றொளியிலே பிறந்தன என்று கூறலாம்.

உலகத்துக் குயிர்த்துணையான ஞாயிறு தமிழ் மொழியிற் புலவராற் புகழப்பட்டு வருதல் மரபு. தமிழ்ப் பெருங்காப்பியங்களுள் முதலாவதாக வைத்தெண்ணப்படும் "சிலப்பதிகாரம்,"

> ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்

எனத் தொடங்கியது. தமிழோத்தாகிய "திருமுருகாற்றுப்படை,"

> உலக முவப்ப வலனேர்பு திரிதரு
> பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்
> கோவற விமைக்குஞ் சேண்விளங் கவிரொளி

என உதயஞாயிற்றை முன்வைத்தோதியது. எல்லையி லின்பம் கூறும் "திருவாசகம்,"

இன்றெனக் கருளி இருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் றன்மை நினைப்பற நினைந்தேன்

என உவமை கடந்த இறைபொளிக்கு ஞாயிற்றை உவமைகாட்டியது. தமிழும் ஞாயிறும் தம்மில் ஒப்பன என்பதைப் பழைய வெண்பா ஒன்று விளக்கி யுணர்த்தியது:

ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருள்கடியும்—ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரோன் றேனையது
தன்னே ரிலாத தமிழ்.

தமிழ் மொழி தழைத்தோங்கவும், தமிழர் பரம்பரை பொலிவெய்தவும் தமிழ்க்கலைத் துறைகளெல்லாம் விளங்கவும் தொண்டாற்றுவதைப் பேரிலக்காகக்கொண்டு இற்றை ஞான்று குணதிசைக் கடலினின்று ஈழப்பொன் ஒளிபரப்பித் தமிழகம் வலம் வருவான் தோன்றுவது எம் "ஞாயிறு" ஆதலின், "ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்" என்று அதனை வாழ்த்துகின்றோம்.

2

"ஞாயிறு" என்னும் இவ்வெளியீடு ஆண்டுக்கு ஆறுமுறையாக ஒவ்வொரு பருவகாலமும் தோன்றும். அறுபருவத்துள் மிகச் சிறந்தது இளவேனிற்காலம். என்னை? மலர்ந்த செந்தாமரையே முகமாகவும், தேமாந்தளிரே திருமேனியாகவும், குயிலோசையே கீதமாகவும், தென்றலே மென்னடையாகவும் கொண்டு இயற்கைத்தேவி உலகமன்றுள் நடமாடும் காலம் இதுவாதலின். இக்காலத்தின் தொடக்கமாகிய சித்திரைத் திங்கள் முதலாம் நாளில் ஞாயிறு மேடராசியிற் புகும் என்று கூறுப. இதைப் புண்ணிய காலமென்றும் புத்தாண்டுப் பிறப்பென்றும் தமிழ்மக்கள் எந்நாட்டிருப்பினும் களிகூர்ந்து கொண்டாடுவர். இத்தகைய சிறப்பு வாய்ந்த நாளில் எமது ஞாயிறு தோன்றி இருதிங்கட்கொரு முறை தன் கதிரொளி பரப்பும்.

இஞ் ஞாயிறு யாழ்ப்பாணத்திலுள்ள கலாநிலையம் என்ற கழகத்தினின்று வெளிவருவது. இக்கழகம் இற்றைக்கு இரண்

டாண்டுகளுக்கு முன் நிறுவப்பட்டது. சங்க காலத்தினின்று சமீப காலம் வரையில் தோன்றிய பல சிறந்த தமிழ் இலக்கியங்களின் நலங்களைப் பலரும் எளிதிலுணர்ந்து நுகருமாறு ஒவ்வொரு வாரமும் தமிழறிஞரைக் கொண்டு விரிவுரைகள் செய்விப்பதும், ஆங்கிலமொழி பயிலுவதிலேயே காலத்தைப் போக்கித் தமிழ் மொழியை முறையே பயிலாதோர் தமிழ் இலக்கிய இலக்கணங்களைக் கற்பதற்குதவுவதும், யாழ்ப்பாணத்து ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் ஏற்படுத்தியிருக்கும் பண்டித வகைப் பரீட்சைகளுக்கு அங்கத்தினர் படித்தற்கு வசதி செய்வதும், வடமொழி ஆங்கிலம் முதலிய பிறமொழிகளிலுள்ள பொருள் விசேடங்களை அம்மொழிகள் அறியாதார்க்குணர்த்துவதும், ஓவியம் முதலிய கலைகளைப் பரிபாலிப்பதில் ஊக்கம் உண்டாக்குவதும், இந்தியாவில் தோன்றிய பழைய தரிசன நூல்களையும், இலங்கையின் பண்டைச் சரிதத்தையும், ஆங்கிலமொழியிலுள்ள பொருளாதார நூல்களையும் அரசியல் நூல்களையும் படித்து உண்மை காண்டற்காக ஆராய்ச்சி வகுப்புகளை நடத்துவதும் ஆகிய இத்தகைய தொண்டில் இச்சங்கம் ஈடுபட்டுழைத்து வந்துள்ளது. இச்சங்கத்தினின்று ஒரு பத்திரிகை வெளியிட வேண்டுமென்பது சங்கத்தின் நோக்கமாக இருந்து இப்பொழுது நிறைவேறுவதாயிற்று.

3

தமிழகத்தின் ஒரு பகுதியாகிய ஈழநாட்டினின்று பலகலை வளர்ச்சிப் பொருட்டு முதன்முதலாகத் துவங்கப்படும் இவ்வெளியீட்டுக்கு ஈழநாட்டுப் புலவர்கள் உதவியோடு தென்னிந்தியாவிலுள்ள புலவர்கள் உதவியும் இன்றியமையாது வேண்டப்படுவது. ஈழமண்டலத்தையும் பிற தமிழ் மண்டலங்களையும் ஒன்று சேர்ப்பதற்குத் தமிழ்க்கலை வெளியீடுகள் சிறந்த சாதனமாகும். முற்காலத்தில் மதுரையில் இலகிய மூன்றும் தமிழ்ச் சங்கத்தில் ஈழநாட்டுப் புலவராகப் பூதன் தேவனார் வீற்றிருந்தார். பிற்காலத்தில் ஆறுமுக நாவலர் பெருமானவர்கள் ஈழநாட்டுக்கும் தென்னிந்தியாவுக்கும் இடையே ஒரு புலமைத் தொடர்பை ஏற்படுத்தினார்கள். "தொல்காப்பியம்" முதலிய பழந் தமிழ் நூல்களை அச்சிட்டுதவிய

தாமோதரம்பிள்ளை அவர்கள் அத்தொடர்பை வளர்த்தார்கள். இவர்களுக்குப் பிறகு ஈழநாட்டுப் புலவர் சிலர் தென்னிந்தியாவிலுள்ள "செந்தமிழ்" முதலிய வெளியீடுகளிற் கட்டுரைகள் எழுதித் தமது புலமைத் திறனை நாட்டுவாராயினர். இவ்வாறமைந்த தொடர்பு இடையீடின்றி நிலைபெறுதற்கு இஞ் ஞாயிறு துணைசெய்யுமென்று நம்புகின்றேம். சேது என்னும் புண்ணியத் துறையில் இரு பெருங் கடல்கள் ஒன்று சேர்வனபோல், தென்னிந்தியாவிலுள்ள புலவர்களும் ஈழநாட்டுப் புலவர்களும் ஒருங்கு சேர்ந்து இஞ் ஞாயிற்றொளியைப் பரப்புதற்கு இறைவன் அருள் புரிக! இந்நோக்கம் நிறைவேறுமென்பதற்கு நன்னிமித்தம் ஒன்று கண்டுயாம் இறும்பூதெய்துகின்றேம். முன்னாளில் தமிழைப் புரந்த அகத்தியனார் போல் இந்நாளில் தமிழுக் கருந்துணை புரிந்து விளங்கும் மஹாமஹோபாத்தியாயப் பேரறிஞர் உ. வே. சாமிநாத ஐயரவர்கள் இஞ் ஞாயிற்றை வாழ்த்தி ஒரு பாசுரம் அருளிச்செய்துள்ளார்கள். தென்னிந்தியாவைச் சேர்ந்த புலவரும் ஈழநாட்டுப் புலவரும் ஞாயிற்றை வரவேற்றுக் கூறியுள்ள வாழ்த்து மொழிகள் எமக்குப் பேருவகை அளிப்பனவாகும்.

4

தமிழகம் யாண்டுமுள்ள தமிழ்ப்புலவீர் எல்லீரும் வம்மின்! தமிழ்த் தெய்வத்துக்குரிய பணிகள் பல செய்தற்கு வாய்த்த தருணம் இதுவென் றுணர்வீர். தமிழ்மக்கள் தம்மொழி பயிலாது அதனைப் புறக்கணித் தயர்ந்த இருள்கூர் யாமம் கழிகின்றது. பரதகண்டமெங்கும் பரந்திருந்த மாயப்படலம் சிறிது சிறிதாக மறைகின்றது. ஆங்காங்குக் கவிநலமும் கலைநலமும் புத்துயிர் பெற்றுப் புதுமணம் கமழ்கின்றன. ஐரோப்பியகண்டத்தில் ஏறக்குறைய ஐந்நூறாண்டுகளுக்குமுன் கலைப்புனருத்தாரணம் ஏற்பட்டதினின்று ஆண்டுள்ள மொழிகளெல்லாம் சிறந்தன என்ப. பரதகண்டத்திற் பயிலும் பன்மொழிகளும் இற்றைக்கு புது சக்தி பெற்றுள்ளன. வங்கள மொழி உன்னதநிலை பெற்று விளங்குகின்றது. வங்கப் புலவராகிய இரவீந்திரநாத்தாகூர் இவ்வுலகுக்கே கவிச்சக்கரவர்த்தியென இலங்குகின்றனர். தமிழ் மொழியினின்றும் பிறந்த ஆந்திரமொழியும் புதுநலங்கள் பெற்று

வளர்கின்றது. தொன்மையானும், பிறமொழித் துணையின்றித் தானே இயங்கும் தன்மையானும், இலக்கண அமைதியானும், இலக்கிய உயர்ச்சியானும் தமிழ்மொழி இக்காலத்து வழங்கும் ஏனைய இந்தியமொழிகள் எல்லாவற்றினும் சிறந்ததென்பது ஒருதலை. தன்னேரிலாத தமிழ்த்தெய்வத்துக்குத் திருப்பள்ளியெழுச்சி பாடியுள்ளார் இவ்வுதயகாலத்துப் புலவர் ஒருவர். தமிழ்த்தெய்வம் துயிலெழுந்து திருவருள்புரியுங் காலம் அணித்தாயது. சங்கப்புலவர் காலத்திலும், சமயாசாரியர் காலத்திலும், சேக்கிழார், கம்பர் முதலியோர் காலத்திலும் திருவோலக்கம் கொண்டு வீற்றிருந்த தமிழ்த்தெய்வம் மீண்டும் திருவோலக்கம் கொள்கின்ற காலம் பிறக்கின்றது. ஞாயிறு இந்திரன்திசையை அணுகினன். முத்தமிழ்ப் புலவிர்காள் வம்மின்! விசித்திர வன்னங்களுடன் அலர்ந்த மலர்கள்போன்ற கவிகளைக் கொணர்மின், நாடகங்களைக் கொணர்மின், பொருள்பொதி கட்டுரைகளைக் கொணர்மின், புது சாத்திரங்களைக் கொணர்மின், பழஞ் சரிதங்களைக் கொணர்மின், வேற்றுமொழிப் பன்மலர்த் தெரியல்களைக் கொணர்மின். தெய்வத்துள்ளம் கவரும் திப்பிய இசைப்பாக்களை ஓதுமின். ஓவியர்களே, சிற்பிகளே நீவிரும் வம்மின்! தமிழ்த்தெய்வத்துக்குப் புதுக்கோட்டங்களை எழுமின். தமிழ் வீரர்களே! வேளைக்காரப்படைகளாக அணிவகுமின். தமிழ்ப் புலவர்களே! நீவிர் முன்னணி புகுமின். என்னை? ஓர் ஆங்கிலப் புலவர் கூறியாங்குப் புலவர்களாகிய யாமே இவ்வுலகத்தை நடத்துகின்றோம்.

> இனியபல் கீதங்க ளிசைப்பதும் யாங்கள்
>
> எண்ணில்பல் கனவுகள் காண்பதும் யாங்கள்
>
> தனிமையாய்த் திரைகடற் றுறைகளிற் றிரிந்தும்
>
> துறந்தபாழ் யாற்றிடி கரையினி லிருந்தும்
>
> மனிதவாழ் வனைத்து முலகினி விழந்து
>
> மதியொளி தவழும் மதியிலே மெனினும்
>
> நனிபட வுலகை நாளுமே யாட்டி
>
> நடத்துவோ ரம்ம நாங்களே போலும்.

தமிழ்த் தெய்வம் வாழ்க! தமிழகம் வாழ்க! தமிழ் ஞாயிறு வாழ்க!

(சு. ந.)

தமிழ் இலக்கியத்தில் பருவ வருணனை

இளவேனில்

சிலப்பதிகாரம்

1. செந்தா மரைவிரியத் தேமாங் கொழுந்தொழுக
மைந்தா ரசோக மடலவிழக்—கொந்தா
ரிளவேனல் வந்ததா லென்னாங்கொ லின்று
வளவேனற் கண்ணி மனம்.

சீவகசிந்தாமணி

2. குரவம் பாவை கொப்புளித்துக் குளிர்சங் கீர்ந்த துகளேபோல்
மரவம் பாவை வயிறாரப் பருகி வாடை யதுநடப்ப
விரவித் தென்றல் விடுதூதா வேனி லாற்கு விருந்தேந்தி
வரவு நோக்கி வயாமரங்க ளிலையூழ்த் திணரீன் றலர்ந்தனவே.

3. இளிவாய்ப் பிரசம் யாழாக விருங்கட் டும்பி குழலாகக்
களிவாய்க் குயில்கள் முழவாகக் கடிபூம் பொழில்க ளரங்காகத்
தளிர்போன் மடவார் தணந்தார்தந் தடந்தோள்வளையுமாமையும்
விளியாக் கொண்டிங் கிளவேனில் விருந்தா வாட றொடங்கினான்.

---

1. மைந்து - அழகு; கொந்து, கொத்து என்பதன் மெலித்தல் விகாரம்.
'வளவேனற் கண்ணி' என்பது மாதவியைக் குறிக்கின்றது.

2. குரவம் - ஒரு பூமரம்; கொப்பளித்தல் - காற்றுச் சிதற அடித்தல்;
அரவம் - ஒரு பூமரம்; வயாமரங்கள் - வயாநோய் கொண்டமரங்கள்;
இணர் - பூங்கொத்து.

3. இளி - யாழின் எழ்நரம்புகளில் ஒன்று; பிரசம் வண்டு; மாமை-அழகு.
விளி - இசைப்பாட்டு; விருந்தா - புதிதாக.

சூளாமணி

4. மருவினியன மதுவிரிவன மலரணிவன வகுளம்
திருமருவிய செழுநிழலன செங்குழையன தேமா
வரிமருவிய மதுகரமுண மணம்விரிவன நாகம்
பொரிவிரிவன புதுமலரன புன்குதிர்வன புறனே.

5. நிழனகுவன நிமிர்தழையன நிறைதுளிர்வன சாந்தம்
எழினகுவன விளமலரன வெழுசண்பக நிகரம்
குழனகுவன மதுகரநிரை குடைவனபல குரவம்
அழனகுவன வலர்சொரிதர வசைகிலையவ சோகம்.

6. எழுதருவின வெழுதளிரன விணரணிவன இரதம்
இழுதருவின கொழுமலரிடை யெழில்பொலிவன மதுகம்
கழுதருவின கனுவிலையன கழிமடலின கைதை
பொழுதருவின வணிபொழிலின பொழிதளிரன புன்னை.

7. வளர்கொடியன மணம்விரிவன மல்லிகையொடு மௌவல்
நளிர்கொடியன நறுவிரையக நறுமலரன நறவம்
குளிர்கொடியன குழைமாதவி குவிமுகையன கொகுடி
ஒளிர்கொடியன வுயர்திரளினொ டொழுகிணறன ஓடை.

8. குடையவிழ்வன கொழுமலரின குளிர்களியன கோங்கம்
புடையவிழ்வன புதுமலரன புன்குகமொ டிலவம்
கடியவிழ்வன கமழ்பாதிரி கலிகளிகைய சாகம்
இடையவிழ்வன மலரளவில விதுபொழிலின தியல்பே.

9. மதுமகிழ்வன மலர்குடைவன மணிவண்டொடு தும்பி
குதிமகிழ்வன குவிருடையன நுதிகோதுபு குயில்கள்
புதுமகிழ்வன பொழிலிடையன புணர்துணையன பூவை
விதிமகிழ்பவர் மதிமகிழ்வுற விரவுற்றன விரிவே.

குறிப்பு.—இவ் ஆறுபாட்டுக்களின்கண் போந்துள்ள வகுளம், நாகம், முதலாயின மரங்களின் பெயர்கள். வகுளம் - மகிழமரம். நாகம் - ஞாழல் மரம்; புன்கு - புன்கமரம்; குரவம் - குராமரம்; மதுகம் - இருப்பைமரம்; மௌவல், கொகுடி, ஓடை என்பன பூக்கொடிகள். மௌவல் - முல்லை.

நைடதம்

10. பூசல் வண்டார்ப் பவேனில் போந்தமை குயில்கள் கூறப்
பாசிலை யுகுத்த தேமா பைந்தளி ரீன்ற தோற்றம்
மாசுறு துகிலை நீத்து மகிழ்நர்தம் வாவு கேட்டுக்
கோசிகச் செம்பொ னுடை கொம்பனா ரசைத்தல் போலும்.

11. கள்ளுயிர்த் தலரு முல்லைக் கடிமுகை முறுவ றேன்ற
வள்ளிதழ்க் குவளை யுண்கண் மலர்ந்துமாந் தளிர்மென் கையாக்
கிள்ளைமென் குதலை சாற்றிக் கிளரொளி வண்டு பாணாத்
தெள்விளி பாட வேனிற் றிருமகள் சிறந்தா ளன்றே.

---

10. பூசல் - போர்; உகுத்த - உதிர்த்த; கோசிகம் - பட்டு.

11. கடி - வாசனை; முகை - அரும்பு; முறுவல்-பற்கள்; வள்-கூர்மை; குவளை - நீலோற்பலம்; உண்கண் - மையுண்டகண்; குதலை - குதலைச் சொல்; பாண் ஆ - பாணர்களாக; தெள் விளி - தெளிவாகிய 'விளி' என்னும் இராகம்.

வங்கத்துதித்த

செங்கதிர் வேந்தர்

சுவாமி விபுலாநந்தர் அவர்கள் எழுதியது

நாவலந்தீவின் நலத்தினை விளக்கும் பாவலர் பலருள் வங்கமொழிக் கவிவாணராகிய ரவீந்திரநாதர் மங்காத கீர்த்தி படைத்தவர். "ரவி" என்னும் வடமொழி தமிழிற் "செங்கதிர்" என வழங்கும்; விண்ணவர் தலைவனாகிய "இந்திர"னைத் தொல்லாசிரியர் "வேந்த"னென வழங்கினர். "ரவீந்திரர்" தமிழ்வழக்கிற் "செங்கதிர்வேந்தர்" ஆவார்.

இவர் உரைவனப்பினோடு உடல்வனப்பு முடையவர்; வேந்தர்க்கியைந்த கண்ணோட்டமுடையவர்; இசைக்கலையிலும் இனிது தேர்ச்சி பெற்றவர்; பாரகமடங்கலும் பரந்திசை யெய்தியவர்; இவரது நூல்கள் பலமொழிகளிலும் வெளிவந்துள்ளன; தமிழில் வரின், அவை தமிழணங்கினுக்குப் புதியதோர் ஆக்கத்தைத் தரும் நீர்மைய.

ஈரைந்தியாண்டுகளுக்கு முன்பு, ஒருசில செய்யுட்களை மொழிபெயர்த்துச் "செந்தமிழ்" இருபதாந் தொகுதியில் வெளியிட்டேன். அந்நாளில் யான் சென்னைமாநகரிலே மயிலாப்பூர்த் திருமடத்திற் றொண்டுபுரிந்துகொண்டிருந்தேன். "ஞாயிற்"றின் ஆசிரியராகிய உருத்திரகோடீசுவர சுவாமிகளும் அணித்தாகிய ஓர் இடத்திலே வசித்துவந்தார்கள். "கண்போனண்பிற் கேளி"ராகிய இளம் புலவர் பலருடைய கூட்டுறவும் முதுபுலவர் பலருடைய பேரன்பும் அந்நாளில் நிரம்பக் கிடைத்தன.

அதன்பின்பு இலங்கைக்குச் சென்றேன். இளமாணவர்க்குப் பாடசாலை நிறுவும் பணியிலே ஓய்வின்றி உழைக்கவேண்டி நேர்ந்தது. கலைமகளைப் போற்றுதற்கு நேரங் கிடைக்கவில்லை. அல்லும் பகலும் அநவரதமுந் துதிப்பார்க்கன்றிச் சொல்லின்

செல்வியும் அருள்புரிவாளல்லள். பல்கலைக் கழகத்திற்கு வந்தும் தொல்லைகள் அகன்றபாடில்லை. அவற்றிடையே கவிச்சுவையென்னும் மதுவினை நுகரும் விருப்பினராகிய நண்பரொருவரது விடாப்பிடியாகிய தொல்லையுமொன்று. அதன்வழிப்பட்டு மொழிபெயர்க்கப்பட்ட கவிதைகள் ஒருசில. அவற்றினுள் ஒன்றினை "ஞாயிற்"றுக்குச் சமர்ப்பிக்கின்றேன்.

முதற்காட்சி.

காலம்: கார்காலம் (இற்றைக்கு ஈராயிர யாண்டுகளுக்கு முன்)

களம்: மதுரைமாநகரின் மதிற்புறம்.

[அருள்வள்ளலாகிய புத்ததேவரின் மாணாக்கர் யாங்கணுஞ் சென்று, மக்களுக்கேற்பட்ட உடற்றுன்பாகிய நோயினையும் உளத்துன்பாகிய அறியாமையினையும், உயிர்த்துன்பாகிய பாவத்தினையும் போக்கடிப்பார்; அவருள் ஒருவர் உபகுப்தரென்பார்.]

புத்ததேவர் மாணாக்கர்—உபகுப்த
புண்ணிய ரெனும்பெயர் நண்ணியவர்
மாமதுரைப் பழம்பதியில்—ஓங்கி
வானிமிரு மாளிகைசூழ் மதிற்புறத்திற்

பூமகளே டிணையாக — நல்ல
புழுதியிற் றுயின்றனர் தொழுதகையார்
சுடரொளித் தீபமெல்லாம்—அணைந்தன
தொடர்புடைக் கதவங்க ளடைபடவே

கார்ப்பருவ முகிற்குலத்தால்—வானத்துக்
கதிரொளித் தாரகைக் கணங்களெல்லாம்
ஆர்ப்பரவ மின்றிமறைய—பதவிணை
அணிமணிச் சிலம்பொலி யாற்றவந்தாள்

மாதொருத்தி துயில்கின்ற— உபகுப்தர்
மார்பினிற் கையைவைக்க அவர்விழித்தார்
திதில்விழி மீதினிலே—அவள்கைத்
தீபத்தின் கிரணங்கள் செறிந்தனவே

நாடகக் கணிகையவள்—உடுசிகர்
நவமணி யழுத்திய அணியுடையாள்
நீலச்சிற் றுடையினள்—இளமை
நிறைமது வெறிகொளு நீர்மையினள்

தீபத்தைக் கீழ்நோக்கித்—தவவொளி
திகழு மிளந்துறவி திருமுகத்தைத்
தாபத்தொ டெதிர்நோக்கி — ஐய
தவறுள தேலென்றன் பிழைபொறுப்பாய்

செம்புழுதிச் சயனமிது—நினக்குச்
சீரிதல்ல விளையோயென் றிருமனைக்கு
வந்தருள வேண்டுமென்றாள்—இம்மொழி
மாதவ முனிசெவி வழிப்புகவே

நங்கைநீ வந்தவழிபோ—தக்க
நாளினில் யான்வருவ னெனநவின்றான்
கங்குலெனுங் கருந்தெய்வம்—பல்லொளி
காட்டுதல் போன்மின்னல் கான்றதுவே

வானகத் தொருதிசையிற்—பிரசண்ட
மாருத முறுமிற்று மனநடுங்கிக்
கானகத் திளமான்போல்—அந்தக்
காரிகை நெடுவழி கடுகினளே.

இரண்டாங் காட்சி.

காலம்: இளவேனிற்காலம்.
களம்: மதுரைமாநகரின் மதிற்புறம்.

அழகாரு மலர்சுமந்து தெருவீதி மரக்கிளைகள்
அலமந் தேங்கக்
குழலாரு மிசைவிரவி நெடிதுயிர்க்கும் வேனில்வளிக்
குறிப்பு நோக்கி
விழவாரு மிளையோர்கள் நகர்ப்புறத்தில் மதனவேள்
விழையு நீர்மைப்
பொழில்சேர முழுமதிவா னடுகின்று மோனநகர்ப்
புதுமை நோக்க

மாங்குயில்கள் துயிலின்றி யூடலுரை நிகழ்த்துகின்ற
மலர்ப்பூஞ் சோலைப்
பாங்குசெலு மிளந்துறவி நகர்வாயில் கடந்துமதிற்
பக்கஞ் சென்றான்
ஆங்கொருபெண் ணுடன்முழுதுந் தொழுநோயுற் றருமாற்றி
யவலித் தாளைத்
தீங்கிதென நகரிலுளா ரகற்றுதலுந் தனிகிடந்தாள்
திறத்தைக் கண்டான். 44

தீராநோ யுற்றாள்பாற் சென்றமுனி மடியிலவள்
சிரத்தைத் தாங்கி
நீரூட்டி நோய்தணிக்கு நேயமுறு நன்மருந்தை
நிறைக்க வன்னாள்
யாரோவிவ் வேழைபா லிரங்கினீ ரையவென
யான்சொல் வார்த்தை
சோராதே யின்றுன்பால் வந்துளே னெனமுனிவன்
சொல்லி னானே. 48

குறிப்பு.—

(9) கார்முகிலால் வானகத்து மறைந்த விண்மீன், (17) கணிகை யணியி னழுத்திய மணியாகத் தோன்றிற் றென்பதும், (20) உவகை வயப்பட்ட சோர்வுடைத்தாதலின் இளமையும் ஒருவகை மதுவேயா மென்பதும், (31—34) மின்னலுங் கடுங்காற்றுங் கங்குலாகிய கரிய தெய்வத்தின் நகையினையும் ஆர்ப்பினையும் ஒத்தன வென்பதும். (37—38) அவை முனிவனது தவத்தினைக் கெடுக்க முயன்றாட்கு அச்சத்தை விளைத்தன வென்பதும், ஆங்கவள் கடுக வகன்றது காரொலி கேட் டஞ்சி யகன்ற இளமானது தோற்றத்தை நிகர்த்ததென்பதும், (40) வேனிற்காலத்து முழுமதி வானி னடுவி னின்று மோன நகரினை நோக்கிற் றென்பதும், (41) குயிலிசை ஊடலுரை யாயிற் றென்பதும், துயருற்ற காலத்து முனிவர் தெய்வம்போன்று உதவுவா ரென்பதும் பிறவும் இண்டு நோக்கற்பாலன,

சகுந்தலை வெண்பா

திரு. சு. நடேசபிள்ளை அவர்கள், பி. ஏ., பி. எல்,

இயற்றியது.

பிறப்புக் காண்டம்

1. பொன்னுலகின் கோவிருந்த பூந்தவிசின் முன்பணிந்து
மின்னற் கொடியனைய மேனகை—தன்னிகரில்
தேவர்க் கிறைவாழி தேரே னருள்கென்றாள்
எவற் குறிப்பெற் கிசைந்து.

2. கற்பகத்தின் மிக்கநற் காரிகையே யின்றெனக்
குற்ற திகிலொன் றுரைப்பன்கேள்—முற்றற்
சரிய கடுந்தவத்தை யாற்றினான் பாரிற்
பெரிய முனிகோசி கன்.

3. இமையவர்தம் வேந்தாக யானுகரு மிவ்வாழ்
வமையா தெனக்கிவ் வகலுட்—சமனாக
வேட்டா ருளரேல்வை வேற்கண்ணாய் நீயறிய
மாட்டாயோ கூறாய் மதி.

4. மன்ன னுரைத்த மொழியிவற்றைக் கேட்டவன்றன்
முன்ன முணர்ந்திட்ட மேனகைநன்—குன்னிக்
கழறுவாள் விண்ணரசே காதிமகன் சீற்றம்
பிழைத்துப் பிழைப்பரோ பின்.

5 வெண்ணெ யுருகாதோ வெங்கதிரின் முன்னுற்றாற்
பெண்ணரசி யுன்வடிவின் பேரழகைக்—கண்ணுற்ற
புங்கவருந் தேடுவரோ விண்பொருளைப் பூங்கொடியே
சங்கை யுனக்கேன் றவிர்.

---

1. எற்கு - எனக்கு.
4. முன்னம் - குறிப்பு.
5. சங்கை - சந்தேகம்.

6. எனை யரம்பையர்க ளீடில்லை யென்றறிந்து
மானே யழைத்தேன் மதனேவற்—றானைசூழ்
கோமளமே யுன்னைக் குறையிரப்பான் கோசிகனும்
காமக்கரை காணான் கண்டு.

7. தேவர்கோன் கூறுமித் தேறுதலைக் கேட்டநங்கை
ஆவி யழிந்தாலு மாற்றுவதுன்—சேவகமே
தேர்ந்தேற் குறுதுணையாத் தென்ற லெனுந்தேவை
ஈந்தருள்க வென்றா ளிரந்து.

8. பூவாளி கொண்டுன்முன் போவான் மதவேளும்
நீவாழி மேனகை நீள்புவியிற்—பாவேறு
தென்றலான் வேனிலான் றேர்செலுத்த வுய்ப்பன்யான்
என்றனன் றேவேந் திரன்.

9. காவி மயிற்றோகை கார்வேந்தன் முன்பணிந்து
மேவினாள் மேவியதும் மேதினியில்—ஆவி
அசையா துயிர்க்கு மருந்தவத்தோ னுள்ளம்
மிசையே முகிழ்க்கும் மயல்.

10. ஓடு முளத்தை பொருகலையாய் மாய்த்திட்டேன்
ஈடு மெனக்குண்டோ யிவ்வுலகில்—வீடுற்றேன்
என்று பெருமிதங்கொண் டெண்ணி யிருப்பேனை
வென்றிடுங்கோல் மாயை விளைந்து.

11. பெண்ணில்லா வெங்கானிற் பேதை மனமெங்ஙன்
விண்கோட்டை கட்டினாய் வீணாகத்—திண்மை
நினைவழியக் கற்றாய் நிறையழியா வென்று
தனைமறந்தா னம்மா தவன்.

12. வேனில் விளைக்கும் விரிகதிரோன் றன்கிரணம்
கானிற் குளிர்ந்து கவின்பொன்னாய்—வானிற்
படந்திட்ட மாலை பனிமதியின் றாதாய்
நடந்ததே பைய நிலத்து.

---

8. வாளி - அம்பு.

13. அரும்பின்ற முல்லையு மைதவிழுங் கோங்கும்
கரும்பேய்க்கும் மென்பணையுங் காமர்—சுரும்பூதும்
செந்தமிழின் றீப்பண்ணுஞ் செங்குமுத வாயிதழும்
அந்திப் பிறையுமுண் டாங்கு.

14. இவையனைத்தும் பெண்ணு யெழுந்தனவோ வின்பச்
சவைநடிக்குஞ் சந்தச் சதிரோ—சுவைதேர்
கலைப்புலவர் தம்மனத்திற் காண்கவியோ மற்றுச்
சிலைமதற்கு மோர்கனவோ செப்பு.

15. அரதனமும் பொன்னு மணிசெய்யும் வானத்
திரைகடந்து வந்த திருமின்—தருசூழ்
பசுப்புற் றரையரங்கா யாடினுள் பாடி
அசுப்புற்ற தேன்வாயி னுள்.

16. காலிற் சிலம்பரியே கையிற் செறிவளையே
மேலுற்ற பூம்பட்டின் மேகலையே—ஆலித்துக்
கானை யுருக்குமக் காரிகையின் கானத்திற்
கானமெய்த் தாள மவை.

17. சாதித்து யோகத்தைச் சார்ந்தா ரகத்துமுரல்
கீதம்போற் கிண்கிணிபோற் கேட்குமிசை—யோதுமுயிர்
ஓவியம்போ லங்கிருக்கு மொண்முனிவன் றன்னிதயம்
பாவியதே பண்ணின் றிறம்.

18. ஏதே புறத்தீர்க்கு மிவ்விசையென் றோர்ந்திடுவான்
மீதே யிளந்தென்றல் மெல்லென்று—தாதார்பூ
வாசத் தொடுவீச வாசவற்கு வாழ்வளித்துக்
கோசிகன்றன் கண்ணைவிழிக் கும்.

19. கண்ணை மெலவிழித்துக் கண்டானே கோசிகன்மன்
பெண்ணென்ற தெய்விகப் பேரழகைக்—கண்டவுடன்
கொண்டதுளங் காமமோ வன்றிக் கவிதையோ
பண்டைவினை தானே பகர்.

(தொடரும்)

---

14. சந்தம் - அழகு.
15. அரதனம் - இரத்தினம்; அசம்பு - ஊடுருதல்.
18. வாசவன் - இந்திரன்.

பெருங்காப்பிய ஆராய்ச்சி

வியாகரண மகோபாத்தியாய

வை. இராமசாமிசர்மா அவர்கள் எழுதியது

மணிமேகலை

கலைமாதின் இருதனமாகக் கருதப்படுவன இசையும் இலக்கியமும்; இசை தன் இன்னோசை கொண்டு மன்னுயிர்களின் மனத்தை உருக்கும்; இலக்கியம், உள்ளுந்தோறும் உணர்வுடையார் உள்ளத்தில் உவகை முதலாம் மெய்ப்பாடுகளை ஒன்றன் பின் ஒன்றாய் உணர்த்தாநிற்கும் என்னும் இப்பொருளை உள்ளுறையாகக் கொண்ட

"ஸங்கீதமபி ஸாஹித்யம் ஸரஸ்வத்யா: ஸ்தனத்வயம்.

ஏகமாபாதமதுர மந்யதாலோசனு மிருதம்."

என்ற சுலோகமும், "நவிறொறு நூனயம் போலும்" என்ற குறள் வெண்பா அடியும் இலக்கியச் சிறப்பிற்கு எடுத்துக்காட்டாக உணர்வுடைமாந்தர் பலராலும் பல்காலும் எடுத்தாளப்படுகின்றன; இனியும் எடுத்தாளப்படும். முன்னது வடமொழிச் செய்யுள். பின்னது தென்மொழிப் பா. மொழியளவில் இரண்டும் வேற்றுமைப்பட்டு நிற்பினும், உண்மைப்பொருளை உணர்த்தும் பெற்றியில் பெரிதும் ஒற்றுமைகொண்டு ஒளிர்தல் நன்கனம் விளங்கும். உணர்வுடைமாந்தர் செந்நாப் பழகிய செய்யுட்கள் சீரிய கருத்துக்களை உணர்த்தாமற் போகா என்பது உலகப் பொது நம்பிக்கை. அது வடமொழிச் செய்யுளாயின் என்? அல்லது செந்தமிழ்ப் பாவெனின் என்? அல்லது வேறு எம்மொழிப் பாசுரமாயின் என்? மெய்ப்பொருள் காண்ப தறிவு. இம்முதற் செய்யுளின் சிறப்பெல்லாம் இவ்விருகலைகளையும் கலைமாதின் தனமாக உருவகப்படுத்திய அணியில் எள்ளுக்குள் நெய்போல் உள்ளுறையாக உறைந்து கிடக்கின்றன. இவை யாவும் உள்ளுணர்வு கொண்டு துருவித் துருவி ஆராய்வாருக்கே புதைபொருள்போல் புலப்படுவனவாம்.

கலைமாதோ கலையுருவினள். கலைகளோ இருபான் முப்பத்திரண்டு என்ப. சிந்தாதேவியின் திப்பிய கற்பனைத் திருமேனியில் கலையனைத்தும் ஒவ்வோர் அங்கமாய் நின்று ஒண்சுடர் தெரிப்பன. இவ்விரு கலைகளும் தேவியாரின் தனத்தைத் தமக்குத் தானமாகத் தாங்கித் தனிச்சிறப் பெய்தாநிற்கின்றன.

மக்கள் யாக்கையில் அடிமுதல் முடிவரை அவயவங்கள் யாவுந் தத்தமளவில் சிறப்புடையனவாக, தனத்திற்கு எய்தும் தனிச்சிறப்பு என்னை? "கண்ணுடையர் என்பவர் கற்றோர்" என்னுந் தேவர் திருமொழியானும், "கண்ணே வேண்டுமெனினு மீயக் கடவேன்" என்ற கவிச்சக்கரவர்த்தியாரின் கனிமொழியானும், தாய்மார்கள் கண்ணே! கருவிழியே! கண்மணியே! என்று தம் இளஞ்சேய்களைக் கொஞ்சிக் குலாவும் உலகநடையானும் கண்ணுக்கேனும் இரண்டொரு சிறப்புக் கூறப்புகின் ஒருவாறு பொருந்தும். தனத்திற்கு அது முற்றிலும் முயற்கொம்பாகவே முடியும் என்று சிற்சிலர் ஐயுறவு உறுதல் இயல்பே. எனினும், கூர்ந்து நோக்குவோர்க்குப் பல சிறப்புக்கள் தோன்றாமற்போகா.

கலைமாதோ பெண்பாற்கடவுள். என்றும் மடந்தைப் பருவத்தினள். எம்பெருமான் திருவருளால் என்றும் பதினாறுக வாழ்வு பெற்றவனும் பண்டு இம்மண்ணுலகில் உதித்த மார்க்கண்டேயன் அன்றோ? யோனிவாய்ப்பட்ட மனிதன்நிலை இவ்வாறெனில், மும்மூர்த்திகளும் முடிதாழ்ந்து பணியுங் கலாதேவியின் இளமைக்கு இழுக்கு ஏது? "இளமையு நில்லா யாக்கையு நில்லா" என்ற தத்துவபோதனைகள் எல்லாம் சின்னாள் வாழும் சிற்றறிவுடைய எம்போலியரைக் கருதியனவேயன்றித் தேவரும் வழிபடாநின்ற சிந்தாதேவியின் திருமேனியைத் தினையத்துணையும் கனவிலுங் கருதியவை அல்ல. மக்கள் நெறி வேறு; கடவுள் நெறி வேறு. இஃதே ஆன்றோர் கொண்ட முடிபு.

பெண்மையின் இலக்கணம் வகுத்த ஒரு பெரியார் "ஸ்தன கேசவதி ஸ்திரீ ஸ்யாத்" என்றார். தனமும் மொய்குழலும் உடையாளே பெண் எனப்படுவள் என்பது இவ் வடமொழி வாசகத்தின் கருத்து. தேவரும், "கல்லாமை" என்னும் அதிகாரத்தில்,

"கல்லாதான் சொற்கா முறுதன் முலையிரண்டு
மில்லாதாள் பெண்காமுற் றற்று"

என்று உவமைமுகத்தாற் பெண்மையின் சிறப்பிலக்கணத்தைச் செவ்வனம் எடுத்தோதினர். அப்பொய்யாமொழியார் "கண்ணிரண்டு மில்லாதாள்" எனவோ, "செவியிரண்டு மில்லாதாள்" எனவோ, "கையிரண்டு மில்லாதாள்" எனவோ தமது குறட்பாவைப் பாடியருளாமல், "முலையிரண்டு மில்லாதாள்" என்றே பாடியருளினமையான் அவை இரண்டுமே மடந்தைப் பருவம் எய்திய மெல்லியலாரின் மேனியில் சிறந்து விளங்குதல் நன்கு புலனாகும். தனத்தின் சிறப்பைத் தமிழிலும், வடமொழியிலும் பலபலவாறு புனைந்து பாடாத புலவரே இல்லை என்று யாம் கூறுவது ஒருவாற்றானும் மிகை ஆகாது.

மேலே எடுத்துக் காட்டப்பெற்ற இசையும், இலக்கியமும் தேவியாரின் கண்ணாகவோ, கமலவாண்முகமாகவோ கூறப்படாமல் தனமாகச் சமைக்கப்பட்ட ஒற்றுமையான் ஏனைய கலைகளினின்றும் இவ்விரண்டனுக்கும் ஓர் தனிச்சிறப்புப் பெற்றாம். ஆடவர் மனத்தைக் காந்தம்போன்று கடிதின் வலித்திழுக்கும் ஓர் மின்சாரசக்தி, மெல்லியல் மடந்தையரின் மேனியில், வளரிளந் தனத்துக்கன்றி வேறு எவ்வுறுப்புக்கு உண்டு? வேற்கண்ணும், ஒண்ணுதலும், மொய்குழலும், பணிமொழியும், வேய்த்தோளும், இன்ன பிறவும் துணைக்கருவிகளாய் நின்று அதற்கு உதவி செய்வனவே. அஃதேபோல இவ்விரு கலைகளும் மக்கள் உள்ளத்தூடு உருவிப் பாயும் ஓர் காந்தசக்தி படைத்தவை என்றும், ஏனைய கலைகள் அனைத்தும், இவ்விரண்டனுக்கும் துணைபோகுவன என்றும் மற்றொரு சிறப்பும் பெற்றாம். மெல்லியல் மடந்தையரின் வளரிளந் தனமோ, உருவுந் திருவும் பருவமுங் குலனுங் குணனும் அன்பும் ஆதியவற்றால் தன்னோடு ஒப்புமை கொண்ட ஓர் தலைவனுக்கே பயன்பட்டு நிற்கும். உருவக ஒற்றுமையான் இவ்விரு கலைகளும் உணர்வுடை மக்களுக்கே பயன் சுரக்கும் என்று வேறு ஓர் சிறப்பும் பெற்றாம். கண், கண்ணுடையவனுக்கே பயன்படும். தனமோ தனக்கென வாழாது,

பிறர்க் குரிமைபூண்டு பிறங்குவது. பிறருக்குப் பயன்படாவழி தம்மளவில் பிறங்கிப் பெருமை அடைதல் அவைக்கு ஒருபோது மில்லை.

கம்பரும் ஓரிடத்தில், "பீன தனத்தவள் பேரில ளென்பார்" என்று இக்கருத்தை வலியுறுத்துவாரானார். உருவகஅணி நயத்தால் இத்துணைச் சிறப்பும் பெற்று இலங்குதல் பற்றியே இச்செய்யுள் உணர்வுடைமாந்தர் செந்நாப் பழகிவருகின்றது.

தேவர் குறட்பாவோ உருவகஅணி பெறுவிடினும், உவமை அணி பெற்று ஒளிர்கின்றது. உவமை, பொருட் புலப்பாட்டிற்கு பேரறிஞரால் பெரிதும் போற்றப்படும் ஓர் பிரமாணமென்பது வெளிப்படை. நூனயத்துக்கு ஓர் உவமை தேடித்திரியாமல், இதனையே வேறொன்றனுக்கு உவமையாக்கிய அணியில் தோன்றும் நயங்கள் ஒன்றல்ல, இரண்டல்ல, பலப்பல. ஆதல்பற்றியே, இதுவும் கற்றோர் செந்நாப் பழகிவருகின்றது.

இசை, பால் மணம் மாறாப் பாலகனையும், கன்னெஞ்சு படைத்த கயவரையும், பசுக்களையும், பறவைஇனங்களையும் பரவசப்படுத்தும். என்றாலும் ஓசை உள்ளளவுந்தான் இசைக்கு மனத்தை உருக்கும் இவ்வினிமை உண்டு. ஓசை ஒழிந்தபடின் இனிமையும் இல்லை. நேற்றுக் கேட்ட இனிய சங்கீதத்தை நினைந்து இன்று உள்ளக்கிளர்ச்சி பெறுவார் யாரும் இல்லை. இன்றும் ஒருவன் இனிய கீதம் பாடவே உள்ளக்கிளர்ச்சிகள் எழாநிற்கும். பிறருக்கே பயன்படுகின்றது. செவிமடுத்தஅளவில் எவ்வுயிரையுந் தன்வயப்படுத்துகின்றது. ஆயினும் என்? உன்னுந்தோறும் உள்ளநெகிழ்ச்சிகளை எழுப்பும் செவ்வி ஒன்று இசைக்கு இசையாதது ஓர் பெருங் குறையே.

இலக்கியமோ இசையினின்றும் ஓர்படி உயர்ந்து நினையுந்தோறும் உணர்வுடையார் நெஞ்சத்தில் பலபல நெகிழ்ச்சிகளை எழுப்பிக்கொண்டே நிற்கும். உள்ளுணர்வு பெறாதவனுக்கு இலக்கியம் என்? சமயம் என்? சாத்திரம் என்? அவன் இலக்கியங்களை நூற்றுக்கணக்காக நெட்டுருவாக்குவதும், பதவுரை,

பொழிப்புரை, இலக்கணமுடிபு காண்பதுமெல்லாம் குங்குமஞ் சுமந்த கர்த்தபக் கதையாகவே முடியும். கண்ணாற் கண்டும், காதாற் கேட்டும், நாவால் உண்டும், மூக்கான் முகந்தும் அநுபவித்தற்குரிய ஓர் மெல்லியன் மடந்தையால் ஐம்புலனுந் தளர்ந்த முதியோனுக்கு விளையும் பயன் என்னை? உள்ளுணர்வு பெறுதவன் புகழ்ச்சியும் இகழ்ச்சியும் ஒரேதன்மைய. அவன் புகழ்ச்சியால் இலக்கியம் பெருமை உறுவதுமில்லை. இகழ்ச்சியால் அது சிறுமை எய்துவதும் இல்லை. உள்ளுணர்வுடை உத்தமர்களுக்கே காப்பியக்கலை கனிபோல பலப்பல சுவைகளைப் பயவாநிற்கும்.

காப்பியம் என்பது இலக்கியமே. கவியின் செய்கையே காப்பியம் எனப்படும். கவி என்போன் பரந்த அறிவுடையவன். வேதமும் கவி என்ற சொற்கொண்டே கடவுளை வாழ்த்தாநின்றது. பகவத்கீதையிலும் கண்ணபிரான் அருச்சுனனுக்கு தன் பெருமையை எடுத்து ஓதுமிடத்து, "கவிகளுள் நான் வெள்ளி" என்றே விளம்பியருளினர். வேதத்திலும், வேதசாரமான கீதையிலும் கடவுளுக்கே பயின்ற கவி என்னுஞ் சொல் பரந்த நோக்கங்கொண்டே இயங்கல்வேண்டும். மக்களை வேற்றுமைப்படுத்தும் குறுகிய நோக்கங்கள் கவியினிடம் நண்ணவுந் தாமே நாணமுற்று அடங்கும்.

கவியின் செய்கையான காப்பியம், அவன் உள்ளுணர்வு பொங்கி வழிந்த வசனமாதல், செய்யுளாதல், இரண்டுங் கலந்து தோன்றுதல் ஆகலாம். எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்னும் வாக்கிய உறுப்புக்கள் பெற்றதும், பா என்னும் பன்னிற அங்கியை அணிந்ததும் காப்பியமன்று. ஆடம்பரமான சொற்களும், ஆடம்பரமான அணிகளும், அணிந்தமைபற்றி ஓர் செய்யுளோ, வசனமோ காப்பியமாவது இல்லை. காப்பியத்தின் இலக்கணத்தை வடமொழி இலக்கிய வல்லுநர் பலர் பலவாறு வகுத்திருக்கின்றனர். ஒருவரை ஒருவர் எசியும், பேசியும், தாங்கியும், மறுத்தும் எழுப்பிய நூல்களோ அனந்தம். அந்த வாத பிரதிவாதங்களில் யாம் புகுவேமாயின், சூறுவளியில் சிக்

குண்ட சிறு துரும்பின் நிலையை எய்துவேம் என்பது திண்ணம். பின்னர் இவ்வாராய்ச்சியை முடித்தபாடுமில்லை. எனினும், பலவற்றையுந் தொகுத்து ஓர் முடிவுகாட்டிய ஒரு பெரியாரின் வழி பற்றி யாமும் ஓரிலக்கணம் வரைகின்றனம்.

சுவை பயப்பதே காப்பியம். அதுவே காப்பியத்தின் உயிர். சுவை என்றால் மெய்ப்பாடு. அது ரசம் எனவும்படும். பிறிதோரிடத்தில் சுவைகளைப்பற்றி விரிவாய் ஒல்லும் வகை எடுத்து ஆராய்வாம். சொல்லும் பொருளும் அதன் உடல். உவமை முதலாம் அணிகள், கழுத்துக்கு முத்துமாலை பொன்னட்டியல் போல காப்பிய உடலான சொல்லுக்கும், பொருளுக்கும் உகந்த ஆபரணங்கள். ஆகவே, சொல்லும் பொருளும் அணியும் பாவமும் மெய்ப்பாடும் ஆகிய இவையே காப்பிய உறுப்புக்கள். இவை அமையும் அமைதிகொண்டே அது உலகிடை பெருமையோ சிறுமையோ பெறும். இவையேயன்றிக் காப்பியத்தின் ஆழத்தை அளந்தறியும் கருவிகள் வேறு எவையுமில்லை என்று திடமாகக் கூறலாம்.

சிலர் சாதியும், குலமும், சமயமும், நாகரிகமும், காலமும் முதலாம் கருவி கைக்கொண்டு காப்பிய ஆராய்ச்சியில் நுழைந்து, குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொண்டவன் கதைக்கு இலக்காகி, குட்டிச்சுவரைக் கோபுரம் என்பர்; கோபுரத்தைக் குட்டிச் சுவர் என்பர்.

(தொடரும்)

30

"தொன்மை" எனும் சொல் வரலாறு

நல்லூர்
சுவாமி ஞானப்பிரகாசர் அவர்கள் எழுதியது

"ஞாயிறு" எனப் பெயர் புனைந்த இப் புது வெளியீட்டின் அமைச்சர் ஆவார், தமிழ் மொழியின் தொன்மையைச் சுட்டிய கட்டுரை ஒன்று இதற்கு உதவுமாறு என்னை அன்போடு ஏவியுள்ளார். தமிழின் தொன்மையை விளக்கும் முகத்தால், "தொன்மை" எனுஞ் சொல்லின் வரலாற்றையே எடுத்து ஓதுதல் நன்றும் என உன்னி, இதனை வரைகின்றேன்.

தொன்மை என்பதும், தொல்லை தொன்று என்பனவும் ஒரே சொல்லின் பல வடிவங்களாம். "பழையதாகிய நிலை" என்பது இப்பல சொற்களின் ஒரு பொருள். "தொன்மை உடையார் தொடர்பு" (நாலடியார் 216)— "தொல்லைக்கண் நின்றார்" (திருக்குறள் 806)— "தொன்று மொழிந்து தொழில் கேட்ப" (மதுரைக் காஞ்சி 72) ஆதிய வழக்குகள் காண்க. இவற்றோடு புகழ் எனவும், பழையதொரு பொருண் மேற் செய்த நூல் எனவும் பொருள் கொள்கின்ற 'தோல்' எனுஞ் சொல்லும் தொன்மையையே விளக்கும். "தொல்வரவுந் தோலும் கெடுக்கும்" (திருக்குறள் 104) எனும் மேற்கோளில் தொன்மையா லுண்டாவதே தோல் ஆகிய புகழ் என்பது பெறப்படுதல் காண்க. இவை நான்கு சொற்களையும் ஒப்பு நோக்குங்கால், "தொல்" எனும் அடிதான் தொல்லை, தொன்மை, தொன்று, தோல் என வேறுபட்டு நிற்கின்றமை புலமாகும். இவ்வேறுபாட்டினுக்குப் பிற எடுத்துக்காட்டுகள் சில பின்வருவன:—

நல்,	—	நன்மை, நன்று,	நன்றி
எல்,	—	எல்லை,	என்று
நாள்	—	நான்று,	ஞான்று
நாண்	—	நான்று	

கோள், — கொளு, கொள்கை, கோள்
கொல், — கொன்றல், கோறல்
செல், — சென்றல், சேறல்

இவற்றுள் ஐ, கை, மை, று (து) ஆதிய விகுதிகள் எழுந்த வரலாற்றைப் பின்னொரு அமயத்திற் காட்டுவாம். இனி, தொல் என்னும் அடி தோன்றியது எவ்வாறு? அது தமிழ்த் தலை யடிகளுள் ஒன்று? அன்றி வழி யடிகளுள் வைத்து எண்ணப்படத் தக்கதா? (தலையடி ஆவது பல சொற்கட்குத் தோற்றுவாயாய், தான் பிறிதொரு அடியினின்று பிறவாததாய் இருப்பது. வழியடி ஆவது தானே தலையடியினின்று பிறந்ததாயினும், தனக்குப் பின் வேறு சொற்கட்குத் தோற்றுவாயாயும் நிற்பது.) இத் துறையை மேல் ஆராய்வாம்.

தொலை – துலை.

தொல் என்பது ஓர் பண்புச் சொல் ஆகலான், அதற்கு முற்பட்ட ஒரு பெயர் அன்றேல், வினை உருவமும் வேண்டப்படுதல் முறையாகும். அவ்வுருவம் யாதெனில், தொலை–தல் ஆம். தொலைதலின் அடிப்பொருள் சேய்மைக்கண் செல்லல் என்பது. அடிப்பொருள் ஆவது ஆதிப்பொருள். (எமது "அடி"யும் வடமொழி "ஆதி"யும் ஒரு சொல்லேயாய்த் திகழ்தலை ஈண்டு உணர்க.) தொலைதலின் ஆதிப் பொருளினோடு சார்புபற்றிப் பொருந்திய பொருள்களே இலக்கியங்களில் மிக வழங்கும். போரிற் புறங்காட்டியவன் தூரத்தில் உலவுதலினால், "தொலைதல்" அப் புறங்காட்டலை விளக்கும்; "ஒருவனை யொருவன் அடுதலும் தொலைதலும்" (புறநானூறு 76) என்றதிற் போல. அப்பால், சென்று சென்று தேய்தலாகிய "குறைத"லும் (திருக்குறள் 762) "சோர்த"லும் (மணிமேகலை 24, 99) "அழிந்து பட"லும் (பதிற்றுப்பத்து 43, 31) எனும் கருத்துக்களையும் இத் தொலைதல் சொல் அடைகின்றமை காண்க. சேய்மைக்கண் ஓடி மறைதல் ஆகிய தொலைதலே "தோற்றல்" என்றலையும், "தோல்வி" எனுஞ் சொல் தொலைதலினின்று பிறத்தலையும் ஈண்டு கண்டு மகிழ்க. இங்கு எடுத்துக் காட்டியவை தொலை, தோல், தோல்வி, தோல்தல், தோற்றல்

என அடி உயிர் நீண்டும் விகுதி பெற்றும் வரும். தொலைதல்தான் தொலைத்தல் தொலைச்சுதல் என ஆகுதலும் ஒன்று. இவை புறங் கொடுத்து ஓடச் செய்தல் (திருக்கோவையார் 113) முடித்தல் (புறநானூறு 29) கொல்லுதல் (மலைபடுகடாம் 176) எனும் அருத்தங்களைப் பெறும். தொன்மை ஆதிய நான்கு சொற்களி லும் பழையதாகிய நிலை எனும் பொருள் சேர்ந்தமை எவ்வா றெனின், காலத்தளவில் சேய்மைக்கண் உள்ளது யாது அது பழையது என்றபடி. அண்மையான காலத்தில் உள்ளது நிகழ்வு; சேய்மையான காலத்தில் உள்ளது தொன்மை எனக் காண்க.

அப்பால், தமிழ் மொழியின் ஒலி வேறுபாடுகளை உற்று நோக் கும் இடத்து, ஒகரம் உகரத்தினின்று பிறந்தமை தோன்றும். உகரம் இயல்பிலே ஒகரமாய் மாறும் தன்மை பூண்டிருத்தலைப் பல எடுத்துக்காட்டுக்களின் வாயிலாய் அறிந்துகொள்ளலாம். பின் வருங் காட்டுக்களை ஆராய்க:—

உள்கு	—	ஒல்கு
குதித்தல்	—	கொதித்தல்
துளை	—	தொளை
நுதுத்தல்	—	நொதுத்தல்
புழை	—	பொளி
முகிழ்	—	மொக்குள்

ஆகலின், ஒகரமுதற் சொற்கள் வான்முறையிற் பிற்பட்டன வும், உகரமுதற் சொற்களே முற்பட்டனவுமாம் என நாம் ஓர் கட்டளையை ஆக்கிக்கொள்ளல் சாலும். இக்கட்டளையின் வழியே, தொலைதல் எனுஞ் சொல் முதற்கண் துலைதல் என நின்றிருத்தல் வெளிப்படும். அங்ஙனம் "துலைதல்" தொன்மை எனுஞ் சொற் குப் பிறப்பிடமாயின், அத் துலைதல் சொல்லின் வரலாறுதான் யாது? துலை=சேய்மைக்கண் செல் எனப் பொருள் கொள்ளல் எங்ஙனம்? இவ்வினாவிற்கு விடை இறுக்கும் பொருட்டுத் துலை எனுஞ் சொல்லிற்கும் அதனையொத்த துழ ஆதியவற்றிற்கும் தோற்றுவாயாய் விளங்குகின்ற உலவு எனும் தலையடியை இப் போது நோக்குதல் வேண்டப்படும். உல—வு எனும் அடி உலாவு,

உழல், உலே, உல எனவும் சிறிது சிறிது வேற்றுமை கொண்ட பொருள் நோக்கி விகற்பித்து நிற்கும் என உள்ளத்தில் அமைத்துக் கொண்டு, பின்வரும் சொற்கூட்டத்தை ஆராய்க:—

உலவு,	உலாவு,	உலா—ஞ்சு,	உழு—ல்,	உலே,	உல
குல—வு,	குலா—வு,	குழை,	குலே		
சுல—வு,	சுலா—வு,	சுழல்,	சுற்று		
துழ,	துழ—வு,	துழா—வு,	துலே,	துலா (பெ.)	

உள் நோக்கி நோக்கி வரல்

இச்சொற்கள் யாவற்றினும் ஆதிப் பொருளை ஆராயுங்கால், உள் நோக்கி நோக்கி வரல், அன்றேல் சுற்றுதலே, அப்பொருள் என வெளிப்படும். சென்றுகொண்டிருப்பான் ஒருவனை நோக்கி: உள்ளால் வருக, உள்ளால் வருக எனக் கூறின், அவன், உள் நோக்கி உள் நோக்கி வருமிடத்து, உழல்கின்றவன் எனப்படுவான் அன்றோ? உள்ளால் வருதலே உழல்தல் ஆதிய உருவங்களது அடிப் பொருள் என்க. ஆகலின் "உள்" என்பது இச் சொற்களுக்கு அடிப்படையான சொல்லாகும். தமிழ்ச் சொற்களின் ஆதிப் பொருள் எல்லாம் அண்மை, சேய்மை முதலான இத்தகைய ஆதி உள்ளக்கிடக்கைகளையே சுட்டுவனவாய், பின், சிறப்பியல்பு சுட்டல், சார்புபற்றி விரிதல், இனந்தழுவல், இயைபுடைமை, எதிர் நிலே, வழக்காறிழிதல் எனும் வாயில்களால் வேறுபட்ட பொருள்களாய் மாறி வருகின்ற நுட்பத்தைப்பிறுண்டு விரித்துள்ளோம். (எமது "தமிழ்ச் சொற்பிறப் பாராய்ச்சி" நூலினுட் காண்க.) அவ் ஆதி உள்ளக்கிடைக்கைகளுள் ஒன்றாகிய உள் (உள்ளுக்கு) என்பது தான், பின், உள் நோக்கி நோக்கி வரல் அன்றேல் சுற்றுதல் எனும் பொருளாக விரிந்து, எமது எடுத்துக்காட்டில் உலவு ஆதிய முதல் வரிச் சொற்கள் ஆயின என்க. அவற்றுள் சில மேலும் விரிந்த பொருட்களில் வழங்குதலைப் பின்னால் எடுத்தோதுவாம்.

(தொடரும்)

34

பரஞ்சோதியாரின் பாடற்றிறம்

திரு. சாமி வேலாயுதம்பிள்ளை அவர்கள், பி. ஏ., எழுதியது

சேக்கிழா ரியற்றிய திருத்தொண்டர் வரலாறும், பரஞ்சோதி யாரியற்றிய திருவிளையாடற் கதையும் இறைவனை வழிபடுவோர்க்கு இரு கண்ணெனக் கழறுவர் கற்றறிந்தோர். இவற்றுள் முந்திய தொண்டர் வரலாறே பல் துறைகளிற் சிறந்த வலக்கண்ணாய் விளங்குகிற தென்பதை யாவரும் ஒப்புவர். எனினும், குறைந்தது இரண்டொரு துறையிலாவது திருவிளையாடலுஞ் சிறந்து விளங்கு வது பாராட்டத் தகுந்ததே. அவைதாம் இனிய இசைப் பாக்க ளும், உள்ளத்தை உருக்கும் இரங்கற்பாக்களும் விரவி வருவனவாம்.

தொண்டர் வரலாற்றுள்ளும் இசைப்பாடல்கள் ஆங்காங்குக் கையாளப்பெற் றிருப்பனவற்றைக் காணலாம். ஆனால் அவை சேக் கிழாரா லியற்றப் பெற்றனவல்ல. தோணிபுரத்தோன்றலும், சொற் கோவும், வன்றொண்டப் பெருந்தகையும், காரைக்காலம்மையாரும் இயற்றிய பதிகங்களுட் சிறந்தவற்றையும், அன்னார் வரலாற்றை ஒட்டி வருவனவற்றையும் பொறுக்கித் தம் நூலுட் பதித்திருக் கின்றனர். இவை பொன்னிடைத் திகழும் மணிபோல் மிளிர்கின் றமையின், தொண்டர் வரலாறுகளைப் படிக்குங்கால் இவைகளையும் விடாது பயில நேரும்.* இதற்குச் சான்றாகவே உமாபதிசிவ மியற்றிய சேக்கிழார் வரலாற்றுள், சேக்கிழார், தொண்டர் வரலாறு களை நடாத்திவந்த முறையைக் கூறுகையில், சொல்வதாவது:—

சிறப்புடைய மூவர்முத லிகடிருவாய் மலர்ந்த
திருநெறிய தமிழ்மூவர் திருமந்திர மாலை
யறப்பயனுங் காரைக்காற் பேயிரட்டை மாலை
யந்தாதி மூத்தபதிகங் கழறிற் றறிவார்

* இதனால் தொண்டர் வரலாற்றுள் மூவர்தமிழும் அடங்குதல் உற்றுநோக்குக.

மறப்பரிய பொன்வண்ணத் தந்தாதி திருமும்
மணிக்கோவை தெய்வவுலா வையடிகள் வெண்பா
வுறப்பாகத் திருவிருத்த முடலாகப் பொருட்கோ
ளுயிராக நாலடியா னடக்கநூல லெல்லாம்

என்பதாம். இவ்வாறு அவ்வப் பாக்களை அப்படியே எடுத்துக் கையாளுவதற்கு அவர்க்குத் தக்க இடமிருந்ததை அவர் முழுமையும் பயன்படுத்தினர். ஆனல் பரஞ்சோதியாரோ பல படலங்களுள் சில தொண்டர் இறைவனை இன்னிசையாற் பாடினரென்று கூறும் பொழுதெல்லாம் அன்னார் பாடிய அப்பாட்டுக்களை தமக்குக் கிடைக்காதிருந்தமையின், தாமாகவே சிற்சில பாடல்களைப் புனைந்து அத்தொண்டர் கூற்றாகக் கூறினராபினும், பாண்டியன் சுரந்தீர்த்த படலம், சமணரைக் கழுவேற்றிய படலம், வன்னியுங் கிணறும் இலிங்கமு மழைத்த படலம் முதலிய படலங்களுள் ஆளுடைய பிள்ளையார் பதிகங்களைப் பதிக்குமிடம் நேர்ந்தும் பதிக்காது விட்டார். இது மட்டுமா! வாதவூரடிகளுக் குபதேசித்த படலம், பரி நரியாக்கிய படலம், மண்சுமந்த படலம் முதலியவற்றுள் அவ்வடிகள் பதிகங்களைப் பதியாது விடுத்ததன்றி * அதற்குப் பதிலாக அன்னா ரிரங்கிக் கூறிய பாக்களாகப் பல கட்டுப் பாடல்களைத் தாமாகவே இயற்றிச் சேர்த்திருக்கிறார். என் இவ்வாறு செய்தாரென்று உற்று நோக்கின், இந்நால்வரின் அமிழ்தினுமினிய இசைப் பாக்களையும், இரங்கற் பாக்களையும் பதித்துவிட்டால், அவைகளைப் படித்த பின், தம்மால் இன்றியமையா தியற்றப்பெற்ற இசை, இரங்கற்பாக்களைப் படிப்போர் உள்ளங்களை இவை அத்துணை கொள்ளை கொள்ளாவென்று ஒருகால் நினைத்திருக்கலாம் என்று எண்ண இடமிருக்கிறது. இதற்கேற்பவே போலும் மூவர் தமிழைத் தந்நூலுட் பாப்பிய சேக்கிழார் தாமாகவே புனைந்து கூறும் இடமுடைய திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனர் வரலாற்றுள் அந்நாயனர் கூடல் முதல்வரைப் பாடிய பாக்களைப் பற்றிக் கூறுங்கால்,

* இதற்கு மாறாக இப்பதிகங்களைப் பெரும்பற்றப்புலியூர் நம்பி தாமியற்றிய திருவிளையாடலுட் பதித்திருத்தல் காண்க.

திரிபுர மெரித்த வாறுந் தேர்மிசை நின்ற வாறும்
கரியினை யுரித்த வாறுங் காமனைக் காய்ந்த வாறும்
அரியயற் கரிய வாறு மடியவர்க் கெளியவாறும்
பரிவினல் ... ...

பாடினுரென்று அவர் பாடிய பாட்டின் பொருள் கூறினுரேயன்றி அதற்கொப்பத் தாமே தக்க பாடலியற்றிச் சேர்த்தாரில்லை.

இது எவ்வாறுபினும் பரஞ்சோதியார் நால்வ ரோதிய தமிழைத் தம் நூலுட் பதிக்காதுவிட்டதால் நாம் இழந்தது ஒன்றுமில்லை. இதற்கு மாருக நாம் பெற்ற அரும் பாடல்களோ பல. அவற்றை முற் கூறியவாறு இசைப் பாக்கள், இரங்கற் பாக்கள் என இரு திறப்படுத்தி அவற்றின் அழகை முறைப்பட ஆராய்வாம்.

முதலாவதாக, இசைப்பாக்களை எடுத்துக்கொள்ளின் அவைகளை நான்கு படலங்களுட் காணலாம். அவற்றுள் முதலாவதே தடாதகைப்பிராட்டியார் திருவவதாரப்படலத்துள்ளது. 'தனிப்பர முத்தியான முதலைத் துதிசெய்'ப் புகுந்த பரஞ்சோதியார் அம் முதல், முதலிற் 'சத்தியாய்'ப் பின்னர்ச் 'சிவமாயி'ற் றென்று அம்மையாருக்கே முதன்மை கொடுத்து, நூலியற்றப் புக்கதற் கேற்ப இசைப்பாக்களுள்ளும் இவ்வம்மையார் பாடலையே முதற்கண் வைத்திருக்கின்றனர். இதன் அழகை இம்மியும் விடாது பருக அப்படியே எடுத்துரைப்பாம்.

இடைமடக்காய் வந்த இசைப்பா

ஒளியா லுலகீன் றுயிரனைத்து மீன்போற் செவ்வி யுறநோக்கி
யளியால் வளர்க்கு மங்கையற்கண் ணனே கன்னி யன்னமே
அளியா லிமவான் றிருமகளா யாவியன்ன மயில் பூவை
தெளியா மழலைக் கிளிவளர்த்து விளையாட் டயருஞ் செயலென்னே.

அண்டக் குவைவெண் மணற்சிறுசோ ருக்கித் தனியே விளையாடுங்
கொண்டற் கோதாய் படியெழுத லாகா வுருவக் கோகிலமே
கொண்டற் குடுமி யிமயவரை யருவி கொழிக்குங் குளிர்முத்தால்
வண்டற் குதலை மகளிரொடும் விளையாட் டயரும் வனப்பென்னே.

வேத முடிமே லானந்த வுருவாய் நிறைந்து விளையாடு
மாத ரரசே முத்தநகை மானே யிமய மடமயிலே
மாத ரிமவான் றேவிமணி வடந்தோய் மார்புந் தடந்தோளும்
பாத மலர்சேப் புறமிதித்து விளையாட் டயரும் பரிசென்னே.

இதைப் பாடினாள் 'விச்சுவாவசு வெனுமொரு விச்சையன் பயந்த நச்சுவாள்விழி மடந்தை' விச்சாவதி யென்னும் பெயருண்டியாள். அவள் விரும்பியது அம்பிகைதன்னை அன்பினால் வழிபட்டுய்தலே. சுடச்சுட நோற்கப் புகுந்து ஓராண்டு நிறைதலும் அரிய இவ்வின்னிசைப் பாக்களால் யாழ்கொண்டு எத்தினளாக, உடனே அவள் அன்பிற்கும் இப்பாட்டின் இனிமைக்கும் உருகி 'அங்கயற்கண் மடமான்ஓர், சூழிய நுழைமெல் விளங்குழற் குதலைத் தொண்டை வாய் அகவைமூன் றெய்தி, வாழிளங் குழவியாகி யாலயத்து வந்துநின்றுள் வரங்கொடுப்பாள்' என்றதும் வியக்கத் தக்கதன்றே! ''ஆருருவ உள்குவார் உள்ளத்துள்ளே, அவ்வுருவாய் நிற்கின்ற அருளுந் தோன்றும்' என்றார் அன்பின் மிக்க அப்பாடிகள். உள்ளத்துள்ளன்றிப் புறம்பேயும் அவ்வுருவாய் நிற்கின்ற அருளை எழுப்ப இதனினுங் மிகுந்த அன்பும் அழகுமுடைய பாடற் கிடையாதென்பது திண்ணம்.

இவ்வாறு உருகி உள்கியது அம்மையாரின் பெரும் போற்றலையும் அதற்கு மாறாகப் போருளினால் தன்னை எளியளாய்ச் செய்துகொண்ட திருவிளையாடல்களையுமாம். இதற்கு மூன்று பாக்களிலும் மூன்று அரிய எடுத்துக்காட்டுகள் கையாளப்பெறுகின்றன. முதலாவது பாட்டு உலகத்தைத் தனது போறிவின் ஆற்றலால் (சிற்சத்தியால்) ஈன்று, அதைத் தக்க உருவடையும்படி (மீன் தனது சினையைப் பீச்சித் திரும்பிப் பார்த்துத் தன் நோக்கால் செம்மையடையச்செய்வதுபோற்) செய்யும் அங்கயற் கண்ணம்மை தான் உலகிற்குத் தாயாயிருந்துந் தன் தண்ணளியால் இமவான்மகளாகியும், தான் உலகனைத்தும் புரக்கும் ஒப்பற்ற முதல்வியாயிருந்தும் ஆவியன்ன சிறு மயில் பூவை கிளிகளை வளர்த்தும் வரும் எளிமை என்னேயென்று வியப்புறுதல் எத்துணைப் பெரு மகிழ்வையும், தனக்கும் எளியளாய்விடுவாளென்னும் எண்ணத்தால் உண்டாகும் இறும்பூதையுங் குறிக்

கின்றது! இவ்வாறே மற்றை யிரண்டு பாடல்களிலும் அண்டக் குவையை ஆக்கியாடும் அம்மை சிறு முத்துக்களால் சிறு மகளி ருடன் ஆடும் எளிமையையும், மறை முடிவில் இன்புருவாய் நின்று விளையாடும் அம்மை மாதர் இமவான்மனைவியின் மார்புந் தோளுஞ் சேப்பத் தன் தாளுஞ் சேப்ப விளையாடும் எளிமை யையும் உன்னி என்றுமடியார்க் கெளிவந்தா யெந்தாயே யென்று பாடினராக உடனே இப்பாட்டின் பொருளுக்கிசையவே அம்மை யார், விளையாடும் பிள்ளைப்பருவத்துடன் வந்து நின்றது பெரி தும் பொருத்தமுடையதொன்றே. இம்மூன்று பாடல்களுள்ளும் இவ்வம்மை கன்னி யன்னத்திற்கும், படியெழுதலாகாவுருவக் குயிலுக்கும், முத்தநகை மானிற்கும், மடமயிலுக்கும் ஒப்பிடப் பட்டிருத்தல் எத்துணை அழகு! இன்னும் அமர்ந்து செல்லும் இயல்புடைய இப்பாட்டுகளின் இசையும், ஒவ்வொரு சொல் லின் ஒலியும் மெல்லியலை யுடையதா யிருத்தலையும், பொருளும் ஒப்பனையும் மிக்க அழகுடன் அமைந்துகிடத்தலையும், இப்பாடல் களிற் பொதிந்துள்ள இன்னோரன்ன பல்வேறு நயங்களையும் எத்துணைகாலமும் உண்ண வுண்ணத் தெவிட்டாதென்பது திண் ணமே.

இனி, இச்சுவையுடன் நில்லாது இன்னும் புதுச்சுவையை நாடிச் செல்வோன், இதற்கடுத்தபடியாகக் காணநிற்பன, விறகு விற்ற படலத்தில் இக்கன்னியை அன்னையாக்குவித்த திருவாளன் தன்னடியான் பாணபத்திரனின் மானத்தைக் காக்கும்பொருட்டு முதியோனாய் வந்து வடபுலத்திருந்துவந்த ஏமநாதனை வெருட்டி யோட்டிய அருட்டிருப்பாக்களாம். அப்பாட்டுகள் வருமாறு:—

இடைமடக்காய் வந்த இசைப்பா

விரைசார் மலரோ னறியா விகிர்தன்
அரசாய் மதுரை யமர்ந்தா னென்னே
அரசாய் மதுரை யமர்ந்தா னவனென்
புரைசார் மனனும் புகுந்தா னென்னே.

பாடன் மறையுந் தெளியாப் பரமன்
கூடல் கோயில் கொண்டா னென்னே
கூடல் போலக் கொடியே னகமும்
ஆடல ரங்கா அமர்ந்தா னென்னே,

நீல வண்ணன் தேரு நிமலன்
ஆல வாயி லமர்ந்தா னென்னே
ஆல வாயா னலரில் வாசம்
போலென் னுளமும் புகுந்தா னென்னே.

இம்முப்பாடல்களிலும் முறையே மலரோன், மறை, மால் ஆகிய மூவர்க்கும் எட்டாதிருந்தும் மதுரை, கூடல், ஆலவாயென்னும் முப்பெயருடைய ஒப்புயர்வற்ற பதியின்கண் வேந்தாயமர்ந்திருப்பதை அன்பர்களுள்ளத்து புரையை நிரப்பும் நீர்போன்றும், அரங்கிலாடுங் கூத்தன்போன்றும், மலரில் நாற்றம்போன்றும் விரவியிருப்பதற்கொப்பிடும் அருமையும், பெருமிதமும், வியப்பும் வியக்கத்தக்கதொன்றே. திருவிடைமருதில் தன்னையே போற்றிசெய்த இறைவன் ஈண்டும் தன்னையே புகழ்ந்ததும், 'நின்னுவார் பிறரன்றி நீயேயானாய்' என்பதற்கிணங்க வேறு பிறரைப் புகழ வழியில்லாமையையே குறிக்கிறது.

இதற்கடுத்த படலமாகிய பலகையிட்ட படலத்தில் இறைவற்குக் கழிபெருங்காத லளிக்கும் அகப்பொருள், கழிபெருஞ் சிறப்புடைய இன்னிசைப்புலவனால் கழிபெரும் பொருளுடைய பாடல்களாக இயற்றப்பெற்றிருத்தல் பேருவகை அளிப்பதேயாகும். அப்பாடல்களாவன:—

இடைமடக்காய் வந்த இசைப்பா

மாதர் நகையாய் மதுரேச ருண்பலிக்கெம் மனைவாய் வந்து
காதன் முகத்தரும்பிக் காட்டியென் சிந்தை கவர்ந்தார் போலும்
காதன் முகத்தரும்பக் கையறவு தீரக் கலப்பேன் பாதி
பேதையுரு வாயிருந்தார் நாணிவிழித் தாவி பிழைத்தேன் போலும்.

ஒண்ணுதலாய் வெண்டலைகொண் டுண்பலிக்கு நம்மனையி னூடே கூடற்
கண்ணுதலா ருள்ளாளக் கானமிசைத் தென்னுள்ளங் கவர்ந்தார் போலுங்
கண்ணுதலார் பாடு மவிநயங்கண் டாகங் கலப்பேன் பாதி
பெண்ணுருவ மாயிருந்தார் வெள்கிவிழித் தாவி பெற்றேன் போலும்.

ஐயரியுண் கண்ணாய் திருவால வாயுடையா ரையங் கொள்வான்
மையனகை செய்தென் வனமுலையின் மேற்செங்கை வைத்தார் போலும்
மையனகை செய்தென் வனமுலைமேற் கைவைப்ப மாழ்கிச் சோர்வேன்
றையலிடங் கண்டு நடுநடுங்கி விழித்தாவி தரித்தேன் போலும்.

ஈண்டு முற்குறித்த முப்பெயருடைய பதியுடையாராகிய ஆண்டவன் உயிராகிய தலைவிக்குத் தம்மைக் காட்டியும் கேட்பித்தும் உறுவித்தும் பேரின்படையச் செய்யுங்கால், அவ்வுயிர் தானென்ப தற்றுத் தலைவனுடன் இரண்டறக் கலக்கப் புகுகையில் தன்னாற்றலினும் போராற்றலுடைய (சத்தியுடைய) தலைவனின் பேறிவுத்திறத்தை நோக்கி அடக்கமுற்றுத் தன்னையுந் தந்தலைவனையும் உள்ளவாறே கண்டு (உயிர்) அறிவுற்றது. எத்துணை அழகாய்க் குறிக்கப்பட்டிருக்கிறது! இவ்வழகை யோர்ந்த அழகன் பொற்பலகை யிட்டதும் பொருத்தமுடையதே.

கடைசியாக, இசைவாதுவென்ற படலத்தில் பாணபத்திரனின் மனைவி இறைவனின் மாறுபட்ட செயல்களைக் குறித்து வேண்டுதல் வேண்டாமை யற்றவனின் பெருமையை யுணர்த்துவதுடன் நில்லாது, அத்தகைச் செயல்களுக்கு உட்பொருள் உண்டாயிருத்தலைக் குறிப்பா லுணர்த்துவது மிக்க நயம்பட்ட தன்றோ? அத்தகைப் பாக்களாவன:—

இடைமடக்காய் வந்த இசைப்பா

குடங்கை நீரும் பச்சிலையு மிடுவார்க் கிமையாக் குஞ்சரமும்
படங்கொள் பாயும் பூவணையுந் தருவாய் மதுரைப் பரமேட்டி
படங்கொள் பாயும் பூவணையுந் தருவாய் கையிற் படுதலைகொண்
டிடங்க டோறு மிரப்பாயென் றேசு வார்க்கென் பேசுவனே.

தேனுர் மொழியார் விழிவழியே செல்லா தவர்க்கே வீடென்று
நானு வேதப் பொருளுரைத்தாய் நீயே மதுரை நம்பரனே
நானு வேதப் பொருளுரைத்தாய் நீயே பாதி நாரியுரு
வானு யென்று பிறர்பழித்தா லடியேன் விடையே தறைவேனே.

வரத னாகி யெவ்வுயிர்க்கு மாயா விருத்தி வலியடக்கிச்
சரத மான வீட்டின்பந் தருவாய் மதுரைத் தனிமுதலே
சரத மான வீட்டின்பந் தருவாய் வீடு பெறுவார்போல்
விரத யோக நிலையடைந்தா யென்பார்க் கென்னுன் விளம்புவனே.

ஈண்டுச் சிறிது அன்பையுங் காட்டுபவர்க்குப் பேரின்பளிக்கும் பெம்மான் தான் ஒன்றுமில்லாதவர்போற் படுதலையிற் பிச்சை

புருத்தைதயும், மகளிரின்பத்தை வெறுத்தவர்க்கே வீடளிப்பே மென்று மறைகளாற் கூறிவிட்டுத் தாமே இடைவிடாது அவ் வின்பையே அடைந்துகொண்டிருத்தலையும், யாவர்க்கும் வரையாது கொடுக்கும் வள்ளலா யிருந்து, எல்லா வுயிர்களையும் வீட்டுட் செலுத்துவோர்தாமே வீடு பெறும் முயற்சியி லிருப்பவர் போற் பொறிவாயி லைந்தவித்துச் செயற்கரிய செய்யும் நிலையில் விளங்கிக்கொண்டே யிருத்தலையுங் குறித்து, இம்மாறுபாட்டின் உட்பொரு ளுணரமாட்டார்க்கு யான் எவ்வாறு விளங்கவைப்பே னென்று கூறல் வஞ்சப்புகழ்ச்சி யணியாம்.

இவ்வாறு இப்பாக்கள் யாவும் சிலப்பதிகாரத்தின் வரிப் பாடல்கள்போன்று மும்மூன்று பாடல்களாய், இடைமடக்கை யுடையனவாய், ஒரு பொருளையே வெவ்வேறு சொற்களுடனும், வெவ்வேறு எடுத்துக்காட்டுகளுடனும் வெகு அழகாய் நெஞ்சுட் பதிப்பனவாய், உள்ள உணர்ச்சியைப் பெரிதும் எழுப்பி இன்புறச் செய்வனவாய் இருக்கின்றன. இவ்வாறு இனிய சொற்சுவை, பொருட்சுவை தோய்ந்து, இசைச்சுவையிலும் இனிமை பயப்பன வாய், இறைவன் பெருமையில் இன்புறுத்தும் அரிய பாடல்களைப் பயிலாதுங், கேட்டு மகிழாதும் நம் தமிழ் இன்னிசையாளரும், தமிழ் மக்களும் இந்துஸ்தான், வடுகு, கன்னடம் முதலிய *வெற்றுரைகளாலாகிய இசைப் பாக்களையே பெரிதும் விரும்பி இவை போன்ற அரும்பொருளுரைகள் இருக்குமிடமுந் தெரியாதிருப்பது இவர்க்கு என்ன அழகு! என்ன ஆற்றல்!! என்ன பெருமை!!!

இனி, இதற் கடுத்த கட்டுரையில் இத்திருவிளையாடலில் விரவிவரும் இரங்கற் பாக்களை ஆராய்வாம்.

* இண்டு இவைகளை வெற்றுரையென்றது எற்றுக்கெனின், இம் மொழிகள் பயிலாத தமிழ்ப் பெருமக்களுக்கு இவை பொருளற்ற புன்சொல்லாதலி னென்க.

42

பாரவி என்னும் வடமொழிப் புலவர்

திரு. கு. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை, பி. ஏ. எழுதியது.

1

பாரவியென்பார் வடமொழிப் பெருமைக்கு இலக்காக விளங்கும் இரகுவமிசம், குமாரசம்பவம் முதலிய பஞ்ச மகாகாவியங்களுள் ஒன்றாகிய கிராதார்ச்சுனீயம் என்னும் ஒப்புயர்வில்லாத சிறந்த நூலின் ஆசிரியராவர். வடமொழிப் புலவர்களுள்ளே பாரவியொருவரே பொருளமைதிபெற நூலியற்றும் வன்மை மிக்கவராய் விளங்கினர். அன்னார் சரித்திர வரலாறுகளையும் அவரியற்றிய நூலின் அருமை பெருமைகளையும் ஒரு சிறிது ஆராய்ந்து வெளிப்படுத்துதல் முக்கியமாக வேண்டப்படுவதொன்றாகும்.

2

வடமொழிப் புலவர்களுட் பெரும்பாலார் தாமியற்றிய நூல்களில் தம்முடைய வாழ்க்கைக் குறிப்புகளொன்றையும் வரைந்திலர். பவபூதி, பாணபட்டர் முதலிய புலவர்களது நூல்களில் அவர்களது சரித்திரக் குறிப்புக்கள் சில காணப்படுகின்றன. பாரவியோ தமது நூலில் தம்மைப்பற்றிய ஒரு குறிப்பையும் வரையாது விட்டனர். ஆகையால், பாரவியின் வரலாறுகளை ஆராய்ச்சி செய்யப் புகுவோர் அகச்சான்று, புறச்சான்று ஆகிய இரண்டு சான்றுகளையும் சரிவரப் பெறாமல் இடர்ப்படுகின்றனர்.

பாரவியின் காலம் மாத்திரம் இரண்டு சாசனங்கள் மூலமாக நிச்சயஞ்செய்யக்கூடியதாக விருக்கிறது. கி. பி. 634-ம் ஆண்டில் ஏற்பட்ட சாசனமொன்றில் காளிதாசன், பாரவி என்னும் இருவர் பெயர்களும் ஒருங்கு சேர்த்து எழுதப்பட்டுள்ளன. இச் சாசனத்தால் பாரவி ஏழாவது நூற்றாண்டில் காளிதாசனுக்குச் சமமான ஓர் புலவராகக் கருதப்பட்டனர் என்பது புலப்படுகின்

றது. ஐந்தாவது நூற்றாண்டின் பிற்பகுதியில் ஏற்பட்ட சாசன மொன்றில் துர்விநிதன் என்னும் ஓர் அரசன் கிராதார்ச்சுனியத்தின் ஓர் பகுதிக்கு உரை எழுதினதாகக் கூறப்படுகின்றது. இதனால் ஐந்தாம் நூற்றாண்டின் பிற்பாகத்தில் பாரவியின் புகழ் மிகப் பரவியிருந்தது என்பது புலப்படுகின்றது. ஒரு புலவருடைய நூல்கள் எல்லாராலும் படிக்கப்பெற்றுப் புகழடைவதற்குப் பல வருடங்கள் கழியவேண்டும். எல்லாராலும் இலேசாக விளங்க முடியாத நூலை எழுதிய பாரவியின் புகழ் எங்கணும் பரவ ஏறக்குறைய நூறு வருடங்கள் கழிந்திருக்கவேண்டும். ஆகையால், பாரவி நாலாவது நூற்றாண்டின் நடுப்பகுதியில் இருந்திருக்கவேண்டும் என்பது ஒருவாறு துணியப்படும்.

பாரவி காலமும் காளிதாசன் காலமும் வேறு என்பதை அவர்கள் நூல்நடைகள் நன்கு புலப்படுத்துகின்றன. காளிதாசன் காலத்தில் வடமொழி இயற்கைநலனோடு திகழ்வதாயிற்று. பாரவி காலத்திலோ அம்மொழி இயற்கை நலன் குன்றிச் செயற்கை நலன் மிகுந்து விளங்கியது. கிராதார்ச்சுனீயம் செயற்கை நலன் மிகுந்து விளங்குவதால் பாரவிகாலம் காளிதாசன் காலத்திற்குப் பிற்பட்டது என்பது தெள்ளிதிற் புலனாகின்றது.

பாரவி எவ்வூரிற் பிறந்து வளர்ந்தார் என்பது அறிய முடியாமல் இருக்கின்றது. அவர் கடல் அலைகளைப்பற்றி மிக விளக்கமாகக் கூறுவதாலும், இமயமலையைப்பற்றிக் கூறிய பகுதிகள் விளக்கமின்றி யிருத்தலாலும் அவர் கடல்வளம் மிகுந்த தென்னாட்டில் இருந்தவர் என்று எண்ண இடமிருக்கிறது.

3

இக்காலத்தில் பாரவியின் நூலாக விளங்குவது கிராதார்ச்சுனீய மொன்றுமே. மகாகாவியமாகிய கிராதார்ச்சுனீயத்தை இயற்றும் வன்மையையுடைய அவர் வேறு நூல்களையும் இயற்றி யிருப்பாரென்று எண்ணவேண்டி யிருக்கிறது. ஆனால், அவைகள் எல்லாம் நாளடைவில் அழிந்துபோயினபோலும்.

வடமொழிக்கல்வி பெரிது முடையவர்களே பாரவியின் கவிதை நலத்தை நன்கு அறிய வல்லவர்கள். அவர் தமது நூலிடையே அரும் பொருள்களைக் கூறும் வழக்குடையர். பாரவியின் கவிநடை காளிதாசன் பவபூதி முதலியவர்களது கவிநடை போலச் சுவை பயப்பதன்று. பாரவியின் நூல் கடினமாக விருத்தலால் அதை வாசிப்பவர் தொகையும் மிகக் குறைந்ததாகும்.

4

பாரவியின் கிராதார்ச்சுனீயம் மகாபாரதத்தின் வழிநூலாக இயற்றப்பெற்றுள்ளது. அதில் அடங்கியுள்ள கதையிற் பெரும் பாகம் முதல் நூலை ஒத்திருக்கின்றது. நூலின் சிறப்புக் கருதி சில பாகங்கள் மாத்திரம் மாற்றப்பெற்றுள்ளன. மகாபாரதத்தில் தெய்வசம்பந்தமாய் நிகழும் சம்பவங்கள் கிராதார்ச்சுனீயத்தில் மானிடசம்பந்தமாக நிகழ்வதாகக் கூறப்படுகின்றன. இந்திரதவத்துக்குரிய மந்திரத்தை வியாசர் முதலில் உதிஷ்டிரருக்கு உபதேசித்ததாகவும், பின்னர், அவர் அதை அருச்சுனனுக்கு உபதேசித்ததாகவுங் கூறப்படுகிறது. கிராதார்ச்சுனீயத்தில் வியாசர் நேரே அம் மந்திரத்தை அருச்சுனனுக்கு உபதேசித்ததாகக் கூறப்படுகிறது. மகாபாரதத்தில் அருச்சுனன் இந்திரகிலமலைக்கு மனோவேகமாய்ச் சென்றான் என்று கூறப்பட்டுள்ளது. கிராதார்ச்சுனீயத்தில் இயக்கனொருவன் வழிகாட்டிச் செல்ல அருச்சுனன் அவன்பின் சென்றதாகக் கூறப்பட்டிருக்கிறது. இந்திரகில மலையில் அருச்சுனன் செய்யுந் தவத்தைக் கெடுக்க இந்திரன் துறவிவேடம் பூண்டு சென்றமை இரு நூல்களிலுங் கூறப்பட்டிருக்கிறது. கிராதார்ச்சுனீயத்தில் இந்திரன் தேவப்பெண்களைக்கொண்டு அருச்சுனனது தவத்தைக் கெடுக்க முடியாதுபோன பின்னரே, தான் துறவிவேடம் பூண்டதாகக் கூறப்பட்டுள்ளது. மகாபாரதத்தில் சிவன் வேட வடிவம் பூண்டு உமையோடும், தேவகணங்களோடுஞ் சென்று அருச்சுனனோடு யுத்தஞ்செய்ததாகக் கூறப்பட்டுள்ளது. கிராதார்ச்சுனீயத்தில் சிவன் ஆயுதபாணிகளாகிய வேடர்களோடு சென்று யுத்தஞ்செய்ததாகக் கூறப்பட்டிருக்கிறது. வேடவடிவம் பூண்ட சிவன் அருச்சுனனை ஆட்கொண்ட முறை

யும் கிராதார்ச்சுனீயத்தில் வேறுபடக் கூறப்பட்டிருக்கிறது. யுத்தஞ்செய்யும் வேடன் அருச்சுனனைக் கட்டிப்பிடிக்க அருச்சுனன் மயக்கமடைந்தான். மயக்கந் தெளிந்தபின், தான் சிவ லிங்கத்திற்குச் சாத்திய மாலையையே வேடனுந் தரித்திருத்தல் கண்டு, கடவுளே தன்னோடு யுத்தஞ் செய்கிறார் என்பதை நன்கு அறிந்தான். கிராதார்ச்சுனீயத்தில் சிவன் போர்புரிகையில் ஆகாயத்திற் கிளம்பினதாகவும், அருச்சுனன் அவரைக் கீழே கொணரும்பொருட்டுக் காலிற் பிடித்ததாகவும், சிவன் அருச்சுனனது வீரத்தன்மையில் விருப்புடையாராய் அவனிடம் அன்புகாட்டியதாக வும், அவனுக்குப் பாசுபதாஸ்திரத்தைக் கொடுத்ததாகவும் கூறப் படுகிறது.

5

பாரவி இல்லறதருமம் நடாத்துங்காலங்களில் மிக் வறுமை யுற்றிருந்ததாகவும், அவ்வறுமையை நீக்குவதற்கு அரசனொருவ னிடஞ் சென்று தனது கவிவன்மையைக் காட்டியதாகவும், அவ் அரசன் மிகவும் பிரியமுள்ளவனாய், அவரைத் தனது சமஸ்தான வித்துவானாக்கினதாகவும் பழைய சரித்திரங்கள் கூறுகின்றன.

6

வடமொழி இயற்கைநலனோடு இருந்தகாலத்தில் காளிதாசன் பெரும் புலவனாக விளங்கினான். அவ்வாறே அம்மொழி செயற்கை நலனோடு கூடிய காலத்தில் பாரவி பெரும் புலவராக விளங்கினார். மாகர் என்னும் புலவரொருவர் கிராதார்ச்சுனீயத்தில் மயங்கி அதிலும் விசேடமானதொரு நூலை இயற்றவேண்டுமென்று நிச் சயித்துச் சிசுபாலவத மென்னும் நூலை இயற்றினார் என்று பழைய சரித்திரங்கள் கூறுகின்றன. பாரவி இயற்றிய கவிகளின் ஆழ்ந்த கருத்துக்கள் நயங்களைப்பற்றி மற்றொருமுறை விரித்தெழுதப்படும்.

மணியவணய தமிழ்ச் சொற்கள்

நவாலிகிழார் இளமுருகனார் எழுதியது

கூவாய் பூங்குயிலே!—குரல்
எழும்பயில் வாயால்
மூவாத் தண்டமிழ் முற்றிழையாள் வரக்
கூவாய் பூங்குயிலே.

இந்நிலவுலகம் தோன்றிய ஞான்று உடன் தோன்றிக் கடவுளருங் காதல் கொள்ளும் தெய்வப்புதுநலமும், ஏனைய மொழிகள் போலாது இயற்கை ஒலி வழாமையும், அமிழ்தினும் விழுமிய சுவைநலப் பேறும், இலக்கணவரப்பும், இலக்கியப் பொலிவும், மூவா இளமைச் செவ்வியும், தண்மையும், பிறமொழிக் கலப்பின்றித் தனித்தியங்கும் பேராற்றலும், இன்னோரன்ன பிற இயல்புகளும் ஒருங்கே சிவணப் பெற்று எமது அருமைத் தமிழ் மொழி நிலவுகின்றது. இத்தமிழ் மொழி உலகவழக்கும் செய்யுள் வழக்குமாகிய இருவகை வழக்குகளிலும் தனது இயக்கத்திற்குப் பிறமொழிச் சொற்களின் துணையை எத்துறைக்கண்ணும். ஓர் எள்ளளவுதானும் வேண்டாததாய்த் தானே தனித்து நின்று அசைவில்லா உறுதிப்பாட்டுடன் இயங்கும் பேராற்றல் உடையது.

தமிழ் நாட்டிலே பண்டைஞான்று வாழ்ந்த செந்தமிழ்ச் சான்றோர் செய்தருளிய தொல்காப்பியம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு, சிலப்பதிகாரம், மணிமேகலை, கொங்குவேள்மாக்கதை என்றித் தொடக்கத்த தூய தனித்தமிழ் நூல்களை மிகவும் நுட்பமாகத் துருவித் துருவி ஆராய்ந்து கற்போர் அவை தம்மில் பிறமொழிச் சொற்களை மிகவும் குறைவாகவே காண்பர்; அங்ஙனம் காணப்படும் சொற்களிற் சில, தூய தனித் தமிழ்ச் சொற்களே யாகுமென்று இக்காலத்து மொழிநூல் வல்ல மாப் பெரும்புலவர் ஆகிய சுவாமி ஞானப்பிரகாசர் அவர்கள் நடுநின்று

எடுத்துக் கூறுகின்றனர். அயன்மொழிச் சொற்களும் வேற்றுப் புலமொழிச் சொற்களும் ஒரு சிலவாகவே தொன்று தொட்டுத் தமிழ் மொழியின் இருவகை வழக்கினும் வழங்கப்பட்டன. இஃது ஒரு மொழிக்கண்ணே நடைபெறும் செய்தியன்று; நாகரிகம் முதிர்ந்து சீர்திருந்தி வாழும் மக்கட் கூட்டத்தினரின் ஒவ்வோர் மொழிக்கண்ணும் பண்டுதொட்டு இன்றுகாறும் நிகழ்ந்துவரும் ஒரு செய்தியாம். இதனை ஈண்டு ஒரு சிறிது விளக்கிக் காட்டுதும்.

உழவு, வாணிகம், நெய்வு, கைத்தொழில், ஓவியம் முதலிய தொழிற்றுறைகளிலே பெரிதும் வளம்பட்டுப் பெருகி, நாகரிகம் முதிர்ந்து, சீர்திருந்தி நிற்கும் ஒவ்வொரு தேயத்து மக்களும் தாம் தொடுத்த பல்வேறு திறப்பட்ட பொருட் குவைகளை யெல்லாம் அயல் நாடுகளிலும் வேற்று நாடுகளிலும் உய்த்து விலைப்படுத்துப் பொருளீட்டாநிற்பர்; அதனான் ஒருமொழியாளர் பிறிதொரு மொழியாளருடன் துவன்றிக் கலந்துகொள்வர்; கொள்ளவே, அவர்தம் மொழிச் சொற்களிற் சில அன்னார் மொழிகளிலே கலந்து முதன் முதல் பேச்சு வழக்கிலே நிலைபெறும்; நிலைபெற்ற அச்சொற்கள் பல யாண்டுகளாக வழக்கில் அடிப்படின் அவை களைப் புலவர் செய்யுள் வழக்கிலும் அமைப்பர்; இதுவே ஒரு மொழிச் சொல் பிறிதொரு மொழியுட் புகுந்து ஆட்சி பெறும் வழியென் றுய்த்துணர்ந்து கொள்க.

இவ்வாற்றான் காலவரையறை கடந்த மிகவும் பழைய நாட் களிலே நம் தமிழ் முதுமக்கள், கைத்தொழில் உழவு நெய்வு வாணிகம் ஓவியம் முதலாய உயர்ந்த தொழில்களிலே தலைசிறந்து நிலவித் திகழ்ந்தாராகலின், தாம் அரிதிற் றொகுத்த பொருட்டிரள் களை யெல்லாம் அயற் றேயங்களிலும் வேற்றுத் தேயங்களிலும் விலைப்படுத்து வருவாராயினர்; அங்ஙனமே வேற்றுத் தேய மக்க ளாகிய யவனர், எகுபதியர், மகததேயத்தார், ஆரியர், மராட்டர் என்ற இவர்கள் தாம் தொகுத்த பண்டங்களையும் தமிழ் நாட்டிலே விலைப்படுத்தக் கருதித் தமிழ் முதுமக்களோடு உறவுகொண்டனர். கொண்ட அவ்வுறவு நாட்செல்ல நாட்செல்லக் காழ்ப்பேறிப் பழமையானதால், அம்மக்கட் பகுப்பினர் தமிழ் நாட்டிலும் அதன்

அயற்புறங்களிலும் வீடுகளும் அங்காடிகளும் சமைத்து, அவை தம்மில் வைகித் தம் முயற்சியை இடையீடின்றி உளுற்றி வருவா ராயினர். இப்பேருண்மையைப் பழந் தமிழ் நூல்களிலே பாக்கக் காணலாம். எனினும், யாம் இதனை ஈண்டு ஒருசிறிது ஆராய்வாம்.

கலந்தரு திருவில் புலம்பெயர் மாக்கள்
கலந்திருந் துறையும் இலங்குநீர் வரைப்பும்
கயவாய் மருங்கில் காண்போர்த் தடுக்கும்
பயனற வறியா யவன ரிருக்கையும்

என்று சிலப்பதிகாரத்திலும்,

மகத வினைஞரும் மராட்டக் கம்மரும்
அவந்திக் கொல்லரும் யவனத் தச்சரும்
தண்டமிழ் வினைஞர் தம்மொடு கூடி

என்று மணிமேகலையிலும்,

வேறுவே றுயர்ந்த முதுவா யொக்கல்
சாறயர் மூதூர் சென்றுதொக் காங்கு
மொழிபல பெருகிய பழிதீர் தேஎயத்துப்
புலம்பெயர் மாக்கள் கலந்தினி துறையும்
முட்டாச் சிறப்பிற் பட்டினம்

என்று பட்டினப்பாலையிலும்,

ஆரியர் துவன்றிய பேரிசை இமயம்

என்று பதிற்றுப்பத்திலும்,

யவனத் தச்சரும் அவந்திக் கொல்லரும்
மகதத்துப் பிறந்த மணிவினைக் காரரும்
பாடலிற் பிறந்த பசும்பொன் வினைஞரும்
கோசலத் தியன்ற ஓவியத் தொழிலரும்

என்று பெருங்கதையிலும் காணக்கிடத்தலான், மிகவும் பண்டு தொட்டு வேற்றுப்புல மொழியாளர் தமிழ் நாட்டிலே ஒருங்கு குழீஇத் துவன்றி வாழ்ந்து வந்தமை நன்கு விளங்கும் என்க.

(தொடரும்)

தொல்காப்பியம் எழுத்ததிகாரம்

நச்சினார்க்கினியக் குறிப்புரை

வித்துவான் ந. சுப்பையாபிள்ளை அவர்கள் எழுதியது

உலகின்கண் வாழும் மக்கள் முதலாமனைத்துயிர்க்கும் ஐம் புலவறிவும் நுகர்வும் ஒக்குமாயினும், மனவுணர்வாகும் இயற்கை யறிவோடு கூடிய கலையறிவாகுஞ் செயற்கை யறிவொன்றே மக் களை ஏனையவற்றிலும் உயர்த்துகின்ற சிறப்புக்குணமாம். அஃ தில்லாத மாந்தரே விலங்கோ டொருதன்மையராய் மாக்கள் எனப் படுவர். அவ்வுயர்வினை யெய்தற்குக் கருவியாகிய கலைகள் உரை நடையாகவும் செய்யுள் நடையாகவும் ஒவ்வொரு மொழியினும் உள்ளனவேனும் தமிழ்மொழியில் உள்ள பண்டைத் தமிழ்க் கலை கள் பெரும்பாலன செய்யுள் நடையாகவே உள்ளன. அவ்விரு நடையினுமுள்ள கலைகளின் நுண்பொருளுணர்தற்குக் கருவிநூல் களாயுள்ளவை எழுத்தும், எண்ணுமாகும். அவை முறையே இலக்கணநூல், தருக்கநூல் எனவும் பெயர்பெறும். அவற்றுள் இலக்கணநூல் இக்காலத்தின்கண் தொல்காப்பிய முதற் பலவாக நிலவினும், தொல்காப்பியமொன்றே ஏனையவற்றினும் பண்டைத் தமிழ்க் கலைகளை ஆராய்தற்குப் பெரிதும் வேண்டப்படும் பேரிலக் கண நூலாம். அதனால், தமிழ்ப் புலமை தேடுவார்க்குப் பண்டித பரீக்ஷைகளிற் பாடமாகவும் அது நியமிக்கப்பட்டுளது. அவ்வாறு தமிழிலக்கணம் பயிலும் மாணவர்களை ஊக்கப்படுத்தும் நோக்கத் துடன் அறிந்த சில குறிப்புக்கள் தொல்காப்பியம் எழுத்ததிகாரம்- நச்சினார்க்கினியருரைக்கு ஈண்டு எழுதப்படுகின்றன. இவற்றுட் குறை காணப்படின், திருத்தமுற விளக்குதல் அறிஞரது கடனாகும்.

நூன்மரபு, 1-ம் சூத்திரவுரை. 'திரிந்ததன் றிரிபது' வென்றல்:

இது, கஃறீது, முஃடீது முதலிய புணர்ச்சி முடிபுகட்கு வேண்டப்படுவதொரு முறையாகும்.

நன்னூல் பயிலு மாணவர் கஃறீது [கல்+தீது] என்னும் புணர்மொழியுள் நிலைமொழியை முன்னர்ச் செய்கை செய்வதோ? வருமொழியை முன்னர்ச் செய்கை செய்வதோ? என்று இரண்டனுள் ஒன்றும் செய்யமாட்டாது மயக்கத்திற் குள்ளாவதைக் காணலாம். எவ்வாறெனில், கல் + தீது என்பதற்கு

குறில்வழி லளத்தவ் வணையி னாய்தம்
ஆகவும் பெறூஉ மல்வழி யானே

என்பதனால் நிலைமொழிச் செய்கையை முதலிற் செய்தால் கஃ+ தீது என்றாகும். பின்னர், வருமொழிச் செய்கை செய்தற்கு

னலமுன் றனவும் ணளமுன் டணவும்
ஆகுந் தநக்க ளாயுங் காலே

என்பதன்றிப் பிறிது விதியின்மையினாலும், அச்சூத்திர விதியால் வருமொழித் தகரத்தைத் திரிப்பதற்கு நிலைமொழி யீற்றில் [லகரத்தின் திரிபாகிய ஆய்தமன்றி] நிமித்தமாகிய 'னல'க்கள் நிற்றலின்மையினாலும் வழியின்றி என்செய்வதென்று மயங்காநிற்பர். இங்ஙனமன்றி வருமொழிச் செய்கையை முதலிற் செய்யப் புகினும், பின்னர் நிலைமொழி லகரத்தை ஆய்தமாகத் திரிப்பதற்கும் வருமொழி நிமித்தமாகிய தகர மின்மையின், [கல்+றீது என றகரமே நிற்றலினால்] ஆண்டும் செய்வதறியாது மயங்காநிற்பர். முற்பிற்பாடின்றி ஈறு முதல்களை ஏக காலத்திற்றானே செய்கை பண்ணின் இவ்வித கஷ்டமின்றா மெனவும் நினைப்பர். இவ்வாறான செய்கைகளை முடித்தற்குத் 'திரிந்ததன் றிரிபது' என்னும் நயமே இன்றியமையாக் கருவியாக வேண்டப்படுகின்றது.

'திரிந்ததன் திரிபு அது' என்பதற்கு 'விகாரப்பட்ட ஈறு அல்லது முதலின் விகாரரூபம் (விகாரப்பட முன்னுள்ள) அவ்வீறு அல்லது அம்முதலின் தன்மைத்தேயாம்' என்பது பொருளாகும். அதனால், முன்னுள்ள ஈறு முதல்களுக்கு மாத்திரமன்றி, பின்னர் விகாரப்பட்டு நின்ற ரூபங்களுக்கும் ஏனைச் செய்கைகட்கு நிமித்தமாந் தன்மை பெறப்படும்.

ஈண்டு நச்சினர்க்கினியாது கூற்றின்படி அவர் இதற்குக் காட்டிய உதாரணத்தை விளக்குவாம். "திரிந்ததன் றிரிபது வென்றல் 'தகரம் வருவழி' என்பதனனும் பிறண்டும் பெற்றும்" என்பது அவர் கூற்று.

அஃதாவது: தொல் - எழுத்து - 149 - ம் சூத்திரமாகிய

லனவென வருஉம் புள்ளி முன்னர்த்
தந வெனவரிற் றனவா கும்மே

என்பதனல் கல் + தீது என்னும் புணர்மொழியுள் வருமொழித் தகரந் திரிந்து கல் + றீது என்ருக, பின்னர் நிலைமொழிச்செய்கை 369 - ம் சூத்திரத்துக் கூறப் புகுந்த ஆசிரியர் தொல்காப்பியர் வருமொழி முன்னரே திரிக்கப்பட்டபடியால், "றகரம் வருவழி யாய்தம் நிலையலும், புகரின் றென்மனர் புலமை யோரே" எனச் சூத்திரிக்க வேண்டும். ஆனல், அங்ஙனமன்றி "தகரம் வருவழி யாய்தம் நிலையலும்" என்றே சூத்திரித்து, ஆண்டு நிலைமொழி லகரம் ஆய்தமாதலுக்கு வருமொழி நிமித்தமாகத் தகரத்தையே ஓதினர். தகரம் முன்னரே றகரமாகத் திரிக்கப்பட்டமையின், நிலைமொழிச் செய்கை செய்தற்கு வருமொழியிற் குறித்த நிமித்தமாகிய தகரம் இல்லாதிருக்கவும் "தகரம் வருவழி ஆய்தம் நிலையலும்" என ஆசிரியர் சூத்திரித்தமைக்குக் காரணம் "திரிந்ததன் றிரிபது" என்னும் நயங் கொண்டமையே என்று பெறப்படுகின்றது என்று கருதி, நச்சினர்க்கினியர் முதலாம் சூத்திரவுரையில், "தகரம் வருவழி" என்பதனை அந்நயங் கொள்வதற்கு ஒரு இலிங்கசூத்திரமாகக் காட்டினர் என்பது. [இலிங்கம், ஞாபகம், குறி, சாதனம் என்பன ஒரு பொருட்கிளவி.]

'பிறண்டும்' என்பதற்கு உதாரணமாக,

ஆய்த நிலையலும் வரைநிலை யின்றே
தகரம் வருஉங் காலை யான
(தொல். எழுத். 399)

ஆறென் கிளவி முதனீ டும்மே
(தொல். எழுத். 458)

முதலான சூத்திரங்களைக் கொள்க.

(தொடரும்)

52

அன்பினில் இன்பு

வித்துவான்

பிரமஸ்ரீ சி. கணேசையர் அவர்கள் எழுதியது

அன்பிலே இன்பம் விளையுமென்று ஆன்றோர் கூறுவர். அஃதாமாறு காட்டுதும்.

அன்பாவது: ஒருவருக்குத் தாங் கருதிய பொருட்கண் தோன்றும் உள்ள நெகிழ்ச்சி. அந் நெகிழ்ச்சி அப்பொருட்குந் தமக்கு முண்டாகிய கலப்பினாலே முதிர அதனால் அவ்வுள்ளத் தின்கண் ஒரு சுகநிலை தோன்றுகிறது. அதுவே இன்பமெனப் படும். அவ்வின்பமும் இரண்டு வகைப்படும் சிற்றின்பமும் பேரின் பமுமென.

சிற்றின்பமாவது: தம்முட்டொடர்ந்த அன்பு காரணமாக ஒருவனு மொருத்தியும் எனப்பட்ட இருவர் தம்மிற் கூடிய விடத்து, அவ்விருவருள்ளத்தும் பிறந்த இன்பம். அவ்வின்பமும் அன்பு காரணமாகக் கலந்த அவ்விருவருள்ளத்தும் அவ்வன்பின் முதிர்ச்சியினாலே தோன்றியதொரு சுகநிலையேயாம். ஆதலின், அஃதும் அன்பின் விளைவெனப்படும். இதுபற்றியே "அன்பி னைந்திணை" என இறையனாரும், "அன்பொடு புணர்ந்த ஐந்திணை" யெனத் தொல்காப்பியனாரும் கூறினார்கள். எப்பொழுது ஒருவ ரிடத்தே அன்பு முதிருகின்றதோ அப்பொழுதே அவர் செய் யும் துன்பமும் இன்பமாகின்றது. ஆதலி னன்பே இன்பங்கட் கெல்லாம் அடியாயுள்ளது என்பது நன்கு பெறப்படும்.

வாரம் பட்டுழித் தீயவு நல்லவாந்
தீரக் காய்ந்துழி நல்லவுந் தீயவாம்

என்பதும் ஈண்டு நோக்கத்தக்கது. தலைவனுக்குந் தலைவிக்கு முண் டாய ஊடற்கண் தலைவி ஊடிச்செய்வனவும், அவனுக்கின்பமா கின்றதனானும் அன்பே இன்பாதல் பெறப்படும். ஊடலு மின்பா தலினன்றே

புலத்தலிற் புத்தேணு டுண்டோ நிலத்தொடு
நீரியைந் தன்ன ரகத்து

என்றும்,

ஊடிப் பெறுகுவங் கொல்லோ நுதல்வியர்ப்பக்
கூடலிற் றோன்றிய வுப்பு

என்றுந் தேவருங் கூறினர். இனித் தலைவனுந் தலைவியும் ஐம்புல இன்பங்களை ஆரத்துய்த்தலாலே இன்பமடைதலன்றி, ஒருவரையொருவர் தனியே காண்டற்கண்ணும் இன்பமடைவர்; ஒருவரையொருவர் தீண்டுதற்கண்ணும் இன்பமுறுவர்; கவவுக் கைகொண்டு அணைத்தற்கண்ணும் இன்பமடைவர்; ஒருவர்க்கொத்த உவமப்பொருளை ஒருவர் காண்டற்கண்ணு மின்பமடைவர்; இவைகளெல்லாம் அன்பின் விளைந்த இன்பங்களேயாம். கண்ணால் நோக்கியவிடத்து இன்பமடைதலை, இராமபிரானைச் சீதாதேவி கண்ணால் நோக்கியவிடத்து அமுத மருந்தினவளை யொத்துத் தனது உடம்பு பூரித்தாள் என்னுங் கருத்தமையக்

கருங்கடை நெடுங்கணொளி யாறுநிறை கண்ணப்
பெருங்கடலின் மண்டவுயிர் பெற்றினி துயிர்க்கும்
அருங்கல னணங்கரசி யாரமிழ் தினைத்தும்
ஒருங்குட னருந்தினரை யொத்துடல் தடித்தாள்

என்றும், இராமபிரான் சீதாதேவியைக் கண்டவிடத்து,

அன்னவளை யல்லளென வாமென வயிர்ப்பான்
கன்னியமிர் தத்தையெதிர் கண்டகடல் வண்ணன்
உன்னுயிர்நி லைப்பதொர ருத்தியொடு ழைத்தாண்
டின்னமிழ்தெ ழுக்களிகொ ளிந்திரனை யொத்தாள்

என்றும் கம்பர் கூறுதலானும், தீண்டற்கண் ணின்பமடைதலை, முருகபிரான் வள்ளிநாயகியை நோக்கி, நீ ஆடிய சுனையாயும், அணியுஞ் சாந்தாயும், சூடிய மலராயும் உன் மேனியைப் பொருந்தப்பெற்றிலேன் என்று கூறியதாக

ஆடிய சுனையதாய் அணியுஞ் சாந்தமாய்
சூடிய மலர்களாய்த் தோயப் பெற்றிலேன்

என்று கச்சியப்பர் கூறுதலானும், ஒருவரை அணைத்தற்கண் இன்பமுண்டாதலை, தலைவியும் தலைவனுமுடன் செல்லுங்காலத்து, இருவருந் தமக்குள்ள அன்பின் ஆராமையினாலே ஒருவர்தலை யோடு ஒருவர்தலை பொருந்தவும், ஒருவருடைய ஒருகாலோடு ஒருவருடைய ஒருகால் பொருந்தவும், ஒருவர் மேனியோடு ஒருவர் மேனி பொருந்தவும், ஒருவரை யொருவர் கையா லணைத்துத் தழுவிக்கொண்டு செல்லுதல் பாதிவடிவு ஆணும் பாதிவடிவு பெண்ணுமாகிய சிவனுடைய அர்த்தநாரீசுவர வடிவம்போல இருந்ததெனக் கூறும்

சிலம்புஞ் சிறுநுதலும் சில்குழலும் பல்வளையு மொருபாற் றோன்ற
அலங்கலந் திண்டோளு மாடெருத்து மொண்குழையு மொருபாற் றோன்ற
விலங்கலரும் சுரத்து வேறுருவி னேருடம்பாய் வருவார்க் கண்டே
அலங்கலவிர் சடையெம் மண்ணல் விளையாட்டென் றகன்றேம் பாவம்

என்னுஞ் செய்யுளானும், உவமைப்பொருளைக் காண்டலு மின்ப மாதலை,

ஓதிம மொதுங்கக் கண்ட வுத்தம னுழைய ளாகும்
சீதைதன் னடையை நோக்கிச் சிறியதோர் முறுவல் பூத்தான்
மாதவ டானு மாண்டு வந்து நீருண்டு மீளும்
போதக நடப்ப நோக்கிப் புதியதோர் முறுவல் பூத்தான்

என்று கம்பர் கூறிய செய்யுளானும் அறியலாகும்.

இனித் தமது குழவியிடத்தே வைக்கும் அன்பின் முதிர்ச்சியிலே தந்தைதாயர்க்குப் பெரியதோ ரின்ப முண்டாகின்றது. அவ் வின்பத்தைச் சிறப்பித்து,

குழலினிது யாழினி தென்பதம் மக்கள்
மழலைச்சொற் கேளா தவர்

என்றும்,

அமிழ்தினு மாற்ற வினிதேதம் மக்கள்
சிறுகை யளாவிய கூழ்

என்றும் திருவள்ளுவனார் கூறுமாற்றானு மஃது அறியப்படும். இவ்வின்பமெல்லாம் யாக்கையும் செவ்வியு முள்ள துணையுமே துய்க்கப்படுதலின் சிற்றின்பமாயின.

சிற்றின்பம் வெஃகி அறனல்ல செய்யாரே
மற்றின்பம் வேண்டு பவர்

என்னுங் குறளுரையில், சிற்றின்பம் நிலையில்லாத வின்பமென்றும், பேரின்பம் நிலையுடைய வின்பமென்றும் பரிமேலழகருங் கூறுதல் காண்க.

பேரின்பமாவது: பக்குவமமைந்த ஒருயிர்க்குப் பரம்பொருட் கண் உண்டாய அன்பு, அப்பொருட்கும் அவ்வுயிர்க்கு முண்டாகிய கலப்பினுலே முதிர, அதனுல் அதனதறிவின்கண்ணே தோன்றுஞ் சுகநிலையேயாம். அஃது எக்காலத்தும் அழிவின்றி நிலைபெறுதலின் பேரின்பமெனப்படும்.

பக்குவமுடைய ஒருயிர், பரம்பொருளாகிய இறைவனிடத்தே அன்புசெய்து, அவனருள் பெற்று, அவனுந் தானுமாகிய பேதமின்றி, அவனே தானுய் நின்று வழிபட, இறைவனும் அவ்வுயிர் தன்பால் வைத்த அன்பின் முதிர்வை நோக்கித் தானும் அவ்வுயிர்க்கண் அன்பு வைத்து, அதனன்பிலே இன்புருவாய்த் தோன்றியருளுந் நிலைமைபோலவே, ஒரு தலைவனும் ஒரு தலைவியிடத்தே அன்புசெய்து, அவளுடன்பாடு பெற்று, தானு மவளும் என்னும் வேற்றுமையின்றித் "தானே அவளாய்" ஒற்றுமைப்பட்டுக் கூட, அக்கூட்டத்து இருவருள்ளத்தும் உண்டான அன்பின் முதிர்விலே ஓரின்பம் பிறக்குமென்பதை விளக்குதற்கே

தானே அவளே தமியர் காணக்
காமப் புணர்ச்சி யிருவயி னொத்தல்

என்று இறையனுர் கூறியருளினர். இச்சூத்திரத்தில் தூலமாகச் சிற்றின்பப்பொரு ளமைந்துளதேனும், சூக்குமமாகப் பேரின்பப் பொருளும் அமைந்திருத்தலை அறிஞர் நுணுகி ஆராய்ந்துணர்க. இவ்விருவகைப் பொருள்களும் திருக்கோவையாரினும் அமைந்துள்ளன. தேவார திருவாய்மொழிகளிலும் சிற்சில பதிகங்களில் அமைந்துள்ளன. அவற்றையெல்லாம் ஈண்டு விரிப்பிற் பெருகும். எனினும், ஒன்று காட்டுதும்.

முன்ன மவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி யவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னை யவனிருக்கு மாரூர் கேட்டாள்
பெயர்த்து மவனுக்கே பிச்சி யானாள்
அன்னையையு மத்தனையு மன்றே நீத்தாள்
அகன்று ளகலிடத்தா ராசா ரத்தைத்
தன்னை மறந்தாள்தன் னாமங் கெட்டாள்
தலைப்பட்டா ணங்கை தலைவன் றாளே.

இதனுள், ஆன்மாவைத் தலைவியாக வைத்தும் சிவத்தைத் தலைவனாக வைத்தும் சூக்குமப்பொரு ளமையக் கூறியிருத்தல் காண்க.

இங்ஙனம் அன்பினில் இன்பம் பிறத்தல் பற்றியே,

அன்பினுள் விளைந்த ஆரமுதே

என்று மணிவாசகரும்,

அன்புஞ் சிவமு மிரண்டென் பரறிவிலார்
அன்பே சிவமா வதாரு மறிகிலார்
அன்பே சிவமாவ தாரு மறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருப் பாரே

என்று திருமூலரும் கூறினர்கள் என உணர்க. ஈண்டு அமுது என்றது இன்பத்தினை.

(தொடரும்)

சாங்கிய தத்துவ ஆராய்ச்சி

திருக்கோணமலை க. விசுவலிங்கம் அவர்கள் எழுதியது

முகவுரை

தத்துவக் கொள்கைகளைப்பற்றி இதிகாசங்களின் வாயிலாகப் படிக்க விரும்புவோர்க்குப் பாரதகண்டத்தில் தோன்றிய "தர்சனங்கள்" அல்லது "தத்துவ அறிவுமுறைக"ளின் காலவரையை எளிதில் நிச்சயிக்கக்கூடியதாக இருக்கவில்லை. பௌத்தகாலந் தொடங்கி அவைகளின் காலநிச்சயம் சிறுபான்மை அறியக்கிடப்பது வியக்கற்பாலது. எக்காலத்தில் தத்துவவிசாரந் தொடங்கிற்றென்றும், எது அதற்கு மூலமாயிருந்ததென்றுந் தேர்தல், ஆழ்ந்தஞானப் பேறுடையாருக்கன்றி ஏனையோரான் ஆகாமையின், இவ்வாற்றல் முன்னையோரிற் பொறுத்ததெனக் கொள்க. ஆகாயத்தையும், விண்மீன்களையும், விடியற்காலத்தையும், பகற்பொழுதையும் எற்றிற்காய்ப் பண்டை ஆரியர்கள் தொழுதனர் என்பது ஆராயத்தக்கது. இவைகளை நிலைநிறுத்தவும், கிரமப்படுத்தவும் ஒவ்வோர் தெய்வம் ஒவ்வொன்றிற்கும் அதிகாரமாயிருந்ததென்பதை வேதமுறையா னறிகின்றேம். கூடிய அளவில் தெய்வ உணர்ச்சி தொடங்கிய காலத்தை ஆராய்ச்சிமுறையான் நிதானித்தல் ஒரு தலையன்றோ? ஆதலின், விசேட கூர்மையுடையோரின் ஆராய்ச்சி உரையைத் தழுவி, யாமும் இயன்றவரையில் துணிதல் மாபுடைத்து. பேருறுதிப்பயன் எய்துதற்குரிய நெறி யாது? உடல் நீத்தபின்னும் உயிர் நிலைபெறுமா? தலையாய உண்மைப் பொருளை அறிவது யாங்ஙனம்? என்னும் இன்னோன்ன வினுக்கள் எழுந்த காலத்தை ஆராயுமிடத்து, வேதகாலத்திற்கு முற்பட்ட சரிதைகள் கிடைக்கப்பெறுதபடியானும், புராணங்களில் படலக்கணக்காய் வரையப்பட்ட காவியங்களின் பிண்டப் பொழிப்பானது பொய்க்கூற்றென இக்காலத்தாரால் இழிவடைந்து கிடக்கின்றமையானும், வேதகாலம் எழுத்தறிவில்லாக் காலமாயினும், அதனையே முதற்கண் வைத்து, அதன் பின்னுய காலங்களை

யும் ஆராய்வாம். அக்காலங்களை நான்கு கூறுக அறிஞர்கள் தெரிந்துரைத்தனர். அவை: வேதகாலம், மகாகாவிய அல்லது இதிகாசகாலம், சூத்திரகாலம், வித்துவத்காலம் என்பன.

வேதகாலம்

தற்புருடம் முதலிய நான்கு முகங்களிலிருந்து வேதங்கள் எழுந்தன என்னும் அபிமான உழற்சிக்கதைகள் யாவும் ஈண்டைக் காவதோர் பயன் தராமையான் போலியென் றொழிக. இந்திய தேசத்தில் வழங்கும் நூல்களுள் வேதங்களே மிகவும் பழையன. அப்பெற்றித்தாகிய நூல்களே ஆரியரின் நாகரிகத்தை இனிது விளக்க வல்லன. டாக்றர் கொக், கி-மு 2400 ஆண்டு வரையி லேயே வேதம் முறைப்படுத்தப்பட்ட காலமெனக் கொள்கின் றனர். வேத இலக்கியங்களை நான்காய் வகுத்து, ஒவ்வொரு கூற் றையும் வெவ்வேறாய் அட்டவணைசெய்து சந்தம், மந்திரம், பிரா மணம், சூத்திரம் எனப் பெயர்களிட்டு வைத்தார்களென்றும், சந் தம் எழுந்து 500 ஆண்டுகளுக்குப் பின்னரே மந்திரம் எழுந்த தென்றும், அவ்வண்ணமே ஏனைய இரண்டும் 500 ஆண்டுகள் முறையே இடையிற் கழிந்தபின்றை எழுந்தனவென்றும் அவர் கொண்டுள்ளார். பகோளசாத்திரவழியாய் வேதகாலவரையை நிச் சயிக்கச் சிலர் துணிவர். வேதபாக்களில் மகாவிசுவம் மிருக சீரிடத்தைச் சந்தித்ததென்றும், பிராமணத்தில் அது கார்த்திகை நட்சத்திரத்தைச் சந்தித்ததென்றும் கூறுவனவெல்லாம் தொன் மையை விளக்குமாகலின், இத்தகைய விண்மீன் சந்திகள் கி-மு 4500-ம் ஆண்டிற்கும் 2500-ம் ஆண்டிற்கு மிடைப்பட்டன வாக இருக்கவேண்டுமெனப் பகோள சாஸ்திரிகள் கணித்திருக் கின்றார்கள். டாக்றர் ஜயகோபி, புல்லர் முதலியோர்க்கும் இத் துணிபு ஒப்ப முடிந்ததாகலின் யாமும் இதை எடுத்துக் கூறி னேம். வியாழகிரகத்தை முதலிற் கண்ட காலம் திஷ்யவெள் ளியை அது பார்த்தபொழுதேயாமெனத் தயித்திரிய பிராமணங் கூறும். இக்காலம் கி-மு 4650 ஆண்டுவரையினென்பர் பகோள நூலுடையார். கார்த்திகையைத் தலையாய் வைத்து நட்சத்திரங் கள் அக்காலத்தாரால் எண்முறை செய்யப்பட்டனவெனத் தயித்

திரிய சம்ஹிதையிற் காணலாம். அவ்வண்ணமே மிருகசீரிடத்தையும் புனர்பூசத்தையும் காலவேற்றுமைக்கேற்ப முதற்கண் வைத்துக் கோள்கள் எண்ணப்பட்டுள்ளன. அக்காலம் கி-மு 6000 என்ப. விரிவஞ்சி விடுத்தேம். இது நிற்க.

தற்கால உலகத்தார்க்கேற்ப ஆராய்ச்சியின் முதிர்ந்தவர் கூற்றையே இனி இங்கெடுத்தாள்வாம். வேதகாலமென்பது கி-மு 1500 தொடங்கி கி-மு 600 வரையென ஒருவாறு ஆராய்ச்சி உரைகாரரால் வகுக்கப்பட்டுள்ளது. அக்காலத்திற்றனே ஆரியர்களின் அறிவுப்பயிர்ச்சியும் நாகரிகமும் பரவின. ஆரண்யகம் அல்லது காட்டில் உபதேசிக்கப்பட்ட கலைகளெனப் பெயர்பூண்ட தத்துவக்கல்வியும் மிளிர்ந்தது. மிளிரவே, மனோவாதிகள் எழுந்தனர். மந்திரங்களும், பிராமணங்களும், உபநிடதங்களும் வெளிவந்தன. ஆராய்ச்சி தலைநிமிர்த்தப் போலிக்கொள்கைகள் தலைசாய்ந்தன. இருக்குவேதப்பாக்களின் உள்ளீடுமுதல் உபநிடதங்களீறுகச் செறிந்துகிடக்கும் பொருணலத்தைத் திறம்படப் பயிலல் தத்துவ உணர்வினை வளர்க்கும் நீர்மைத்து என்பது ஈண்டு அறியற்பாலதாகும். உபநிடதம் என்பது யோகப்பெயரால் வேதமுடிபை உணர்த்தும். இருக்குவேதத்தில் முளைத்தெழுந்த பயிரே உபநிடதங்களாய் வளர்ந்து கனிகளை நல்கிற்று. அக்கினி, சூரியன் முதலாம் தெய்வங்களைத் துதிக்கும் இருக்குவேதபாக்கள் இங்குக் கவனிக்கற்பாலன. ஆங்கு சூரியதுதியில் அவர்க்கு இரு சக்கர முண்டென்றும், அவற்றி னொன்று சடப்பொருளாய் யாவர்க்கும் வெளிப்படையாயதென்றும், மற்றையது கட்புலனுக் கெட்டாத நுண்ணிய பொருளென்றுங் கூறப்பட்டிருக்கின்றன. இவ்விதமே மற்றைய தெய்வங்கட்குஞ் சில பாக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இருக்குவேதத்தில் அத்துவிதவாதம் சிற்சிலவிடங்களிற் பொதிந்துகிடத்தலை ஒருதலையா னாயவேண்டுமென்க.

இதிகாசகாலம்

இக்காலம் கி-மு 600 தொட்டு கி-பி 200 ஈருய்ப் பெருகி வந்த பூர்வ உபநிடதங்கட்கும் தரிசனங்கட்கு மிடைப்பட்டதென்க. இதிகாசமெனின் இராமாயணத்தையும் மகாபாரதத்தை

யுமே இவ்விடத்துக் குறிப்பான் விளக்கும். சைவமும் வைணவமும் தோன்றியது இக்காலமேயென்பர் சிலர்.

சூத்திரகாலம்

இது கி-பி 200க்குப் பிற்பட்டகாலம். இலக்கியங்களும், கலைகளும் பெரும் பிண்டமாய்க் கிடந்தமையைக் குறுக்க நினைத்தோர் சூத்திரங்களை யாத்தனர். புத்தர் முதல் அசோகன் ஈறாய் உட்படக்கிடந்த காலமே சூத்திரகாலமென்பர். மாக்ஸ்முல்லர் என்பார் வேதாந்த, சாங்கிய, யோகசூத்திரங்கள் இக்காலத்திற்கு முற்பட்டிருக்கலாமென்றும் ஊகித்தனர். கௌடிலியரின் அர்த்தசாத்திரம் இக்கோட்பாட்டை நிலைப்படுத்துகின்றது. கலைகள் யாவும் சூத்திரபிண்டமாக விருந்தமையின், அவற்றின் வியாக்கியானங்கள் ஒன்றன்பின்ன ரொன்றாய்த் தொடர்ந்தன. இவைகள் இல்லையேல், அவைகளின் உட்பொருட்களையும் நோக்கங்களையும் தெள்ளிதின் அறிதல் வருத்தமென் றுணர்க.

(தொடரும்)

தமிழகத்துத் தருக்கநூல் வளர்ச்சி

திரு. போ. கைலாசபதி, பி. எஸ்சி. எழுதியது

1

மெய்ப்பொருள் காண்டற்குச் சாதனமாய சிந்தனைமுறையினை அறிவிக்கு நூல் தருக்கம். அதனை அழகுதோன்ற எடுத்துரைக்கு முறையினை அறிவிக்கு நூல் இலக்கணம். அன்றிப் பிறர் கூற்றின் கருத்தை நிச்சயித்தற்குத் துணையாவதிலக்கணம்; அக்கருத்தின் மெய்ம்மை பொய்ம்மையினை ஆராய்வதற்குத் துணையாவது தருக்கம். தானே மெய்ப்பொருளை ஆராய்தலும், பிறர் கூற்றில் வைத்ததனை ஆராய்தலும், தானே அதனை எடுத்துரைத்தலும், பிறர்வாய் அதனைக் கேட்டறிதலும் அறிவு வளர்ச்சிக்குச் சிறந்த சாதனங்களாகலின் அஃது இனிது நடத்தற்குத் துணையாய் நிற்குந் தருக்கமும் இலக்கணமும் கருவிநூல்களெனப்படும். தருக்கம் எண்ணெனவும், இலக்கணம் எழுத்தெனவும்படும்.*

நம் ஊனக்கண் பொருள்களின் உண்மைநிலையைக் காட்டி நாம் விரும்பிய துறையை அடைதற்குச் சாதகமான நெறியிற் செலுத்துதல் போன்று, தருக்கமும் இலக்கணமும் அறிவின் உண்மை நிலையைக் காட்டி, நாம் விரும்பிய இலக்ஷியங்களை யடைதற்குச் சாதகமான நெறியிற் செலுத்துந் தன்மையன வாகலின் அவை கண்ணென விதந்தோதப்பட்டன. "எண்ணு மெழுத்துங் கண்ணெனத் தகும்" எனவும், "எண்ணென்ப வேனை யெழுத்தென்ப இவ்விரண்டும், கண்ணென்ப வாழு முயிர்க்கு" எனவும் பெரியோர் கூறியன ஈண்டு சிந்திக்கற்பாலன. "எண்ணு மெழுத்துங் கண்ணெனத் தகும்" எனுமிடத்து எண்ணெழுத்துக்களும் வேறு, கண்ணும் வேறு என்னும் பேதபாவனைப் பொருள் தோன்றுமாறும், "எண்ணென்ப வேனை யெழுத்தென்ப இவ்விரண்டும், கண்ணென்ப வாழு முயிர்க்கு" எனுமிடத்து இருவகைப் பொருள்கட்கும் அபேத

* எண் கணிதமென்னுங் கொள்கை ஈண்டு விடுக்கப்படுகின்றது.

பாவனைப் பொருள் தோன்றுமாறும் உய்த்துணர்ந்து கொள்ளற் பாலன. அன்றி "வாழு முயிர்க்கு" என வள்ளுவர் அடை கொடுத்தோதியதன் கருத்தும் ஈண்டு நோக்கற்பாலது. வாழ்க்கையை நெறிப்படுத்துவதற்கு அறிவும், அதனை நெறிப்படுத்துவதற்குத் தருக்கமும் இலக்கணமும் தப்பாது வேண்டப்படுதலும், இவ்வையின்றி யறிவும், அஃதின்றி வாழ்க்கையும் இனிது நடத்தல் கூடாமையும் நோக்கி "வாழு முயிர்க்கு" என வள்ளுவ ரோதினர் போலும்.

இனி, வடமொழி வேதங்களைத் தழுவி யெழுந்து, நியாயம் வைசேடிக மெனும் இரு சாஸ்திரரூபமாய் நின்று, சிந்தனை முறைகளை யாராயும் பொதுத்தருக்க விஷயங்களையும், தத்துவமுடிபுகள் முதலிய சிறப்புத் தருக்க விஷயங்களையும் எடுத்துக் கூறும் தருக்க சாஸ்திரத்தில் பொதுத்தருக்கபாகமே கண்ணெனவும், எண்ணெனவும்படுதற் குரியது. அதுவே சிறப்பு நோக்கி முன் தருக்கமெனப் பட்டது. பின்னர்த் தருக்க மென்னுமிடங்களிற் சந்தர்ப்பத்துக்குத் தகப் பொதுத் தருக்கத்தையேனும், சிறப்புத் தருக்கத்தையேனும், அவை யிரண்டும் சேர்ந்த சாத்திரத்தையேனுங் கொள்ளுக. பொதுத் தருக்கமும் இலக்கணமுஞ் சிறந்த கருவி நூலெனக் கண்டு, அவற்றைக் கண்ணென எடுத்துப் பாராட்டிய சிறப்புத் தமிழ் நாட்டுச் சிறப்புப்போலும். அன்றியும், வடமொழியிற் பொதுத் தருக்கம் வேறாய் ஆராயப்படாதிருப்பத் தமிழ் மொழியி லது தனிக் கலையாய்ப் பண்டைக் காலத்தில் ஆராயப்பட்டதெனவும், வடமொழித் தருக்க நூல்கள் மொழிபெயர்க்கப் பட்ட காலத்து இத்தனிக்கலை யாராய்ச்சி வழக்கிறந்ததெனவும் எண்ண இடமுண்டுபோலும். எண்ணும் எழுத்தும் கருவி நூல்களெனப் பண்டைய தமிழ் நூல்களில் விதந்தோதப்படுவதே இக் கொள்கையை வலியுறுத்தும் போலும். பெரியோர்களிதைச் சிந்தித்தல் தகும்.

இக்காலத்துத் தமிழ் மொழியிற் காணப்படுந் தருக்க நூல்கள்பல வடமொழித் தருக்க நூல்களின் மொழிபெயர்ப்புக்களாகவும், சில மேலைத்தேசத் தருக்கநூல்களைத் தழுவிய நூல்களாகவும் காணப்படுகின்றன. அன்றி, மணிமேகலை முதலிய காவியங்களி

லும், சிவஞானசித்தியார் முதலிய சமய நூல்களிலும் ஆண்டாண்டு கூறப்படும் தருக்க நூற் பாகங்களு முண்டு. வாக்கியங்களின் பொருள் நிச்சயஞ் செய்தல் முதலிய தருக்கநூல் விஷயங்கள் தமிழ் இலக்கண நூல்களில் எடுத்தாளப்படுகின்றன. எனவே, தமி ழகத்துத் தருக்கநூல் வளர்ச்சியை ஆராய்பவர்கள் இவ்வாறு பல வேறு வகைப்பட்ட நூற்றுறைகளையும் ஆராய்தல் வேண்டுமெனக. அவற்றுட் சிலவற்றிலேயே எனக்குச் சிறிது பயிற்சி யுண்டாகை யால், அவையே யீண்டு ஆதாரமாகக் கொள்ளப்பட்டு ஏனையவை விடப்பட்டன.

2

நாம் அறிந்த வரையிலே தருக்கநூல் விஷயங்களை எடுத்துக் கூறும் மிகப் பழைய தமிழ் நூல் மணிமேகலை என்னும் சிறந்த காவியமாகும். இதன் இருபத்தேழாம் இருபத்தொன்பதாம் காதை களில் மூன்று வேறிடங்களில் தருக்க விஷயங்கள் கூறப்பட்டன. "சமயக் கணக்கர் தந்திறங் கேட்ட காதை" எனப் பெயரிய இரு பத்தேழாங் காதையிலே "வேத வியாதனுங் கிருத கோடியும்" என்னும் அடிதொடக்கமாக "இவையே யிப்போ தியன்றுள வள வைகள்" என்னும் அடி இறுதியாக (81 அடிகளில்) அளவை வாத மும், "பொய்தீர் பொருளுங் குணமுங் கருமமும்" என்னும் அடி தொடக்கமாக "சாதலும் நிகழ்தலும் அப்பொருட் டன்மை, ஒன்றணு கூட்டம் குணமும் குணியும்" என்பது இறுதியாக (20 அடிகளில்) வைசேடிக வாதமும் கூறப்பட்டன. "தவத்திறம் பூண்டு தருமங் கேட்ட காதை" யெனப் பெயரிய இருபத்தொன்பதாங் காதையிலே * "ஆதி சினேந்திரன் அளவை இரண்டே" என்னும் அடி முதலாகக் "காட்டு மநுமான ஆபா சத்தின், மெய்யும் பொய் யும் இத்திற விதியால், ஐய மின்றி அறிந்துகொள் ளாய்ந்தென்" என்பதிறுதியாக (426 அடிகளில்) பிரத்தியட்சம் அநுமான மென் னும் பிரமாணங்களும் அவைபற்றிவரும் ஆபாசங்களும் மிக விரி வாக எடுத்துக் கூறப்பட்டன.

* இம் மூன்றும்பகுதி பின்னர் முப்பதாங் காதையிற் கூறப்படும் பௌத்தமத ஸ்தாபனத்துக்கு ஆதாரமா யெழுந்தது.

இம்மூன்று பகுதிகளுள்ளே முதற்கட் கூறப்பட்ட அளவை வாதத்திற் காண்டல், கருதல், உவமம், ஆகமம், அருத்தாபத்தி, இயல்பு, ஐதிகம், அபாவம், மீட்சி, உண்டாநெறி என்னும் பத்துப் பிரமாணங்களின் தன்மைகளும், சுட்டுணர்வு, திரியக்கோடல், ஐயம், தோராது தெளிதல், கண்டுணராமை, இல்வழக்கு, உணர்ந்ததை யுணர்தல், நினைப்பு என்னும் ஆபாசங்களெட்டன் தன்மைகளும் சுருக்கிக் கூறப்படுகின்றன. அன்றியும், வேதவியாசர் பத்துப் பிரமாணமும், கிருதகோடி எட்டுப் பிரமாணமும், * சைமினி முனிவர் ஆறுபிரமாணமுங் கொண்டனரென்பதும் கூறப்படுகின்றது. உலோகாயதர் பிரத்தியட்சமும், பௌத்தர் அதனோடு அநுமானமும், சாங்கியர் அவற்றோடு ஆகமமும், நையாயிகர் அவற்றோடு உவமானமும், வைசேடிகர் அவற்றோடு அருத்தாபத்தியும் கொள்வரென்பதும் கூறப்பட்டது. ஈண்டு வைதிக மார்க்கத்தளவை வாதியாற் கூறப்படும் இவ்விஷயங்கள் மணிமேகலை ஆசிரியர் காலத்துத் தமிழ்மொழிக்கண் வழங்கிய சில அளவை வாத நூல்களைத் தழுவியனவோ, அன்றிச் சில வடமொழி நூல்களைத் தழுவியனவோ என்பது பெரியோர்களால் ஆராயத்தக்கது. இதுநிற்க. ஆசிரியர் பாரிசேடமென்பதனை மீட்சியொழிவறிவு எனவும், சம்பவம் என்பதனை உண்டாநெறி யெனவும் வழங்கியதன் சிறப்பு மீண்டு நோக்கற்பாலது. ஈண்டும், தருக்கநூல் விஷயங்கள் கூறும் ஏனைய இரண்டிடங்களிலும் வழங்கிய வடமொழிச் சொற்களின் தொகையினையும், தருக்கநூல் விஷயங்களை மறித்தும் மறித்தும் ஆசிரியர் கூறும் போக்கினையும் ஒரு சேரவைத்து நோக்கும்போது, வடமொழித் தருக்கநூல் ஆராய்ச்சிமுறைகளும் முடிபுகளும் அக்காலத்துத் தமிழ் நாட்டினராற் பெரிதும் கொள்ளப்பட்டுப் பரந்து விளங்கினவென்பது ஒருவாறு துணியப்படும். ஆசிரியர் சாத்திர விஷயங்களைத் தெள்ளிய நடையில் எடுத்துக் கூறும் சிறப்பும் ஈண்டும் பிறுண்டுங் காணற்பாலன.

(தொடரும்)

* கிருதகோடி கொண்ட பிரமாணங்கள் எவை யெனக் கூறப்படவில்லை. சைமினிமுனிவர் கொண்ட பிரமாணங்கள் முதலாறுமாகும்.

ஆரியச் சக்கரவர்த்திகள்

இந்தியாவின் பண்டை நிகழ்ச்சிப் பொழிப்பு

வழக்கறிஞர் வ. குமாரசுவாமி அவர்கள், பி. ஏ. எழுதியது

சரித்திர ஆராய்ச்சி வல்லுநர் இந்தியாவை மூன்று கூறுக்கி அவற்றின் சரித்திரங்களைத் தனித்தனி விரித்துச் சொல்வர். விந்தியகிரிக்கு வடபால் உள்ள பாகம் ஆரியாவர்த்தம் எனப்படும். விந்தியகிரிக்கும் கிருஷ்ணாநதிக்கும் இடையில் உள்ள பாகம் தண்டகாரணியம் அல்லது தக்ஷணபாதம் எனப்படும். கிருஷ்ணா நதிக்குத் தெற்கே கன்னியாகுமரிவரை உள்ள பாகம் தமிழகம் எனப்படும். விந்தியகிரிக்கு வடக்கே உள்ள ஆரியாவர்த்தத்திற்கும் அதற்குத் தெற்கான தக்ஷணபாதத்துக்கும் இடையில் உயர்ந்தோங்கிய மலைத்தொடர்களும் அடர்ந்தோங்கிய காடுகளும் இருத்தலால், பண்டைக்காலத்தில் இக்காலத்திலும்பார்க்க போக்குவரவு அதிக கஷ்டமாகவிருந்தது. ஆகையால், போக்குவரவுக் குறைவாலும் பிறவற்றாலும் ஆரியாவர்த்தநாட்டார் சரித்திரத்திற்கும் தென்னாட்டுச் சரித்திரத்திற்கும் அந்நியோந்நியமான, இன்றியமையாத தொடர்ச்சி கிடையாது. இடையிடையே ஒவ்வோர் காரணம் பற்றித் தொடர்பு நிகழ்ச்சிகள் நடப்பதுண்டு.

எல்லாமாகிய கண்ணுதலிறைவன் மலையரசன் புத்திரியாகிய பார்வதியாரைத் திருமணஞ்செய்தபோது, தேவர்களும் இருடிகளும் பிறரும் இமாசலத்தில் ஈண்டியதனாலே வடபாகந் தாழ, இறைவன் அகத்தியரைத் தென் திசைக்கு ஏவியதும், அவர் விந்திய கிரியை அடக்கி அப்பாற்சென்று பதினெண் குடி வேளிருள்ளிட்டாருடன் தமிழ்நாடு போந்து, காடு கெடுத்து நாடாக்கியதும், தமது கரகங் கவிழ்த்துக் காவிரியைப் பெருகச் செய்ததுமாகிய புராண வரலாறுகளை உற்றுநோக்குங்கால், ஆரியருந் திராவிடரும் சிறிது காலம் விந்தியமலைக்கு வடக்கான ஆரியா வர்த்தத்தில் ஒருங்கு வாழ்ந்து, பின், திராவிடர் பலர் முன்னும், ஆரியர் சிலர் பின்னுமாக விந்தியத்

துக்கு இப்பால் உள்ள பிரதேசத்துக்கு வந்து குடியேறியதும், விந்தியத்தை வெகு கஷ்டத்துடன் கடந்து வந்ததுமாகிய உண்மைகள் புலனாகும்.

ஆகையால், தமிழகத்துப் பூர்வ நிகழ்ச்சிகள் ஆராய்வார்க்கு ஆரியாவர்த்த நிகழ்ச்சிகள் அறிதல் இன்றியமையாததன்று. ஆனால் தமிழகத்துக்கும் அதன் வடக்கயலாய் உள்ள தக்ஷிண பாதத்துக்கும் தினசரி போக்குவரவும் கொடுக்கல் வாங்கலும் நடந்துகொண்டே வந்தபடியாலும், தமிழ் நாட்டரசர் ஒவ்வோர் காலத்தில் தண்டகாரணியத்திற் சிற்சில பாகங்களை வெற்றிகொண்டு ஆண்டமையாலும், தமிழ்நாட்டரசர் வலிகுன்றி ஆதிக்கம் குறைந்த காலத்துத் தண்டகாரணியத்தரசர்கள் தமிழ் நாட்டைக் கைப்பற்றி ஆண்டிருப்பதனாலும் தமிழக நிகழ்ச்சி ஆராய்வுக்குத் தண்டகாரணிய நிகழ்ச்சி ஆராய்வு இன்றியமையாதது.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் உள்ள தொடர்பு

தமிழகத்துக்குத் தென்பால் உள்ள இலங்கைத்தீவு பண்டைக் காலந் தொட்டுத் தமிழகத்துடன் மிகத் தொடர்புடையதாகவே யிருந்தது. தென்னிலங்கை வைபவங்களைக் கூறும் மகாவம்சம் என்னுஞ் சிங்களச் சரித்திரத்திற் சொல்லியபடி, சிங்களவரின் முதல் அரசனாகிய விஜயனும் அவனுடன் வந்த வீரர்களும் பாண்டிய ராச குமாரத்தியையும் பாண்டிய நாட்டுப் பெண்களையும் விவாகஞ் செய்து கொண்டார்கள். அக்காலந் தொட்டுத் தென்னிலங்கைக்குந் தமிழகத்துக்குந் தொடர்பு உண்டாய் விட்டது. இலங்கையின் வடபாகம், முக்கியமாக யாழ்ப்பாணம், பாண்டிமண்டலம், சோழமண்டலம், சேரமண்டலம், தொண்டைமண்டலம், கொங்குமண்டலம் என்னும் ஐந்து தமிழ்மண்டலங்களுடன் சேர்த்து எண்ணப்பட்டு, ஈழமண்டலம் என்னும் பெயருடன் எக்காலத்திலும், தமிழகத்தின் ஓர் பாகமாய் விளங்கிற்று. இவ்வீழமண்டலத்தில் தேவாரம் பாடப்பெற்ற இரண்டு சிவஸ்தலங்கள் இருத்தல் இதற்குப் போதிய சான்றாகும்.

தென்னிந்தியாவைச் சேர்ந்த சரித்திர நிகழ்ச்சிகள் எல்லாம் தமிழ் இலக்கியங்களைக் கொண்டும், சைவ வைஷ்ணவ

கோவில்களில் உள்ள சிலாசாசனங்கள், செப்பேடுகள் முதலியவற்றைக் கொண்டும் நன்கு ஆராயப்பட்டு, தமிழ்ச் சங்க காலந்தொட்டு இற்றை நாள் வரையும் காலத் தொடர்பாய் அறியக்கிடக்கின்றன. இனி, இலங்கைத் தென்பாகத்தில் வசிக்குஞ் சிங்களவரின் சரித்திரமும், புத்த குருமாரால் காலத்துக்குக் காலம் எழுதப்பட்ட மகா வம்சம், தீபவம்சம், புத்த வம்சம், தாது வம்சம், ராஜா வளி முதலிய நூல்களினாலும் சிலாசாசனங்களாலும் அறியக்கிடக்கின்றது.

யாழ்ப்பாணச் சரித்திரத்திற்கு உள்ள ஆதாரங்கள்

யாழ்ப்பாணத்துப் பூர்வீக விஷயங்களைச் சிறிது விளக்குங் கருவிகளாய் ஆங்காங்கு அழிந்தும் மண்ணால் மூடப்பட்டும் மறைந்து கிடக்கும் புராதன கோவில்கள் இராசமாளிகைகள் முதலியன புராதன கட்டிட ஆராய்ச்சி அதிகாரப் பகுதியினால் (Archaeological Department) இன்னும் பரிசோதிக்கப்பட்டு வெளிப்படுத்தப் படவில்லை. சாஸனங்களுங் கிடைப்பதரிது.

இற்றைக்குப் பன்னிரண்டு வருடங்களுக்கு முன்னே யாழ்ப்பாண மாகாண நீதிபதியாக இருந்த பவுல் பீரிஸ் பண்டிதரும் (Dr. Paul Peiris), அவர் காலத்து மாகாண நீதிமன்றத்து எழுத்தாளராயிருந்த திரு. இராசநாயக முதலியார் அவர்களும் செய்த பெருமுயற்சியால் கந்தரோடையிலும் சுன்னாகப் புகையிரத ஸ்தானத்துக்கு அணித்தாயும் உள்ள இடங்களில் உயர்ந்த சில மேடுகள் பரிசோதிக்கப்பட்டு அதன் பயனாகச் சில விஷயங்கள் அறியப்பட்டன. மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலுக்கு அணித்தாய், கீரிமலைத் தெருவுக்கு வடபுறமாக, மாருதப்புரவீகவல்லி கோவில் கட்டுவிப்பதற்குப் பாளையம் போட்டிருந்ததாக ஐதிகங் கூறும் வளவுடை (வளவனேடை) மேடு, குளம் இவைகளும், சுழிபுரத்தில், புத்தரின் வெள்ளரசு கொண்டுவந்து இறக்கப்பட்ட சம்புத்துறைக்கு அணித்தாய், தேவனம்பிய திசா, கோதை அபயன் என்னும் சிங்கள அரசர் பெயரால் இன்றும் "திசை மழுவை," "கோதை மழுவை" எனப்படும் மாளிகைகள் மண்ணால் மூடப்பட்டு மேடாயிருக்கும் இடங்களும், சரித்திர விருத்திக்காக அவசியம் பரிசோதிக்கப்பட வேண்டும் என 1827—29 ஆண்டுகளில் அரசின

ரைப் பன்முறை தூண்டியும், யாழ்ப்பாணத்துக்குப் பிரதிநிதிகளாய் இருந்தவர்கள் மூலமாக இவற்றின் பரிசோதனைக்கு வேண்டிய பணம் உத்தரவு செய்யவேண்டும் என்று சட்டசபையினரை வேண்டியும், உலகத்தில் அடுத்து நிகழ்ந்த பணத் தாழ்ச்சிப் பஞ்சத்தால் ஒன்றும் வாயாது போயிற்று. இப்படியே இன்னும் பரிசோதனைக்கு உரிய இடங்கள் அநேகம் யாழ்ப்பாணத்தில் உண்டு.

சோழ மன்னர் முறையைப்பற்றி, அரசிறை வருமானத்திற்காகக் காணியாளர் பெயர், காணிப் பெயர், பரப்பு இவை பதியும் வழக்கம் ஆரியமன்னர் காலத்தில் தொடங்கியது. ஆரிய சக்கரவர்த்திகளைப் பின்பற்றிப் பறங்கியர் அப்பதிவுக்குத் தங்கள் பாஷைப் பெயர் கொண்டு "தோம்பு" எனப்படும் காணிப்பதிவு செய்தார்கள். பறங்கியருக்குப் பின்வந்த ஒல்லாந்தரும் அவ்வாறே தோம்புப் பதிவு செய்தார்கள். இவை எல்லாம் சரித்திர ஆராய்ச்சிக்கு முக்கியமானவை. தக்ஷண கைலாச மான்மியம் முதலிய சில நூல்களும் யாழ்ப்பாணத்துப் புலவராற் செய்யப்பட்ட இலக்கிய சோதிட வயித்திய நூல்களும் அதற்கும் ஒருவாறு பயன்படுவன. ஆயினும், முற்குறித்த இடங்களின் பரிசோதனைகள் முடிந்த பின்தான் யாழ்ப்பாணச் சரித்திரத்தை ஒருவாறு நிரைப்படுத்தலாம்.

ஆனல், தென் புறத்தாராகிய சிங்கள நாட்டாருக்கும், வட புறத்தாராகிய தென்னிந்திய நாட்டாருக்கும், எங்களுக்கும் இடையருத தொடர்பு உள்ளமையின், அவர்கள் நூல்களையும், இலங்கையைச் சுட்டிக் கூறும் தென்னிந்திய சாசனங்களையும் யாழ்ப்பாண வைபவமாலை முதலிய சுருங்கிய நூல்களையும் ஒருங்கு சேர்த்து ஆராய்வதனல் எங்கள் சரித்திர நூல்களிற் சுருக்கமாகக் கூறியவற்றை விரிவாக அறிதற்கும், காலத் தொடர்பை வரையறுத்தற்கும் இடம் உண்டாகும். இவைகளை யெல்லாம் ஒருங்கு ஆராய்ந்து எம் நாட்டு நிகழ்ச்சிகளை ஆதியோடந்தமாகக் கால வரையறை செய்து வகுத்தல் எம்போன்ற சாமானியர்க்குச் சாலாதாயினும், நாம் சொல்லிய கருவிகளைக் கொண்டு, செய்யவேண்டிய முறை இது என்று புத்தியுள்ள ஏனையோரை முயலச் செய்வதற்காய், எம் நாட்டு நிகழ்ச்சிகளில் முக்கியமானவைகளுள் ஒன்றுன ஆரியச் சக்கரவர்த்திகளின் அரசியல் தொடக்கத்தை எம் சிற்றறிவுக்கு எட்டியவரையில் சிறிது ஆராய்வாம்.

(தொடரும்)

முருகன் வரலாறு

புதுவதாகப் புனைந்த ஒரு தனித்தமிழ்க் கதை

திரு. பிரான்சிஸ் கிங்ஸ்பரி, பி. ஏ. எழுதியது

புனனாட்டிலே பொன்னியாற்றங்கரையிலே மணஞ்சேரி என்னும் ஊரிலே முருகன் என்னும் வேளாளன் ஒருவன் இருந்தான். இவன் நன்செய் புன்செய் இரண்டிலும் பயிர்செய்பவன். இவன் தன் முப்பதாம்ஆண்டு முடிந்தபின்னர், திருநெல்வேலிக்கருகே, பொருநையாற்றங்கரையிலுள்ள நல்லூரிலே பிறந்த வள்ளி என்னும் பெயருடைய பெண்ணை மணஞ்செய்தான். வள்ளி இருபத்தைந்தாட்டையாள். இருவரும் ஓருயிர் என்ன, இல்லறம் நடத்திவந்தனர்.

> தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
> சொற்காத்துச் சோர்விலாள் பெண்
> மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
> வளத்தக்காள் வாழ்க்கைத் துணை

எனக் குறளிற் கூறிய இயல்பெல்லாம் தன்னிடத்தே வாய்க்கப் பெற்றவள் வள்ளி. விருந்தோம்பலில் வள்ளியையும் முருகனையும் வென்றவர் யாருமில்லை. இவ்வாறு பல்லாண்டு சென்றன. ஆயினும் இவர்க்கு மக்கட்பேறுமட்டும் இல்லை.

> சொன்ன *கலையின் துறையனைத்தும் தோய்ந்தாலும்
> என்ன *பயனுடைத்தா மின்*முகத்து—முன்னங்
> குறுகுதலைக் கிண்கிணிகாற் கோமக்கள் பால்வாய்ச்
> சிறுகுதலை கேளாச் செவி.

* 'கலை' 'பயன்' 'முகம்' என்னும் மூன்று சொல்லும் தென்மொழிச் சொல்லே என்றும், தென்மொழியினின்றுமே வடமொழிக்குச் சென்றன என்றும் துணிந்தே வடமொழிச்சொல் லொன்றும் வாராத இதனிடை இச்செய்யுளைப் புகுத்தினம். கல்+ஐ= கலை, கொல்+ஐ=கொலை என்பதுபோல.

இதனுல் துயர்க்கடலுள் முழுகினு ரிருவரும். பின் ஒருவாறு தெளிந்து, "வேண்டினர் வேண்டினவற்றை வேண்டினதுபோல அளிக்கும் இறைவன் இருக்க நாம் கலங்குவது அழகோ? கடவுளையே வேண்டுவோம்" எனத் துணிந்து, பல பதிகளுக்குச் சென்று, ஆங்காங்குள்ள கோயில்களிலே எழுந்தருளியிருக்கும் இறைவனை நெஞ்சார வணங்கி, "அப்பனே, பிள்ளையில்லாமல் வருந்துகிற எங்கள் குறையை நீயே தீர்க்கவேண்டும்" என்று குறையிரந்தனர். இறைவன் அருளினுல் மகன் ஒருவனும், மகண்மா ரிருவரும் பிறந்தனர். மகனுக்குப் பரிமேலழகன் என்றும், பெண்க ளிருவருக்கும் முறையே யாழைப்பழித்தமொழியாள், மானைப்பழித்தவிழியாள் எனவும் பெயரிட்டனர். வீட்டிலே மகனை அழகன் என்றும், பெண்க ளிருவரையும் யாழ்மொழி மான்விழி என்றும் பேசுவர்.

மூவரும் நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்ந்துவந்தனர். தென்மொழியில் உள்ள நூல்களிற் கற்பவை எல்லாம் கசடறக்கற்று, கற்றவாறே ஒழுகிவந்தனர். நூல்களைக் கற்றலே கல்வியென எண்ணுது, இயற்கையின் அழகெல்லாம் கண்ணுற் கண்டு, காதாற் கேட்டு, ஏனைய புலன்களாலு முணர்ந்து, அறிவுடையாரை யடுத்து, அவரடிக்கீழ் இருந்து, செவி வாயாக, அவர் சொல்லிய அறிவுரையெல்லாம் பருகி, கடவுளடியைக் கனவிலும் மறவாது, தாய் தந்தையர் உள்ளம் உவக்க வாழ்ந்துவந்தனர். பிள்ளைகள் மூவரும் தென்மொழிவழங்கும் நாட்டில், பேரூர், சிற்றூர், பட்டி, தொட்டிகளெங்கும் போய், சொற்பொழிவு நிகழ்த்தி வந்தனர். இவர்களுள் யாழைப் பழித்த மொழியாள், தன் பெயருக்கேற்றவாறு பண்ணையும் வென்ற குரலினள். நால்வர் பாடிய பாடலும் ஆழ்வார் பன்னிருவர் பாடிய பாடலும் அவள் பாடுவதைக் கேட்பவர் தம்மையும் மறந்து, மெய்ம்மயிர் சிலிர்க்க, இரண்டு கண்களினின்றும் கண்ணீர் சிந்த, கடவுளடியொன்றையே யெண்ணி, அவரன்பில் ஆழ்ந்து, அசைவற்ற மரம்போல நிற்பர். "திருமால்" என்றும் "இறைவன்" என்றும் கடவுளர் இருவர் என்பதை மறுத்து, இரண்டு பெயரும் உடைய கடவுள் ஒருவரேயென்பது யாழைப்

பழித்தமொழியாள் துணிபு. மானைப்பழித்தவிழியாள், பெண்களும் ஆண்களைப்போலவே எல்லாவகைக் கல்வியும் நிறையக் கற்க வேண்டுமென்றும், "ஆண்கல்வி", "பெண்கல்வி" எனக் கல்வி இரண்டில்லை என்றும், பெண்கள் இருபத்தைந்தாண்டு முடிந்தபின்னரே மணஞ்செய்தல்வேண்டும் என்றும், அதுவும் தாம் விரும்பும் ஆடவரையே மணஞ்செய்தல்வேண்டும் என்றும், பெண்கள் எல்லாரும் மணஞ்செய்தல்வேண்டும் என்பது பிழை என்றும், மணஞ்செய்ய விருப்பமில்லாத பெண்கள் வாழ்நாள் எல்லாம் அப்படியிருந்துவிடுவதே தக்கது என்றும் இடைவிடாது எவருக்கும் சொல்லிவந்தாள்.

பரிமேலழகனோ, தன் பெயருடையார் ஒருவர் குறளுக்கெழுதிய உரை பெரும்பாலும் தக்க உரையேயாயினும், பற்பல இடங்களில் ஆக்கியோன் கருத்துக்கு மாறாகப் பொருள்செய்திருப்பதைத் தான் காணுந்தோறும், தன் பெயரும் பரிமேலழகனானதால், மிக வெட்கமுற்று, தன் வாழ்நாள் முடியுமுன் குறளுக்குத் தானோருரை, வள்ளுவர் கருத்துக்கிசைய எழுதவும், வள்ளுவர் கருத்துத் தன் கருத்தோடு முரணுமிடங்களில், முதலிலே வள்ளுவர் கருத்து இஃது எனத் தெளியக் கூறினபின், அது பிழையென எடுத்துக் காட்டித் தன் கருத்தையும் தெரிவிப்பதே கடனெனவும், அவ்வாறோருரை தான் எழுதத் தக்கவர் எல்லாரும் எல்லாவகை உதவியும் செய்யவேண்டுமெனவும் போனபோன இடமெல்லாம் பேசிவருவான்.

குறிப்பு.—

"முருகன் வரலாறு" என எழுதப்பட்டுள்ள இக்கட்டுரையில், தென்மொழிச்சொல்லே யன்றி பிறமொழிச்சொல் லொன்றும் இல்லையென்பது என் எண்ணம். இதில் பிறமொழிச் சொற்கள் வந்துளவேல் அவற்றைக் காட்டுவாருக்கு நன்றி கூறுவேன். இதை நான் எழுதின நோக்கம், இப்பொழுதுகூட பிறமொழிக் கலப்பின்றித் தாய்மொழியிலேயே பேசவும் எழுதவும் கூடும் என்பதை விளக்குவதற்காகவே. இவ்வாறு இங்கு நான் எழுதினேனாயினும் ஆன்றோர் செய்த நூல்களிலெல்லாம் பிறமொழிச் சொற்கள் வந்திருப்பதை அறிந்துளேனாதலால், பிறமொழிச்

சொற்களைத் தள்ளாமலே, கொள்ளலாம் என்பது என் கருத்து. ஆயினும், அவ்வாறு பிறமொழிச்சொற்கள் தாய்மொழிச்சொற்களோடு கலந்து வரும்போது, அவை தம் பழைய வியல்பு மாறித் தென்மொழியியல்பு பெற்றுத் தென்மொழிபோலவே வழங்கப்பட வேண்டும் என்க. பி. கி.

இதழ் ஆசிரியர் குறிப்புகள்

நம் "ஞாயிற்"றின் இவ் இளவேனிற் கதிரினில் வெளியாகியுள்ள கட்டுரைகள் பல துறைகளில் பெருகிய அறிவு வாய்க்கப்பெற்ற அன்பர்களால் எழுதப்பட்டனவாகும். அவர்களுக்கு எம் நன்றி உரியதாகும். இவ்வாறே தமிழ் மக்கள்தம் அறிவு வளர்ச்சிக்கு இன்றியமையாத பலப்பல அரிய பெரிய கட்டுரைகள் செந்தமிழ்ச் சீரியர்களிடமிருந்து நம் ஞாயிற்றின் கதிர்களில் நாளடைவில் வெளிவரும்.

ஃ ஃ ஃ

மிக்க இனிமையும் புதுமையும் வாய்ந்த கதை, நாடகம், செய்யுள் என்பனவற்றை எத்தகையோரும் படித்து அகமகிழ்ச்சியும் அறிவும் அடையுமாறு சிறந்த முறையில் செந்தமிழ் நடையில் எழுதுவார்க்குப் பரிசு அளிக்கப்படும். முதலில், ஆவணி புரட்டாதித் திங்கள்களுக்குரிய கார் பருவக் கதிரில் தமிழகத்திற்கேற்ற இனிய கதையொன்றை மகளிரும் ஆடவரும் மனமகிழ்ந்து வாசித்து நல்லறிவும் ஒழுக்கமும் வாழ்க்கை இன்பமும் பெறும் வண்ணம் புதுவழியால் இனிய நடையில் கட்டுரைப்பார்க்கு ரூ. 10 பரிசிலாகக் கொடுக்கப்படும். அதற்குப் பின் வருங் கதிர்களில் தமிழர்தம் வாழ்க்கை முறையை உயர்த்துதற்குரிய சிறந்த ஒழுக்கங்கள் பல அறிவுறுத்தும் நாடகம், செய்யுள் என்பனவற்றை மிகவும் புதுமையாக எழுதுவாரும் முறையே தக்க பரிசுகள் பெறுவர்.

ஃ ஃ ஃ

இலங்கை, இந்தியா, மலேயா, பர்மா முதலான இடங்களில் உள்ள தமிழ்ப் பெருமக்கள் "ஞாயிற்" றினுக்குக் கையொப்பக்காரர்களாகச் சேர்ந்து, யாம் மேற்கொண்ட நற்செயல்களில் எமக்குப் பேர் ஊக்கந் தருமாறு வேண்டுகின்றோம். இஃதேயன்றி, தமிழ் மக்களுள் செல்வராயும், தமிழ் மொழி வளர்க்குந் தகையினராயும் உள்ள பெரியோர் ஞாயிறு நிதியினுக்குத் தம் அன்புடன் போதிய பொருளுதவி செய்து, எம் நன் முயற்சிகள் ஏதும் ஊறுபாடின்றி என்றும் நடைபெறச் செய்யுமாறும் அவர்தம்மைப் பெரிதும் வேண்டுகின்றோம்.

J

74

யாழ்ப்பாணக் கலாநிலையம்

இரண்டாம் ஆண்டு விழா

ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் பதினோராம் ஆண்டு விழாவில் தலைமை ஏற்பான் இராமநாதபுரத்தைச் சார்ந்த மகிபாலன்பட்டியினின்று இவண்போந்த திருவாளர் பண்டிதமணி மு. கதிரேசச்செட்டியாரவர்கள் கலாநிலயக் கழகத்தின் இரண்டாம் ஆண்டு விழாக் கொண்டாட்டத்தின் சார்பாக ஆங்கிரச ஆண்டு பங்குனித்திங்கள் 23-ம் நாள் புதன் கிழமை பகல் 12 மணிக்குத் திருவாளர் க. நவரத்தினம், முதலியார் சு. திருச்சிற்றம்பலம், சுவாமி உருத்திரகோடீசுவரர் முதலானவர்களால் கலாநிலயத்திற்கு அழைக்கப்பட்டு, நல்விருந்தினராக மிக்க அன்போடு ஓம்பப் பெற்றார்கள். அன்று மாலை ஐந்துமணிக்குப் பண்டிதமணி அவர்கள் கழக அங்கத்தினர்களுள் சிலருடன் வீற்றிருந்தபடி ஓர் உருவப்படம் எடுக்கப் பெற்றது; அங்கத்தினர்களுக்கும் பிற தமிழ்ப்பெருமக்களுக்குஞ் சிற்றுண்டி கொடுக்கப்பட்டது; இசைப்பாட்டுகள் கருவிகளுடன் ஓதப்பட்டன; கல்வி நலம் வர்ய்க்கப்பெற்ற பெண்பாலாரும் போந்திருந்தனர்; கழகத்தின் செயலாளர் திரு க. நவரத்தினம் அவர்களால் கழகத்தின் இரண்டாம் ஆண்டு அறிக்கை வாசிக்கப்பட்டது. அதன்மேல், மூன்றாம் ஆண்டினுக்குக் கழக உத்தியோகவான்களும், நூல் ஆராய்ச்சிக்கழக அங்கத்தினர்களும், "ஞாயிறு" ஆசிரியக் கழக அங்கத்தினர்களும் தெரிவுசெய்யப்பட்டார்கள்.* பின்னர், கழகத் தலைவர் திரு சு. நடேசபிள்ளை அவர்கள், தென் இந்தியாவில் நிறுவப்பட்டுள்ள மதுரைத் தமிழ்ச்சங்கம், கரந்தைத் தமிழ்ச்சங்கம், மேலைச் சிவபுரி சன்மார்க்கசங்கம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் முதலானவைகள் தம்மேற் கொண்டுள்ள நன்முறைகளைப் பண்டிதமணி அவர்கள் நன்கறிந்தவர்களாதலால், இங்கு இக்கழகத்திற்கு இன்றியமையாததான நன்முறைகள் எவையென இவர்கள் நமக்கு எடுத்துக் காட்டவேண்டுமென விரும்பினார்கள். பண்டிதமணி அவர்கள் அவ்வண்ணமே அச்சங்கங்கள் தமிழ்வளர்ச்சி கருதிச் செய்வனவற்றுள் சிலவற்றைக் குறித்துத் தெளிவுற எடுத்துக் கூறி, இக்கழகங் கொள்ளவேண்டிய சில உயர்ந்த முறைகளையுந் தெரிவித்துவிட்டு, தாம் கலாநிலையத்தின்மீது பாடிய இனிமைபொருந்

* விவரம் பின்னர் வெளிப்படுத்தப்படும் அறிக்கைத்தாளால் அறிக.

திய வாழ்த்துப்பாக்கள் மூன்றனைப் படித்து அவைகளின் பொருளை யாவரும் அகமகிழுமாறு எடுத்து விளக்கி அமர்ந்தார்கள். அவர்களுக்குக் கழகத் தலைவர் து வந்தனோபசாரங்களுடன் அன்றைய கூட்டம் இரவு எட்டு மணிக்கு முடிவுபெறலாயிற்று.

இரண்டாநாள் வியாழக்கிழமை மாலை ஆறுமணிக்கு வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் தமிழ்ப்புலவரும், ஆங்கிலம்வல்லாரும், உத்தியோகத்தரும், வழக்கறிஞரும், பெண்பாலாரும் உட்படப் பெருந்திரளாக வந்திருந்த தமிழபிமானிகளிடையில் கலாநிலையத்தின் ஆதரவில் பண்டிதமணி கதிரேசச் செட்டியாரவர்களால் "திருவாசகம்" என்னும் பொருள்பற்றி ஒரு விரிவுரை நிகழ்த்தப்பட்டது. அதில் பண்டிதமணி அவர்கள், மணிவாசகப் பெருமான் திருவாய்மலர்ந்தருளிய பாட்டுக்கள் பிற்காலத்து ஸ்ரீ இராமலிங்கசுவாமிகளால் விதந்தெடுத்துப் பாராட்டப்படுவனவாயினவென்று கூறி, அப்பாட்டுக்களின்கண் ஆங்காங்குள்ள சொற்றொடர்களையும் அவைகளின்கண் பொதிந்துள்ள தத்துவ உண்மைகளையும் எடுத்து சம்ஸ்க்ருத வேத வாக்கியங்கள் முதலானவைகளோடு காட்டி, திருவாசகத்தின்கண் அமைந்துள்ள தெள்ளிய சொற்பொருள்களும் அவைகளின் நயங்களுமே மிகவுஞ் சிறந்தனவென்று இனிது வலியுறுத்தினர்கள். அதனால் கற்றாருங் கல்லாருந் திருவாசகத்தேன் நுகர்ந்து சாலவுங் களிப்படைந்து, எல்லாம் வல்ல ஒருபெருங் கடவுளின் வசப்படலாயினர்கள். கழகத்தலைவர் அவர்களால் பண்டிதமணியின் அரும்பெரும் பிரசங்கம் பெரிதும் வியந்து பாராட்டப்பட்டது. அதன்பின்பு, கழக அங்கத்தினர் இருவரால் பண்டிதமணி அவர்கள்தம் அருமை பெருமைகளைப்பற்றிப் பாடப்பட்ட ஆசிரியப்பாக்கள் இரண்டு இன்னிசையோடு படிக்கப்பட்டன. அவைகளைக் கேட்டாரெல்லாரும் பெருமகிழ்ச்சியில் மூழ்கினர். பண்டிதமணி அவர்கள் அப்பாட்டுக்களை வியப்புமொழிகளால் பாராட்டி, அவைகளை எற்றுக்கொண்ட தம் தகுதிகளைப்பற்றித் தக்கவாறு மொழிந்து எல்லாரையும் மகிழ்வித்தார்கள். இவற்றோடு கலாநிலையக் கழக இரண்டாம் ஆண்டுவிழா இனிது நிறைவேறுவதாயிற்று.

76

பண்டிதமணி

திரு. மு. கதிரேசச் செட்டியார் அவர்கள்

கலா நிலையத்தைப் பற்றிப் பாடிய

வாழ்த்துப் பாக்கள்

வெண்பா

காவியமுஞ் சிற்பக் கலையும் இயல்நூலும்
ஓவியமு மின்னிசையும் ஒள்ளுணர்வும் — மேவித்
திகழீழ நாட்டின் திலகமென லாமால்
புகழுங் கலாநிலையப் பொற்பு.

ஆசிரிய விருத்தம்

வளமலி யீழ நாட்டிடைத் தோன்றி
மதிவலி படைத்தநல் லறிஞர்
உளமலி யுவகை பெறவுய ருணர்வா
மொளிதிகழ் ஞாயிறென் றுவந்து
கொளமலி பருவக் கதிரைநன் கீன்று
கோதிலாத் தமிழ்மொழி தழைப்பத்
தளமலி யுலகோர்க் குதவுவா னுற்ற
தகுகலா நிலையம்வா ழியவே.

கலி விருத்தம்

வாழ்க செந்தமிழ் மன்னிய நல்லறம்
வாழ்க அன்பு மலிதரு வாழ்க்கையே
வாழ்க வொண்கலை மன்னு நிலையமே
வாழ்க ஈழ வளஞ்செறி நாடரோ.

77

மதிப்புரை

மாதர்மாலிகை—இது திருக்கோணமலை மாதர் ஐக்கிய சங்கத்தினரால் ஆண்டிற்கொரு முறை வெளியிடப்படுவதாகும். உலகில் இதுபோது பல தேசங்களில் பெண்பாலார் இயக்கந் தோன்றிப் பல நன்மைகள் செய்கின்றமைபோலவே, திருக் கோணமலையிலும் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ்ப் பெண்கள் இயக்கந் தோன்றி, ஆண்டுள்ள பெண்பாலார் உயர்வு கருதி முயன்றுவருவது இலங்கைத் தேசத்திற்குச் சிறப்பைத் தருவதாகும். இவ்வாண்டு வெளியீட்டில் இலங்கைத் தமிழ் மகளி ரின் முன்னேற்றத்தைப் பற்றிய கட்டுரைகள் இரண்டு, இரு மகளி ரால் எழுதப்பட்டிருக்கின்றன. அவைகள் பெண்பாலார் இக் காலத்திற் கேற்பக் கடைப்பிடிக்க வேண்டிய நன்முறைகளைக் கொண்டிருக்கின்றன. அக்கட்டுரையாளர்களாகிய இரு பெண்மணி களும் சங்கத்தின் பரிசுகளைப் பெறுவாராயினர்கள். இத்தகைய் நன்முயற்சிகளுக்குத் திருமகள் தையல்நாயகி சுப்பிரமணியம் காரணமாவர். அவ்வம்மையாரின் நல் நோக்கங்கள் மகளிர் ஆட வரால் பெரிதும் பாராட்டற் பாலனவாம்.

Printed at The Saiva Prakasa Press, Jaffna,
and Published by Mr. K. Navaratnam,
Secretary, The Kala Nilayam, Jaffna.

78

சேர். பொன். இராமநாதன் அவர்கள்
இயற்றிய அரிய தமிழ் நூல்கள்

செந்தமிழ் இலக்கணம்

கலிக்கோ 3–00

மட்டை 2–50

ஸ்ரீமத் பகவத்கீதை

(விளக்கவுரையுடன்) 2–00

விற்குமிடம்:–

இராமநாதக் கல்லூரிப்புத்தகசாலை,

சுன்னுகம்

வெளியாகிவிட்டது! வெளியாகிவிட்டது!!

முதலியார்

செ. இராசநாயகம் அவர்கள்

எழுதிய

யாழ்ப்பாணச் சரித்திரம்

தற்கால ஆராய்ச்சிமுறையில் எழுதப்பட்ட

சிறந்த சரித்திர நூல்.

மாணவர்க்குப் பெரிதும் உபயோகமுடையது.

விலை ரூபா 1–8–0.

''ஞாயிறு'' பிரசுராலயம்,

கலா நிலையம்,

யாழ்ப்பாணம்

79

எமது பிரசுரங்கள்

வாசக புத்தகங்கள்

செந்தமிழ் வாசகம் Book 1
செந்தமிழ் வாசகம் Book 2
செந்தமிழ் வாசகம் Book 3
செந்தமிழ் வாசகம் Book 4
செந்தமிழ் வாசகம் Book 5
பொற்கால வாசகம் Book 1
பொற்கால வாசகம் Book 2
பொற்கால வாசகம் Book 3

இலக்கணம்

சிறுவர் சிற்றிலக்கணம்
பொற்காலத் தமிழ் இலக்கணம்

கணிதம்

பொற்காலக் கணிதம் Book 1
பொற்காலக் கணிதம் Book 2
பொற்காலக் கணிதம் Book 3
பொற்காலக் கணிதம் Book 4

நீதி புகட்டக்கூடிய நூல்கள்

அறநெறி விளக்கம் கதிர் 1
அறநெறி விளக்கம் கதிர் 2
அறநெறி விளக்கம் கதிர் 3
சன்மார்க்க தீபம் Book 1
சன்மார்க்க தீபம் Book 2
சன்மார்க்க தீபம் Book 3

உபவாசக புத்தகங்கள்

நல்ல எறும்பு
பொன் நாணயம்
நல்ல குழந்தை
மூன்று சிறு கதைகள்
பரந்தாமன்
சத்திய நாராயணன்
சிவஞானம்
திருக்கண்ணப்பன்
குமணன்
அரிச்சந்திரன்
பாண்டவர் பாலலீலை
பாண்டவர் வனவாசம்
பாண்டவ விஜயம்
சிந்து பாத்து நாவிகன்
இராஜாராம் மோகனரீாய்
துர்க்காவதி
நெடுமாறன்
புலவர் கதை Book 1
புலவர் கதை Book 2
பசுபாவன்
சங்க நூல்

New Era English Selections for Higher Forms.

விலை விபரங்களுக்கு
எமது புத்தக விலைப்பட்டிக்கு (Catalogue) எழுதவும்.

கே. பழனியாண்டிப்பிள்ளை கம்பெனி,
திருவல்லிக்கேணி, சென்னை.

யாழ்ப்பாணம்
சைவப்பிரகாச யந்திரசாலை

இங்கு பலதிறப்பட்ட

நூல்கள்
வெளியீடுகள்
துண்டுப்பிரசுரங்கள்
தனி இதழ் விளம்பரங்கள்
அழைப்புப்பத்திரங்கள்
பெரிய எழுத்துச் சுவர் விளம்பரங்கள்

முதலியன

மிகவும் அழகுபெற சகாயமான விகிதத்திற்கு
அச்சிட்டுக் கொடுக்கப்படும்.

புத்தகங்கள்
பொன் கிலிட் இட்டு
நேர்த்தியாகக் கட்டிக் கொடுக்கப்படும்.

எங்களிடம் வேலை கொடுப்பவர்
திருப்தி யடையும் வண்ணம் நடப்பதே
எங்கள் நோக்கமாகும்.

ஒருமுறை பரீட்சித்தால்
பலமுறை விரும்புவீர்கள்.